





We Shine Academy™


guiding you to get through


# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 2019

*We Are Here..!! To Guide You..!!*








# We Shine Study Circle

## கவலைகள் ஒருபோதும்

## வெற்றியை தருவதில்லை

## முயற்சிகளே…

Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone : 8939144344,8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


04 - 12 தமிழக நிகழ்வுகள்



12 - 40 இந்திய நிகழ்வுகள்

40 - 53 உலக நிகழ்வுகள்

53 - 60 விளையாட்டு நிகழ்வுகள்

60 - 67 அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்



67 - 75 விருதுகள்

75 - 80 நியமனங்கள்

80 - 86 பொருளாதார நிகழ்வுகள்

86 - 88 முக்கிய தினங்கள்

88 - 89 புத் தகங்கள்






# தமிழக நிகழ்வுகள்

1. தமிழகத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை எங்கு அமையவுள்ளது?

**விடை:** மதுரை

**விளக்கம்:**

1. தோப்பூரில் (மதுரை) ரூ.1264 கோடி செலவில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கான அடிக்கல் நாட்டு விழா 27-ஜனவரி 2019-யில் நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார்.
2. இம்மருத்துவமனையில் 750 படுக்கை வசதி, 100 எம்.பி.பி.எஸ் (MBBS) கல்வி இடங்கள் உள்பட பல்வேறு வசதிகள் வழங்கப்படுகிறது.

2. அண்மையில், "2018 – 2023" தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கையை அறிமுகம் செய்த மாநில அரசு எது?

**விடை:** தமிழ்நாடு

**விளக்கம்:**

1. ஜன.19 அன்று தமிழ்நாட்டில் புதிய தொழில் மற்றும் புத்தாக்கத்துக்கான கொள்கையை மாநில அரசு வெளியிட்டுள்ளது. இந்தக் கொள்கையின்படி, உலகளாவிய புத்தாக்க மையமாகவும், புதிய தொழில்முனைவோர்களுக்கான மிகச்சிறந்த தேர்விடமாகவும் தமிழ்நாட்டை வரும் 2023ம் ஆண்டுக்குள் உருவாக்குவதும் இலக்காகும். இப்புதிய கொள்கையின்படி, துளிர்நிறுவன சூழலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் குறைந்தபட்சம் 1 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.
2. இக்கொள்கையை அமல்படுத்துவதற்காக, ரூ.250 கோடி நிதியுடன் "தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிதியத்தை" தமிழ்நாடு அரசு அமைக்கவுள்ளது. தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ள தொடக்க மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் முதலீடு செய்வதற்காக SEBI இல் பதிவு செய்யப்பட்ட பிற மாற்று முதலீட்டு நிதியங்களில் இந்நிதியானது முதலீடு செய்யப்படும்.

3. எந்த சட்டத்தின் படி தமிழகத்தில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டது?

**விடை:** சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986

**விளக்கம்:**

1. சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986ன் கீழ், தமிழகத்தில் ஜனவரி 01, 2019 முதல் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடைவிதிக்கும் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.
2. இதற்கான அரசாணை ஜூன் 5, 2018ல் வெளியிடப்பட்டது. முதல் முதலில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதித்த மாநிலம் - சிக்கிம் ஆகும்.

4. ‘‘சாஸ்ட்ரா – 2019’’ (Shaastra – 2019) என்னும் தொழில்நுட்ப கண்காட்சி மற்றும் மாநாட்டை நடத்திய அமைப்பு எது?

**விடை:** IIT – சென்னை

**விளக்கம்:**

1. சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப கழகத்தின் (IIT) சார்பில் ‘‘சாஸ்ட்ரா – 2019’’ என்ற பெயரில் தொழில்நுட்பக் கண்காட்சி மற்றும் மாநாடு ஜனவரி 3 முதல் ஜனவரி 6 வரை நடைபெற உள்ளது.

5. தமிழகத்தில், ‘‘வாழ்விட மேம்பாட்டு திட்டம்’’ எந்த வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது?

**விடை:** உலக வங்கி

**விளக்கம்:**

1. சென்னை, திருவள்ளுர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள குடிசைகளை மேம்படுத்த ‘வாழ்விட மேம்பாட்டு திட்டம்’ என்னும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
2. இத்திட்டமானது உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

6. தமிழ்நாடு அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கழகத்தின் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை:** மயில்சாமி அண்ணாதுரை

**விளக்கம்:**

1. தமிழ்நாடு அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கழகத்தின் துணைத் தலைவராக ‘‘மயில்சாமி அண்ணாதுரையை’’ தமிழக அரசு நியமித்துள்ளது.

2. இவர் இஸ்ரோவின் சந்திராயன் I மற்றும் மங்கல்யான் போன்ற செயற்கைகோள் திட்டத்தில் பணிபுரிந்துள்ளார்.

7. இந்தியாவின் முதல் அதிவேக விரைவு இரயிலின் பெயர் என்ன?

**விடை:** தேஜாஸ்

**விளக்கம்:**

1. இந்தியாவின் முதல் அதிவேக விரைவு இரயில் சேவை தேஜாஸ்(Tejas). இது 200 கி.மீ வேகத்தில் செல்லக் கூடியது.
2. இந்த இரயில் சேவையானது தமிழகத்தில் சென்னை- மதுரை வழித்தடத்தில் ஜனவரி 27 முதல், பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கப்பட உள்ளது.

8. உலக கழிப்பறை தின போட்டியில் முன்னணியில் உள்ள மாவட்டம் எது? மற்றும் தமிழகத்தில் முன்னணியில் உள்ள மாவட்டம் எது?

**விடை:** பங்குரா (மேற்கு வங்காளம்), சேலம் (தமிழ்நாடு)

**விளக்கம்:**

1. இந்தியாவின் முதல் 12 மாவட்டங்கள்
2. குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகமானது 10 நாட்கள் நடைபெறும் (நவம்பர் 09 முதல் 19) போட்டியினை உலக கழிப்பறைத் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்திருந்தது.
3. இந்த அமைச்சகமானது முதல் பத்து இடங்களைப் பிடித்த 12 மாவட்டங்களின் (கூட்டுவெற்றியாளர்கள் உட்பட) பட்டியலை வெளியிட்டது.

| | |
|---|---|
| 1. Bankura, West Bengal | 2. Ganderbal, Jammu and Kashmir |
| 3. Ghaziabad, Uttar Pradesh | 4. Hazaribagh, Jharkhand |
| 5. Jehanabad, Bihar | 6. Kandhamal, Odisha |
| 7. Kodagu, Karnataka | 8. Lohardaca, Jharkhand |
| 9. Murshidabad, West Bengal | 10. Salem, Tamil Nadu |
| 11.Sangli, Maharashtra | 12. South West Khasi Hills, Meghalaya |

4. தமிழ்நாட்டின் சேலம் மாவட்டமானது உலக கழிப்பறை தினப் போட்டியில் முன்னணி 12 மாவட்டங்களில் இடம் பிடித்துள்ளது.

9. தமிழகத்தின் 33வது மாவட்டம் (கள்ளக்குறிச்சி) எந்த மாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்டது?

**விடை:** விழுப்புரம்

**விளக்கம்:**

1. தமிழகத்தின் 33வது மாவட்டமாக கள்ளக்குறிச்சி அறிவிக்கப்பட்டது இது விழுப்புரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டது.
2. தற்போது தமிழகத்தின் மிகப்பெரிய மாவட்டம் திருநெல்வேலி ஆகும்.
3. 31வது மாவட்டமாக அரியலூரும். 32வது மாவட்டமாக திருப்பூரும் பிரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

10. ‘அகில பாரத கவி சம்மேளம்’ என்ற திருவிழா எங்கு நடைபெற்றது?

**விடை:** சென்னை

**விளக்கம்:**

1. மதநல்லிணக்கத்தை உருவாக்குவதற்காகவும், இந்தியாவில் ஒருமைப்பாடு ஏற்படுவதற்காகவும் அனைத்து மொழி கவிஞர்களும் பங்கேற்கும் ‘அகில பாரத கவி சம்மேளம்’ சென்னையில் நடைபெற்றது.
2. முதன் முதலாக சென்னை அகில இந்திய வானொலி அமைப்பு இத்திருவிழாவை நடத்துகிறது.

11. ‘‘போலீஸ் இ-கண்’’ (Police E-Eye) என்ற செயலியை அறிமுகப்படுத்திய அமைப்பு எது?

**விடை:** கோயம்புத்தூர் நகர போக்குவரத்து காவல்துறை

**விளக்கம்:**

1. சாலை விதிகளை மீறி செயல்படுபவர்களை பற்றி புகார் அளிக்க உதவுவதற்காக, ‘‘போலீஸ் இ-கண்’’ (Police E-Eye App) என்ற செயலியை கோயம்புத்தூர் நகர போக்குவரத்து காவல்துறை அறிமுகப்படுத்தியுள்ளது.
2. இச்செயலியை ஏவியன் இன்ஃபோடெக் (Aveon Infotech Ltd) என்ற நிறுவனம் தயாரித்துள்ளது.

12. தமிழகத்தில் ‘‘நாட்டுக் கோழி வழங்கும் திட்டம்’’ தொடங்கப்பட்ட நாள் எது?

**விடை:** ஜனவரி 10, 2019

**விளக்கம்:**

1. கிராமப்புறங்களில் பெண் தொழில் முனைவோரை உருவாக்கும் வகையில் ‘‘நாட்டுக் கோழிகள் வழங்கும் திட்டத்தை’’ தமிழக முதலமைச்சர் ஜனவரி 10, 2019 அன்று தொடங்கி வைத்துள்ளார்.

2. ''கோழி அபிவிருத்தி திட்டத்தின்'' கீழ், சுமார் 77 ஆயிரம் கிராமப்புற பெண் பயனாளிகளுக்கு, தலா 50 நாட்டு கோழிகள் கூண்டுடன் வழங்கப்படுகிறது.

13. நீர், நில மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசானது யாருடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது?

**விடை:** கர்னெல் பல்கலைக்கழகம் (அமெரிக்கா)

**விளக்கம்:**

1. உலக வங்கி நிதி உதவியுடன், தமிழகத்தில் நீர், நில மேலாண்மை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த அமெரிக்க கர்னெல் பல்கலைக்கழகத்துடன் தமிழக அரசானது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

14. ''பெண் குழந்தைகளை பாதுகாப்போம் மற்றும் கற்பிப்போம்'' என்ற திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய தமிழக மாவட்டம் எது?

**விடை:** திருவண்ணாமலை

**விளக்கம்:**

1. Beti Bachao Beti padhao (பெண் குழந்தைகளை பாதுகாப்போம் மற்றும் கற்பிப்போம்) என்ற திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய மாவட்டமாக திருவண்ணாமலை (தமிழகம்) தேர்ந்தெடுக்கபட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.
2. ''பேட்டி பச்சோ பேட்டி பதோ'' அறிமுகப்படுத்தப்பட்ட நாள் - 22 ஜனவரி 2015

15. கேரள பிரவாசி பாரதிய திவாஸ் அமைப்பால் நடப்பாண்டின் சிறந்த மனிதருக்கான விருது யாருக்கு வழங்கப்படவுள்ளது?

**விடை:** மு.க.ஸ்டாலின் (திமுக தலைவர்)

**விளக்கம்:**

1. கேரள பிரவாசி பாரதிய திவாஸ் அமைப்பு, நடப்பாண்டின் சிறந்த மனிதருக்கான விருதுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் (திமுக) தலைவர் மு.க. ஸ்டாலினை தேர்வு செய்துள்ளது.

16. தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டம் (100 நாள் வேலை) எத்தனை நாட்களாக நீட்டிக்கப்பட்டுள்ளது?

**விடை:** 150

**விளக்கம்:**

1. ‘கஜா’ புயலால் பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களில் 133 ஒன்றியங்களில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டம் என்கிற 100 நாள் வேலை, 150 நாட்களாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

17. 45வது இந்திய சுற்றுலா & தொழில் பொருட்காட்சியின் கருப்பொருள் என்ன?

**விடை:** “Tourism and the Digital Transformation”

**விளக்கம்:**

1. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சென்னை தீவுத்திடலில் 45வது இந்திய சுற்றுலா & தொழில் பொருட்காட்சி ஜனவரி 9 அன்று தொடங்கியுள்ளது. இதன் கருப்பொருள் “Tourism and the Digital Transformation”.

18. காசநோயால் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களின் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ள மாநிலம் எது?

**விடை:** உத்திரப் பிரதேசம்

**விளக்கம்:**

1. காசநோயால் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களின் பட்டியலை (2019) மத்திய அரசு வெளியிட்டுள்ளது. இதில் உத்திரப் பிரதேசம் முதலிடத்தில் உள்ளது.
2. இப்பட்டியலில் தமிழகம் 6வது இடத்தில் உள்ளது.

19. UGC விரிவாக்கம் என்ன?

**விடை:** University Grants Commission

**விளக்கம்:**

1. மாற்றுத்திறனாளிகள் தேர்வுக்குச் செல்லும்போது, சொந்த உதவியாளரை (ஸ்கிரைப்) அழைத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான புதிய வழிகாட்டுதலை UGC(University Grants Commission - பல்கலைக்கழக மானியக் குழு) வெளியிட்டுள்ளது.

20. எம்ஜிஆர் நூற்றாண்டு வளைவு எங்கு திறக்கப்பட்டுள்ளது?

**விடை:** மெரினாவில் உள்ள காமராஜர் சாலை (சென்னை)

**விளக்கம்:**

1. சென்னை மெரினாவில் உள்ள காமராஜர் சாலையில் அமைக்கப்பட்டிருந்த எம்ஜிஆர் நூற்றாண்டு வளைவு, விழா எதுவுமின்றி இன்று(ஜனவரி 17, 2019) திறக்கப்பட்டுள்ளது.

21. எந்த பிரதான சாலைக்கு எம்.ஜி.ஆரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது?

**விடை:** சேலம் - ஓமலூர்

**விளக்கம்:**

1. தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி, சேலம் - ஓமலூர் பிரதான சாலைக்கு, மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களின் பெயரை சூட்டியுள்ளார்.

22. தமிழகத்தில், இராணுவ தளவாட கண்டுபிடிப்புக்கான கேந்திரம் எங்கு அமைய உள்ளது?

**விடை:** கோயம்புத்தூர்

**விளக்கம்:**

1. சென்னை, ஓசூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி ஆகிய இடங்களில் உள்ள இராணுவ தளவாட தொழிற்சாலைகளை இணைக்கும் வகையில் “இராணுவ தொழில் வழித்தடம்” திருச்சியிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது.
2. கோயம்புத்தூரில் இராணுவ தளவாட கண்டுபிடிப்புகளுக்கான கேந்திரமும் தொடங்கப்பட உள்ளது.

23. தமிழ்நாட்டில் முதல்முறையாக, உலக முதலீட்டாளர்கள் மாநாடு எப்போது நடத்தப்பட்டது?

**விடை:** 2015

**விளக்கம்:**

1. தமிழ்நாட்டில், சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில், 2-வது உலக முதலீட்டாளர்கள் மாநாடு – 2019 (Tamil Nadu Global Investor Meet 2019), ஜனவரி 23 அன்று தொடங்குகிறது.
2. தமிழ்நாட்டில் 2015 ஆம் ஆண்டு முதன் முறையாக ‘‘உலக முதலீட்டாளர்கள் மாநாடு’’ நடத்தப்பட்டது.

24. அரசு பள்ளிகளில் எல்கேஜி, யுகேஜி வகுப்புகளை தொடங்கியுள்ள இந்தியாவின் முதல் மாநிலம் எது?

**விடை:** தமிழகம்

**விளக்கம்:**

1. இந்தியாவிலேயே முதன்முறையாக, தமிழகத்தில் அரசு பள்ளிகளில் எல்கேஜி, யுகேஜி வகுப்புகள் தமிழக முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
2. முதற்கட்டமாக, சென்னை எழும்பூரில் செயல்படும் மாநில மாதிரி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் எல்கேஜி, யுகேஜி வகுப்புகள் தொடங்கப்பட்டது.

25. மாணவர் காவல்படை திட்டம் எப்பொழுது அறிமுகம் செய்யப்பட்டது?

**விடை:** 2018 ஜூலை

**விளக்கம்:**

1. பள்ளி மாணவர்களை நல்வழிப்படுத்தும் நோக்கத்தில், பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களிடம் விழிப்புணர்வையும் நல்ல சிந்தனையையும் வளர்க்கும் வகையில் தமிழக காவல் துறை மற்றும் பள்ளிக் கல்வித்துறை இணைந்து, தமிழகத்தில் முதன் முதலாக சென்னையில் ‘‘மாணவர் காவல்படையை’’ தொடங்கியுள்ளது.
2. மாணவர் காவல்படை திட்டம் மத்திய உள்துறை அமைச்சகத்தினால் 2018 ஜூலை-ல் அறிமுகம் செய்யப்பட்டது.

26. இந்தியாவின் முதல் “DRONE” மூலம் வானில் பறக்கும் ‘‘ஏர் டாக்சி’’-யை அறிமுகப்படுத்திய குழுவின் பெயர்?

**விடை:** தக்ஷா மாணவர் குழு

**விளக்கம்:**

1. இந்தியாவில் முதன் முறையாக “DRONE” மூலம் வானில் பறக்கும் ‘‘ஏர் டாக்சி’’ யை (India’s First Air taxi, Drone Air Taxi) அண்ணா பல்கலைக்கழகத்தை சேர்ந்த ‘‘தக்ஷா மாணவர் குழு’’ தயாரித்துள்ளது.
2. இந்த ‘‘ஏர் ஆம்புலன்ஸ்’’ உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையின் போது பயன்படுத்தப்படும்.

27. சென்னை பெட்ரோலியம் கார்பரேஷனின், மிகப்பெரிய பெட்ரோலிய சுத்திகரிப்பு மையம் அமையவுள்ள இடம் எது?

**விடை:** நாகப்பட்டினம்

**விளக்கம்:**

1. சென்னையில் உள்ள நந்தம்பாக்கத்தில் நடைபெற்ற தமிழக அரசின் 2வது உலக முதலீட்டாளர் மாநாட்டில் சுமார் 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளது.
2. இதன் மதிப்பு – 3 இலட்சத்து 431 கோடி ஆகும். இதன் பகுதியாக நாகப்பட்டினத்தில் 27,000 கோடி முதலீட்டில் மிகப்பெரிய பெட்ரோலியம் சுத்திகரிப்பு மையம், சென்னை பெட்ரோலியம் கார்பரேஷனால் அமைக்கப்பட உள்ளது.

# இந்திய நிகழ்வுகள்

1. 42வது இந்திய சமூக அறிவியல் மாநாடு நடந்த இடம் எது?

**விடை:** புவனேசுவர்

**விளக்கம்:**

1. டிச.27 அன்று ஒடிசா மாநிலம் புவனேசுவரில் உள்ள KIIT பல்கலைக்கழக வளாகத்தில், மணிப்பூர் ஆளுநர் Dr. நஜ்மா ஹெப்துல்லா, 42வது இந்திய சமூக அறிவியல் மாநாட்டை (ISSC – 2018) தொடங்கி வைத்தார். “Human Future in Digital Era” என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும். இந்திய சமூக அறிவியல் அகாடமியால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ISSC, சமூக விஞ்ஞானிகள் ஒன்றுகூடும் ஓர் ஆண்டு சந்திப்பாகும்.

2. எந்த IPC பிரிவின் கீழ், பாலியல் துன்புறுத்தல் வழக்குகளை திருநங்கைகள் தாக்கல் செய்யலாம்?

**விடை:** பிரிவு 354A

**விளக்கம்:**

1. பாலியல் துன்புறுத்தல் குறித்த புகார்களை திருநங்கையர்கள் தாக்கல் செய்ய இந்திய தண்டனை சட்டம் 354A பிரிவினை பயன்படுத்தலாம் என தில்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. IPC 354A பிரிவானது பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் துன்புறுத்தலுக்கான தண்டனை குறித்து

கூறுகிறது. உச்சநீதிமன்றத்தின் தேசிய சட்ட சேவைகள் ஆணைய 2014ம் ஆண்டின் தீர்ப்பின் பாலின நடுநிலைத்தன்மை பற்றியும் அந்த அமர்வு மேற்கோளிட்டு காட்டியது.

3. CSC மூலம் புகாரளிக்க எந்த கட்டணமில்லா உதவி சேவையை NHRC தொடங்கியுள்ளது?

**விடை:** 14433

**விளக்கம்:**

1. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC) தலைவரான நீதிபதி (ஓய்வு) HL தட்டு, சமீபத்தில், புது தில்லியில் உள்ள மனவ் அதிகார் பவனில், பொது சேவை மையம் (CSC) மூலம் புகாரளிக்க உதவும் '14433' என்ற ஓர் இலவச உதவி எண் சேவையை அறிமுகப்படுத்தினார்.
2. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் வேலை நேரங்களில் மட்டுமே இந்தக் கட்டணமில்லா சேவை கிடைக்கும். ஒரு மாவட்டத்துக்கு குறைந்தபட்சம் ஒரு சேவை மையம் என மொத்தம் 750 பொது சேவை மையங்களை NHRC தெரிவு செய்துள்ளது. இச்சேவையானது அனைத்து பொது சேவை மையங்களுக்கும் விரிவாக்கப்படும்.

4. இந்தியாவுடனான பரந்த வியாபார பின்னணியில் 'செயல்திறன்மிகு முதலீடு மற்றும் சமூக மேம்பாட்டுக்கான ஆண்டு' என 2019ம் ஆண்டை அறிவித்துள்ள நாடு எது?

**விடை:** உஸ்பெகிஸ்தான்

**விளக்கம்:**

1. உஸ்பெகிஸ்தான் அதிபர் சவ்காத் மிர்சியோயெவ் சமீபத்தில் அந்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக இந்தியாவிலிருந்து செய்யப்படும் முதலீடுகளின் பின்னணியில் 'செயல்திறன் மிகு முதலீடு மற்றும் சமூக மேம்பாட்டுக்கான ஆண்டு – Year of Active Investment and Social Development' என 2019ம் ஆண்டை அறிவித்தார்.

5. புதிய பொறியியல் கல்லூரிகள் உருவாக்குவதை 2020ம் ஆண்டு முதல் நிறுத்துமாறு AICTE-க்கு அறிவுறுத்திய அரசாங்கக் குழுவின் தலைவர் யார்?

**விடை:** BVR மோகன் ரெட்டி

**விளக்கம்:**

1. IIT ஹைதராபாத் தலைவர் BVR மோகன் ரெட்டி தலைமையிலான அரசாங்கக் குழு, 2020ம் ஆண்டிலிருந்து புதிய பொறியியல் கல்லூரிகள் உருவாக்குவதை நிறுத்தி, ஒவ்வோர் இரண்டு ஆண்டுக்கும் ஒருமுறை புதியதை உருவாக்குவதற்கான திறனை ஆய்வுசெய்வதற்கு அனைத்து இந்திய தொழில்நுட்பக் கல்விக்குழுவுக்கு (AICTE) அறிவுதை வழங்கியுள்ளது. இயந்திரம், மின், கட்டுமானம் மற்றும் மின்னணு போன்ற பாரம்பரிய பொறியியல் துறைகளில் கூடுதலாக எந்த இடத்தையும் அனுமதிக்கக்கூடாது என்றும், பாரம்பரிய துறைகளின் தற்போதைய திறனை மேம்படுத்துவதற்கு, புதிய தொழில்நுட்பங்களை கொண்டுவர ஊக்கமளிக்க வேண்டும் என்றும் அக்குழு பரிந்துரைத்துள்ளது.

6. விண்வெளி அறிவியல் நடவடிக்கைகளில் மாணாக்கரை ஈடுபடுத்துவதற்கு, எத்திட்டத்தை ISRO தொடங்கியுள்ளது?

**விடை:** சம்வாத் (Samwad)

**விளக்கம்:**

1. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது தனது வெளிக்கள திட்டத்தின் ஒருபகுதியாக மாணவர்களுடன் சம்வாத் எனும் திட்டத்தை சமீபத்தில் தொடங்கியது. இந்தத் திட்டத்தின் கீழ், நாடு முழுவதுமுள்ள இளையோரை விண்வெளி அறிவியல் நடவடிக்கைகளில் ISRO ஈடுபடுத்தும்.

7. எந்த மாநிலத்தின் பெண்கள், பாலின சமத்துவத்தை தூக்கி நிறுத்துவதற்காக சமீபத்தில் 620 கி.மீ., நீள ‘சுவர்’ உருவாக்கினர்?

**விடை:** கேரளா

**விளக்கம்:**

1. ஜன.1 அன்று கேரள மாநிலத்தின் வடக்கே காசர்கோடிலிருந்து தெற்கே திருவனந்தபுரம் வரை 620 கி.மீ., தூரத்திற்கு ஆளும் இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைமையின் கீழ், சுமார் 50 லட்சம் பெண்கள் கைகோர்த்து மதில்சுவர் போல் நின்றனர். உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி சபரி மலையில் பெண்களை அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தி, விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக இந்த மதில்சுவர் போராட்டம் நடந்தது.

8. எம்மாநிலத்தில் உஜ்வாலா சானிடரி நாப்கின் திட்டத்தை நடுவணரசு தொடங்கியுள்ளது?

**விடை:** ஒடிசா

**விளக்கம்:**

1. மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் சமீபத்தில் புவனேசுவர் நகரத்தில் உஜ்வாலா சானிட்டரி நாப்கின் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இந்தப்புதிய திட்டத்தின் கீழ், மாநிலத்தின் 93 தொகுதிகளை உள்ளடக்கிய பொது சேவை மையங்களில், ரூபாய் 2.94 கோடி செலவில் 100 உற்பத்தி அலகுகள் அமைக்கப்படும். ஒவ்வோர் உற்பத்தி அலகிலும் 5.6 உஜ்வாலா பயனாளிகள் பணியமர்த்தப்படுவார்கள். பெண்கள் சானிட்டரி நாப்கின் தயாரிப்பு மற்றும் விற்பனை குறித்த பயிற்சிகள் முதலில் வழங்கப்படும்.

9. 106வது இந்திய அறிவியல் மாநாட்டின் கருப்பொருள் என்ன?

**விடை:** Future India: Science & Technology

**விளக்கம்:**

1. பஞ்சாப் மாநிலம் ஜலந்தரின் லவ்லி புரொபஷனல் பல்கலைக்கழகத்தில், ஜன.3 முதல் 7 வரை நடைபெறவுள்ள இந்திய அறிவியல் மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். இந்த ஆண்டுக்கான மாநாட்டுக்கு “எதிர்கால இந்தியா: அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்” என்பது கருப்பொருளாக அமைக்கப்பட்டுள்ளது. 5 நாள் நடக்கும் இம்மாநாட்டில், அறிவியல் & தொழில்நுட்பம் சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கருத்தரங்கங்களும், நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

10. வீர் சவார்க்கர் பன்னாட்டு விமான நிலையம் அண்மையில் அங்கீகாரம் பெற்ற குடிவரவு சோதனைச் சாவடியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது எந்த யூனியன் பிரதேசத்தில் உள்ளது?

**விடை:** அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள்

**விளக்கம்:**

1. போர்ட் பிளேயரில் உள்ள வீர சாவர்க்கர் பன்னாட்டு விமான நிலையமானது செல்லுபடியாகும் பயண ஆவணங்களுடன் இந்தியாவிற்குள் நுழைவதற்கு/வெளியேறுவதற்கான அங்கீகாரம் பெற்ற குடிவரவு சோதனைச்

சாவடியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது கடவுச்சீட்டின் விதி 3இன் உப விதி (b) (இந்தியாவிற்குள் நுழைய) (1950) விதிகளின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளது.

11. விவசாயிகளின் துயரத்துக்கு தீர்வுகாண்பதற்காக ‘கிருஷக் பந்து’ என்ற திட்டத்தை அறிமுகம் செய்துள்ள மாநிலம் எது?

**விடை:** மேற்கு வங்கம்

**விளக்கம்:**

1. விவசாயிகள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக மேற்கு வங்க மாநில அரசாங்கம் ‘கிருஷக் பந்து’ என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இரண்டு தவணைகளில் ஒரு ஏக்கருக்கு 5000 ரூபாய் ஆண்டு நிதி உதவியை மாநில அரசு அளிக்கும். ஒன்று கரீப் பருவத்திலும், ஒன்று ராபி பருவத்திலும் வழங்கப்படும்.

12. தேசிய தொழில்முனைவு விருதுகளின் 3வது பதிப்பை வழங்கிய மத்திய அமைச்சகம் எது?

**விடை:** திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம்

**விளக்கம்:**

1. ஜனவரி 4 அன்று புது தில்லியில், தேசிய தொழில்முனைவு விருதுகளின் 3வது பதிப்பை மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம் வழங்கியது. இவ்விருதுகள், சிறந்த இளம் முதல் - தலைமுறை தொழில்முனைவோர் மற்றும் தொழில்முனைவு சூழலைக் கட்டமைப்பதில் மிகுந்த பங்களிப்பு செய்தவர்களை அடையாளங்கண்டு அவர்களை கௌரவிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. இந்த ஆண்டு, மொத்தம் 43 விருதுகள் வழங்கப்படவுள்ளன.

13. யாருக்கு 2017ம் ஆண்டுக்கான ISRS சிறப்பு தேசிய ஜியோஸ்பேசியல் விருது (LTA விருது) வழங்கப்பட்டுள்ளது?

**விடை:** ஜெயந்த குமார் கோஷ்

**விளக்கம்:**

1. அகமதாபாத்தில் உள்ள விண்வெளிப் பயன்பாடுகள் மையத்தில் ரூர்கேலா ஐஐடியைச் சேர்ந்த பேராசிரியர். ஜெயந்த குமார் கோஷுக்கு, 2017ம் ஆண்டுக்கான ISRS சிறப்பு தேசிய ஜியோஸ் பேசியல் விருது (வாழ்நாள்

சாதனையாளர் விருது) வழங்கப்பட்டது. புவியிடஞ் சார்ந்த அறிவியல் மற்றும் பயன்பாடுகளின் வளர்ச்சிக்கான அவரது பங்களிப்புக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. ஒரு பதக்கம் மற்றும் ரூ.1 லட்சம் ரொக்கப்பரிசை உள்ளடக்கியது இவ்விருது.

14. 2019 இந்திய பனோரமா திரைப்பட விழா நடைபெறும் இடம் எது?

**விடை:** புது தில்லி

**விளக்கம்:**

1. 2019ம் ஆண்டுக்கான இந்திய பனோரமா திரைப்பட விழா, புது தில்லியிலுள்ள சிறி அரங்கில் ஜன.4-13 வரை நடைபெறவுள்ளது. தகவல் & ஒலிபரப்பு அமைச்சகத்தின் திரைப்பட விழாக்கள் இயக்குநரகம் இவ்விழாவிற்கு ஏற்பாடு செய்துள்ளது. விழாவின் தொடக்கமாக முழுநீளத் திரைப்படப் பிரிவில் 'ஓலு' திரைப்படமும், ஆவண திரைப்படப் பிரிவில் 'கா்வாஸ்' திரைப்படமும் திரையிடப்படவுள்ளன.
2. 49வது இந்திய சா்வதேச திரைப்பட விழாவில் (IFFI – 2018) இந்திய பனோரமா பிரிவில் தெரிவான அனைத்து திரைப்படங்களும் இவ்விழாவில் திரையிடப்படும். 26 முழு நீளத்திரைப் படங்களும், 21 கதைசாரா திரைப்படங்களும் இதில் திரையிடப்படும்.

15. இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தால் 2018ம் ஆண்டில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச்சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ள கட்டமைப்புகள் எது/எவை?

**விடை:** நிம்ரானா பாவோரி, ராஜஸ்தான்
அகா கானின் ஹவேலி, ஆக்ரா
பழைய நீதிமன்ற கட்டடம், நாக்பூா்

**விளக்கம்:**

1. நடப்பாண்டில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களாக இந்தியத் தொல்லியல் ஆய்வகம் (ASI) 6 கட்டமைப்புகளை அறிவித்துள்ளது. அவை, நாக்பூரில் உள்ள (மகாராஷ்டிரா) 125 ஆண்டு பழமையான உயா்நீதிமன்ற கட்டடம், ஆக்ராவில் உள்ள அகா கானின் ஹவேலி மற்றும் ஹதி கானா – முகலாயா் கால இரு நினைவுச்சின்னங்கள், ராஜஸ்தானின் ஆல்வாா் மாவட்டத்தில் உள்ள புராதன கால நிம்ரானா பாவோரி, ஒடிசாவின் பொலங்கிா் மாவட்டத்தில் உள்ள ராணிபூா் ஜராயிலில் உள்ள கோவில்களின்

குழு மற்றும் உத்தரகாண்ட் மாநிலம் பித்தோகர் மாவட்டத்தின் கோட்டாலியில் உள்ள விஷ்ணு கோவில்.

16. கேரளாவின் எந்த நகரத்தில் பாரம்பரிய மொழிக்கான மையம் ஒன்றை அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது?

**விடை:** திரூர்

**விளக்கம்:**

1. கேரளாவின் திரூரில் அமைந்துள்ள துஞ்சத்து எழுத்தச்சன் மலையாள பல்கலையில் பாரம்பரிய மொழிக்கான மையம் ஒன்றை நிறுவுவதற்கு மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் அண்மையில் ஒப்புதல் வழங்கியுள்ளது. இம்முடிவை மைசூரிலுள்ள மத்திய இந்திய மொழிகள் நிறுவனத்துக்கு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதைக்கருத்தில் கொண்டு, விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்து, அமைச்சகத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கேரள மாநில அரசு கையெழுத்திட வேண்டும். மலையாள மொழி குறித்த ஆய்வு மற்றும் ஆராய்ச்சி மற்றும் பிற அம்சங்கள் குறித்த பணிகளை மேற்கொள்வதே இம்மையத்தின் நோக்கமாகும். மலையாள மொழி வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதில் இது நன்மை பயக்கும்.

17. 2019 சர்வதேச சுகாதார உச்சிமாநாடு நடைபெறவுள்ள நகரம் எதுத?

**விடை:** ஹைதராபாத்

**விளக்கம்:**

1. வரும் ஜூலை 21 முதல் 24 வரை தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில், 13வது சர்வதேச சுகாதார உச்சிமாநாடு (GHS – 2019) நடைபெறவுள்ளது. இந்திய வம்சாவளி மருத்துவர்கள் சங்கத்தின் ஒத்துடைப்புடன் இந்த உச்சிமாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 100க்கும் மேற்பட்ட பேச்சாளர்கள், மருத்துவத்தில் தங்களின் நிபுணத்துவம் குறித்து பகிர்ந்து கொள்வார்கள்.
2. இவ்வுச்சிமாநாடு சர்வதேச ஆராய்ச்சிப் போட்டியைக் கொண்டிருக்கும், இதில் இந்திய வம்சாவளி அமெரிக்க மருத்துவர்கள் சங்கமானது ஹைதராபாத்தில் உள்ள முன்னணி மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து செயல்படும்.

18. அரசு வேலைகளில் ‘பொருளாதார ரீதியாக பின்தங்கிய’ உயர் சாதியினருக்கு எத்தனை சதவித ஒதுக்கீடு வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?

**விடை:** 10%

**விளக்கம்:**

1. பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு உயர்கல்வியிலும், அரசு வேலை வாய்ப்பிலும் பொதுப்பிரிவில் 10% ஒதுக்கீடு வழங்குவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. நடப்பு குளிர்கால கூட்டத்தொடரின் இறுதி நாளான ஜன.9 அன்று இதற்கான அரசியல் சாசன திருத்த மசோதா நிறைவேற்றப்படும்.
2. முன்மொழியப்பட்டுள்ள இந்த இட ஒதுக்கீடானது ஏற்கெனவே SC, ST, OBC உள்ளிட்ட பிரிவினர் அனுபவித்து வரும் 50 சதவீத இட ஒதுக்கீட்டிற்கும் அதிகமாக உள்ளது. தற்போது மொத்த இட ஒதுக்கீட்டின் அளவு 60 சதவீதமாகும். இந்த இட ஒதுக்கீடு திட்டத்தை செயல்படுத்த வேண்டுமானால் அரசியல் சாசன சட்டத்தின் 15 மற்றும் 16வது பிரிவில் திருத்தம் செய்ய வேண்டியது அவசியம். பிராமணர்கள், ராஜபுத்திரர்கள் (தாகூர்), ஜாட் இன மக்கள், மராத்தா, பூமிகாரர்கள், பல வணிக சாதியினர், காப்பிலியர்கள் மற்றும் கம்மவர்கள் உள்ளிட்ட உயர் சாதியினர் இந்த இட ஒதுக்கீட்டின் மூலம் பயன்பெறுவார்கள்.

19. ஜவஹர் நவோதயா வித்யாலயா மாணவர்களின் தற்கொலைகள் பற்றி ஆராய்வதற்கான செயற்குழுவின் தலைவர் யார்?

**விடை:** ஜிதேந்திரா நாக்பால்

**விளக்கம்:**

1. ஜவஹர் நவோதயா வித்யாலயா (JNV) விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களின் தற்கொலைகளுக்கான சூழல்களை ஆராய்வதற்காக மனநல மருத்துவர் ஜிதேந்திர நாக்பால் தலைமையில் ஒரு செயற்குழுவை மத்திய மனதவள மேம்பாட்டு அமைச்சகம் அமைத்துள்ளது. இந்தக் குழு, மாணவர்களின் தற்கொலையைத் தடுப்பதற்கான வழிமுறைகளை பரிந்துரைக்கும்.

20. விவாகரத்து கோருவதற்கான காரணங்களிலிருந்து எந்த நோயை நீக்க வழிவகுக்கும் தனிநபர் சட்டத்திருத்த மசோதா (2018), மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது?

**விடை:** தொழுநோய்

**விளக்கம்:**

1. விவாகரத்து கோருவதற்கான காரணங்களிலிருந்து தொழுநோயை நீக்க வழிவகுக்கும் தனிநபர் சட்டத்திருத்த மசோதா (2018), மக்களவையில் ஜன.7 அன்று நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து, விவாகரத்து சட்டம் (1869), முஸ்லீம் திருமணம் கலப்புச் சட்டம் (1939), சிறப்பு திருமண சட்டம் (1954), ஹிந்து திருமணச் சட்டம் (1955), ஹிந்து மத சுவீகரம் மற்றும் பராமரிப்புக் கட்டணம் (1956) என்ற சட்டங்களில் திருத்தம் செய்யப்படுகிறது. தற்போது பல்வேறு மருத்துவ முறைகளினால் தொழுநோய் குணப்படுத்தக்கூடிய நோயாகவே உள்ளது.

21. நான்காவது ரைசினா பேச்சுவார்த்தை (Raisina Dialogue) நடைபெற்ற நகரம் எது?

**விடை:** புது தில்லி

**விளக்கம்:**

1. ஜன.8 அன்று புது தில்லியில், “A World Reorder: New Geometries; Fluid Partnerships; Uncertain Outcomes” என்ற கருப்பொருளுடன் நான்காவது ரைசினா பேச்சுவார்த்தை தொடங்கியது. 3 நாள் நடைபெறும் இந்தப் பேச்சுவார்த்தை, இந்தியாவின் புவிசார் அரசியல் மற்றும் புவிசார் உத்திகள் தொடர்பாக ஆண்டுதோறும் நடைபெறும் முதன்மையான மாநாடாகும்.
2. இந்தப் பேச்சுவார்த்தையில், 93 நாடுகளைச் சேர்ந்த பிரபல அரசியல் தலைவர்கள், உத்திசார் சிந்தனையாளர்கள், கொள்கை வல்லுநர்கள், தொழில்நுட்ப கண்டுபிடிப்பாளர்கள், வியாபார பிரதிநிதிகள் மற்றும் கல்வியாளர்கள் உட்பட அறுநூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்று பல பத்தாண்டுகளுக்கு அனைவருக்கும் சேவையளிக்கும் தங்களின் தீர்வை முன்வைப்பார்கள்.

22. முதலாவது சர்வதேச விமானப் போக்குவரத்து உச்சிமாநாட்டின் கருப்பொருள் என்ன?

**விடை:** Flying for all

**விளக்கம்:**

1. “Flying for all” என்ற தலைப்பிலான முதலாவது சர்வதேச விமானப் போக்குவரத்து உச்சமாநாடு (GAS – 2019), ஜன.15-16 ஆகிய தேதிகளில் மும்பையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. FICCI உடன் இணைந்து உள்நாட்டு

விமானப் போக்குவரத்து அமைச்சகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. விமானப் போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவது குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்படும்.

23. மாநிலங்களில் பள்ளிக்கல்வியின் தரத்தை மதிப்பிடுவதற்காக மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் எந்தத் தரவரிசை குறியீட்டை அறிமுகப்படுத்தியது?

**விடை:** 70 – புள்ளி

**விளக்கம்:**

1. மாநிலங்களால் வழங்கப்படும் பள்ளிக்கல்வியின் தரத்தை மதிப்பிடுவதற்காக மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் 70 புள்ளி தரவரிசை குறியீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில், கல்வி தரத்தை மதிப்பீடு செய்வதற்காக 70 அளவுருக்கள் கொண்டு, 1000 மதிப்பெண்களில் மாநிலங்கள் தரவரிசைப்படுத்தப்படும்.

24. எந்த நகரத்தில், 6வது இந்திய பெண்கள் இயற்கை விழா நடைபெறவுள்ளது?

**விடை:** சண்டிகர்

**விளக்கம்:**

1. இந்தியாவின் தொலைதூர பகுதிகளைச் சேர்ந்த, இயற்கை முறையில் வேளாண்மை செய்யும் பெண்கள் மற்றும் தொழிற்முனைவோரை ஊக்கப்படுத்தவும், கொண்டாடவுமாக ஜனவரி 12-14 வரை சண்டிகரில் உள்ள லெசர் வேலியில், ஆறாவது இந்திய பெண்கள் இயற்கை விழாவை பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் நடத்தவுள்ளது. நூற்றுக்கும் மேற்பட்ட பெண் தொழில்முனைவோர்கள் தங்களின் விவசாய உற்பத்திப் பொருட்களுடன் இந்த விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

25. எந்த மனித உரிமைகள் அமைப்புடன் இணைந்து மத்திய அரசு வெப் - வொன்டர் மகளிர் பரப்புரையை (Web – Wonder Women Capaign) தொடங்கியுள்ளது?

**விடை:** பிரேக்துரூ இந்தியா (Breakthrough India)

**விளக்கம்:**

1. மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் '#www:Web-Wonder Women' என்ற இணையவழி பரப்புரையை தொடங்கியுள்ளது. சமூக

ஊடகங்கள் மூலம் மாற்றத்தை கொண்டுவரும் வகையில் சிறந்த சாதனைகள் புரிந்த பெண்களை கண்டறிந்து கௌரவிக்கும் வகையில் இந்தப் பரப்புரை தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக பிரேக்துரூ மற்றும் டுவிட்டர் நிறுவனத்துடன் இவ்வமைச்சகம் இணைந்து செயல்படவுள்ளது.

26. கங்காஜல் திட்டம் தொடங்கப்பட்ட நகரம் எது?

**விடை:** ஆக்ரா

**விளக்கம்:**

1. ஆக்ராவில் சுற்றுலாவுக்கான அடிப்படை கட்டமைப்பின் மேம்பாட்டிற்கும், விரிவாக்கத்திற்கும் பெரும் உந்துதலை தரும் வகையில் ஆக்ரா நகரத்துக்கும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் ரூ.2900 கோடி மதிப்பிலான பல வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.
2. ஆக்ராவுக்கு சிறந்த மற்றும் கூடுதல் உத்தரவாதம் அளிக்கும் வகையில் 'கங்காஜல்' திட்டத்தை பிரதமர் அப்போது தொடங்கி வைத்தார். ஆக்ராவுக்கு வினாடிக்கு 140 கன அடி கங்கை நீரைக் கொண்டு வருவது 'கங்காஜல்' திட்டத்தின் நோக்கமாகும்.

27. எந்த மாநிலத்தில், இந்தியாவின் நீளமான ஒற்றைத்தட எ∴குவட தொங்கு பாலம் (Single – Lane Steel Cable Suspension Bridge) திறக்கப்பட்டுள்ளது?

**விடை:** அருணாச்சலப் பிரதேசம்

**விளக்கம்:**

1. அருணாச்சலப் பிரதேசத்தின் மேல் சியாங் மாவட்டத்தில், சியாங் ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ள இந்தியாவின் மிக நீண்ட 300 மீ., நீளங்கொண்ட ஒற்றைத்தட எ∴குவட தொங்கு பாலத்தை அந்த மாநிலத்தின் முதலமைச்சர் பேமா கந்து திறந்து வைத்தார். இது சீனாவின் எல்லையோரத்தில் அமைந்துள்ளது. பையோரங் (Byorung) என்றழைக்கப்படும் இந்தப் பாலம், ரூ.4843 கோடியில் கட்டப்பட்டுள்ளது. காலக்கெடுவற்ற வளங்களின் ஒருங்கிணைந்த மைய திட்டத்தின் (NLCPR) கீழ் வடகிழக்கு பகுதிகள் வளர்ச்சி அமைச்சகம் இதற்கு நிதியுதவி செய்துள்ளது.

28. அனைவருக்கும் அடிப்படை ஊதிய திட்டத்தை அறிவித்துள்ள முதல் இந்திய மாநிலம் எது?

**விடை:** சிக்கிம்

**விளக்கம்:**

1. 2019ம் ஆண்டில் சிக்கிம் மாநிலத்தில் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் (Universal Basic Income – UBI) எனப்படும் அனைவருக்கும் அடிப்படை ஊதியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என ஆளும் சிக்கிம் ஜனநாயக முன்னணி அறிவித்துள்ளது. தனி மனிதர்களுக்கு மாதந்தோறும் ஏற்படும் அத்தியாவசிய செலவை கணக்கிட்டு அதனை அரசே வங்கிக் கணக்கில் செலுத்துவது தான் இந்தத் திட்டத்தின் நோக்கம். இத்திட்டம் 2022ம் ஆண்டுக்குள் செயல்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. அனைவருக்கும் அடிப்படை ஊதியம் (UBI) என்பது ஒரு நாட்டின் அல்லது பிற புவியியல் பகுதி/மாநிலத்தின் குடிமக்கள் அனைவருக்கும் அவர்களின் வருமானம், வளங்கள் அல்லது வேலை வாய்ப்பு நிலையைப் பொருட்படுத்தாமல் குறிப்பிட்ட தொகையை அவர்களுக்கு வழங்கும் ஒரு திட்டமாகும். வறுமையை ஒழிப்பதும், பொதுமக்களிடையே சமத்துவத்தை வளர்ப்பதுமே இந்தத் திட்டத்தின் முதன்மை

29. கும்பமேளாவின்போது பிரயாக்ராஜ் நகரத்தில் மக்களுக்கு வழிகாட்ட உதவுவதற்காக செயலி ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ள இரயில்வே மண்டலம் எது?

**விடை:** வடக்கு மத்திய இரயில்வே

**விளக்கம்:**

1. ஜன.15ம் தேதி தொடங்கும் கும்பமேளாவில், பிரயாக்ராஜ் நகரத்தில் மக்களுக்கு வழிகாட்ட உதவுவதற்காக வடக்கு மத்திய ரயில்வே மண்டலம் 'ரயில் கும்ப சேவா' என்ற அலைபேசி செயலி ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தச் செயலில் கும்பமேளாவின் போது இயக்கப்படும் சிறப்பு ரயில்கள் குறித்த தகவல்களும் கிடைக்கும். கூடுதலாக, முன்பதிவு மற்றும் முன்பதிவற்ற ரயில் பயணச்சீட்டுகளை பெறுவதற்கும் இநதச் செயலி உதவும்.
2. இச்செயலி மூலம் கும்பமேளா சிறப்பு ரயில்கள், வழித்தட விபரம், பயணச்சீட்டு முன்பதிவு, புகார் எண்கள், ஆன்மீக தலங்கள், தங்குமிடம் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை பயனர்கள் அறிந்து கொள்ளலாம்.

30. ACI இன் 2018 எளிதாக தொழில் தொடங்க உகந்த இந்திய மாநிலங்கள் தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ள மாநிலம் எது?

**விடை:** ஆந்திரப் பிரதேசம்

**விளக்கம்:**

1. ஆசிய போட்டித்தன்மை நிறுவனத்தின் 2018ம் ஆண்டுக்கான எளிதாக தொழில் தொடங்க உகந்த இந்திய மாநிலங்கள் பட்டியலில் ஆந்திரப் பிரதேச மாநிலம் முதலிடத்தை பிடித்துள்ளது. முதலிடத்தை ஆந்திரப்பிரதேச மாநிலம் தக்கவைத்துக் கொண்ட போதிலும் பல்வேறு நிறுவன மற்றும் உட்கட்டமைப்பு இடைவெளிகளை அம்மாநிலம் சரிசெய்ய வேண்டும் என டேன் கீ கியாப் அவர்களால் தலைமை தாங்கப்படும் ACI குழு தெரிவித்துள்ளது.

31. 27வது புது தில்லி உலக புத்தக கண்காட்சியின் கருப்பொருள் என்ன?

**விடை:** Kathasagara: Celebrating Children’s Literature

**விளக்கம்:**

1. “Readers with Special Needs” என்னும் கருப்பொருளுடன் ஜன.5 அன்று புது தில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் 27வது புது தில்லி உலக புத்தக கண்காட்சி தொடங்கியது. அகில இந்திய வானொலி நிலையம் இதன் வானொலி பங்குதாரராக உள்ளது. கனடா, சீனா, இலங்கை மற்றும் அமெரிக்கா உட்பட 20க்கும் மேற்பட்ட நாடுகள் இந்தக் கண்காட்சியில் பங்கேற்கின்றன.

32. மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.3 லட்சம் வரை வட்டியில்லாக் கடன்களை வழங்குவதாக அறிவித்துள்ள மாநில அரசு எது?

**விடை:** ஒடிசா

**விளக்கம்:**

1. மிஷன் சக்தி திட்டத்தின் ஒரு பகுதியாக மாநிலத்தில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.3 லட்சம் வரை வட்டியில்லா கடன்கள் வழங்கப்படும் என ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் அண்மையில் அறிவித்துள்ளார். இத்திட்டம், 6 லட்சம் மகளிர் உதவிக்குழுக்களை சார்ந்த 70 லட்சம் வெண்களுக்கு பயனளிக்கும். டிஜிட்டல் முறையில் பெண்களை தன்மேம்பாடு அடையச் செய்யும் மாநில அரசின் முயற்சிகளின் ஒருபகுதியாக, ஆறு லட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் தலா ரூ.3000 நிதி உதவியையும் அவர் அப்போதுத வழங்கினார்.
2. இத்திட்டத்தை வலுப்படுத்தும் ஒரு முயற்சியாக மாநிலத்திலுள்ள அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளிலும் ‘மிஷன் சக்தி இல்லம்’ கட்டவும் ஒடிசா மாநில

அரசு முடிவு செய்துள்ளது. இது தவிர அங்கன்வாடி ஊழியர்களுக்கும், உதவியாளர்களுக்கும் முறையே மாதந்தோறும் ரூபாய் 500, 200 ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என ஒடிசா முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

33. சமீபத்தில், புராணகால சரஸ்வதி ஆற்றை மீட்டுருவாக்கம் செய்வதற்கான திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ள மாநில அரசு எது?

**விடை:** ஹரியானா

**விளக்கம்:**

1. புராணகால சரஸ்வதி ஆற்றை மீட்டுருவாக்கம் செய்வதற்கான 11 திட்டங்களுக்கு அண்மையில் ஜன.2 அன்று ஹரியானா மாநில அரசாங்கம் ஒப்புதல் அறித்துள்ளது. மாநிலத்தின் பழமையான புராணகால சரஸ்வதி ஆற்றை மீட்டுருவாக்கம் செய்வதும், வழமையாக அதில் நன்னீர் பாய்வதை உறுதி செய்வதுமே இந்தத் திட்டங்களின் நோக்கமாகும்.

34. ரேணுகாஜி பல்நோக்கு அணை திட்டத்திற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள மாநிலங்கள் எவை?

**விடை:** உத்திரப் பிரதேசம், உத்தரகண்ட், ஹிமாச்சலப்பிரதேசம், தில்லி, ராஜஸ்தான், ஹரியானா

**விளக்கம்:**

1. ஜன.11 அன்று ரேணுகாஜி பல்நோக்கு அணை திட்டத்திற்கான ஒப்பந்தத்தில் உத்திரப்பிரதேசம் ஹரியானா, ஹிமாச்சலப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய ஆறு மாநிலங்கள் கையெழுத்திட்டன. இத்திட்டத்தின்படி, யமுனை மற்றும் அதன் கிளையாறுகளான டோன்ஸ், கிரி ஆகியவற்றின் குறுக்கே 3 அணைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.
2. உத்தரகாண்டில் பாயும் யமுனையாற்றின் மீது லக்வார் திட்டமும், ஹிமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்டில் பாயும் டோனாற்றின் மீது கிஷாவ் திட்டமும் ஹிமாச்சலப் பிரதேசத்தில் பாயும் கிரியாற்றின் மீது ரேணுகாஜி திட்டமும் இதில் அடங்கும்.

35. 6 மாதகால செயற்கை நுண்ணறிவு பாடத் திட்டத்தை தொடங்க முடிவு செய்துள்ள IIT எது?

**விடை:** ஐஐடி கரக்பூர்

**விளக்கம்:**

1. தொழில்முறை வல்லுநர்களுக்கும், பொறியியல் மாணவர்களுக்காக செயற்கை நுண்ணறிவு மற்றும் பொறிக்கற்றல் தொடர்புடைய 6 மாதகால பாடத்திட்டங்களை கரக்பூர் ஐஐடி நிறுவனம் தொடங்கவுள்ளது. பொறிக்கற்றல் மற்றும் செயற்கை நுண்ணறிவு பாடங்களில் இந்தியாவின் திறமையை வலுப்படுத்துவதே இந்தப் பாடங்களின் நோக்கமாகும்.

36. தேர்தலுக்கு முன்பான கடைசி 48 மணி நேரத்தில் டிஜிட்டல் ஊடகம் மற்றும் பரப்புரையின் மீதான தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ள தேர்தல் ஆணையக் குழுவின் தலைவர் யார்?

**விடை:** உமேஷ் சின்ஹா

**விளக்கம்:**

1. தேர்தல் ஆணையத்தால் அமைக்கப்பட்ட குழுவானது தேர்தலுக்கு முன்பான கடைசி 48 மணி நேரத்தில் டிஜிட்டல் ஊடகம் மற்றும் பரப்புரை குறித்த தனது அறிக்கையை தலைமைத் தேர்தல் ஆணையர் சுனில் அரோராவிடம் சமர்ப்பித்துள்ளதுத. இந்தக் குழு, துணை தலைமைத் தேர்தல் ஆணையர் உமேஷ் சின்ஹா தலைமையில் உருவாக்கப்பட்டது.

37. 25வது கூட்டாண்மை உச்சிமாநாடு – 2019 நடைபெறும் நகரம் எது?

**விடை:** மும்பை

**விளக்கம்:**

1. ஜன.12 அன்று மும்பையில் நடந்த 25வது கூட்டாண்மை உச்சிமாநாட்டை துணைக் குடியரசுத் தலைவர் M. வெங்கைய நாயுடு தொடங்கி வைத்தார். “புதிய இந்தியா” மற்றும் “உலகளாவிய பொருளாதாரத்தின் புதிய முகவரி” ஆகியவற்றில் இந்தியாவின் தற்போதைய நிலை குறித்து இந்த உச்சிமாநாடு வெளிப்படுத்தும்.

38. 29வது இந்திய வண்ணப்பூச்சுகள் மாநாடு நடைபெற்ற நகரம் எது?

**விடை:** ஆக்ரா

**விளக்கம்:**

1. ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும் 29வது இந்திய வண்ணப்பூச்சுகள் மாநாடு ஜன.11 அன்று உத்திரப் பிரதேச மாநிலம் ஆக்ராவில் தொடங்கியது. இதனை

நாட்டின் வண்ணப்பூச்சுகள் தொழிற்துறையின் உச்ச அமைப்பான இந்திய வண்ணப்பூச்சுகள் சங்கம் நடத்தியுள்ளது.

39. பொதுப்பிரிவில் பொருளாதார ரீதியாக பின்தங்கியோருக்கு பத்து சதவீத இடஒதுக்கீட்டை அமல்படுத்தியுள்ள இந்தியாவின் முதல் மாநிலம் எது?

**விடை:** குஜராத்

**விளக்கம்:**

1. கல்வி மற்றும் அரசாங்க வேலைவாய்ப்புகளில் பொதுப்பிரிவில் உள்ள பொருளாதார ரீதியாக பின்தங்கியோருக்கான பத்து சதவீத இட ஒதுக்கீட்டின் பயன்கள், ஜனவரி 14ம் தேதி நள்ளிரவு முதல் அமல்படுத்தப்படும் என குஜராத் மாநில அரசு அறிவித்துள்ளது. இப்புதிய ஒதுக்கீட்டுக்கான தகுதி, அறிவிக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் சேர்க்கைகளுக்கு மட்டுமே பொருந்தும் எனவும் இதன் செயல்பாடுகள் இன்னமும் தொடங்கப்படவில்லை எனவும் தெளிவுற கூறப்பட்டுள்ளது.
2. இத்தகைய சந்தர்ப்பங்களில், தற்போதைய நடைமுறை இடைநிறுத்தம் செய்யப்பட்டு புதிய 10% கூடுதல் இட ஒதுக்கீடு அமல்படுத்தப்பட்ட பின் புதிய செயல்முறை தொடங்கப்படும். இருப்பினும் 2019 ஜன 14ம் தேதிக்கு முன்னர் தொடங்கப்பட்ட பணிகளில் பத்து சதவீத இட ஒதுக்கீட்டின் நன்மைகள் பொருந்தாது என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. பிரிவு 15 மற்றும் 16ல் சட்டத்திருத்தங்களை மேற்கொண்ட பிறகு இந்திய அரசியலமைப்பின் வழிகாட்டுதலின் 46வது பிரிவின் கீழ் மத்திய அரசு இம்முடிவை எடுத்துள்ளது.

40. நாட்டின் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு, எந்தக் கால கட்டத்திற்காக 5 ஆண்டு செயல் திட்டத்தை இந்திய அரசு உருவாக்கியுள்ளது?

**விடை:** 2018 முதல் 2023 வரை

**விளக்கம்:**

1. சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகமானது நாட்டின் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு தீர்வுகாண்பதற்காக ஐந்தாண்டுகால செயல் திட்டத்தை உருவாக்கியுள்ளது. இந்தச் சிக்கலை எதிர்கொள்ளும் வகையில் பல்நோக்கு

உத்திகளை பயன்படுத்துவதே போதை மருந்துத் தேவை குறைப்பிற்கான இத்தேசிய செயல்திட்டத்தின் (2018 முதல் 2023 வரை) நோக்கமாகும்.

41. முதலாவது வருடாந்திர ஆயுதக்குறைப்பு மற்றும் சர்வதேச பாதுகாப்பு விவகாரங்கள் தோழமை நிகழ்வை (Disarmament and International Security Affairs Fellowship Programme) நடத்தவுள்ள நாடு எது?

**விடை:** இந்தியா

**விளக்கம்:**

1. ஜன.14 அன்று புது தில்லியில் உள்ள வெளிநாட்டு சேவைகள் நிறுவனத்தில், வருடாந்திர ஆயுதக் குறைப்பு மற்றும் சர்வதேச பாதுகாப்பு விவகாரங்கள் தோழமை நிகழ்வு தொடங்கியது. ஐக்கிய நாடுகளின் தலைமைச் செயலாளர் மற்றும் ஆயுத குறைப்பு விவகாரங்களுக்கான உயர்நிலை பிரதிநிதி இசுநகமிட்சு மற்றும் வெளியுறவு செயலாளர் விஜய் கேசவ் கோகலே ஆகியோரால் இது தொடங்கி வைக்கப்பட்டது.
2. 27 நாடுகளைச் சோந்த இளம் தூதர்கள் இந்தத் திட்டத்தில் பங்கேற்றுள்ளனர், இது வரும் பிப்.1 வரை தொடரும். ஆயுதக்குறைப்பு, ஆயதப் பரவல் குறைப்பு மற்றும் கட்டுப்பாடு மற்றும் சர்வதேச விவகாரங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய பல்வேறு கூறுகளில் பங்கேற்பாளர்கள் அறிவை மேம்படுத்துவது இந்த நிகழ்வின் நோக்கமாகும்.

42. இந்திய ஆயுதப்படைகளுள் ஒரே முப்படை செயல்பாட்டு படைப்பிரிவு எது?

**விடை:** அந்தமான் மற்றும் நிகோபார் படைப்பிரிவு

**விளக்கம்:**

1. அந்தமான் & நிகோபார் தீவுகளின் போர்ட் பிளேரை அடிப்படையாகக் கொண்ட அந்தமான் மற்றும் நிகோபார் படைப்பிரிவானது இந்திய ஆயுதப்படைகளுள் முதலாவதும், ஒரே முப்படை செயல்பாட்டு படைப்பிரிவுமாகும். மலாக்கா நீரிணைகளுக்கு அருகே அமைந்துள்ள இந்தத் தீவுக் கூட்டம், பல்வேறு நாடுகளின் கடற்படையால் பயன்படுத்தப்படும் முக்கியமானதொரு கடல் வழி தகவல் தொடர்புத் தடமாகும்.

43. ‘ஒரு குடும்பம், ஒரு வேலை’ என்ற திட்டத்தை தொடங்கியுள்ள மாநில அரசு எது?

**விடை:** சிக்கிம்

**விளக்கம்:**

1. குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையை உறுதிசெய்யும் ‘ஒரு குடும்பம், ஒரு வேலை – One Family, One Job’ என்ற திட்டத்தை சிக்கிம் மாநில முதலமைச்சர் பவன் சாம்லிங் தொடங்கி வைத்தார். இருப்பினும், தற்சமயம் அரசு வேலை இல்லாத குடும்பத்தினருக்கு மட்டுமே இந்த வேலைவாய்ப்பு வழங்கப்படும். இத்திட்டத்தின்படி 12 ஆயிரத்திற்கும் அதிகமான வேலையில்லா இளையோருக்கு, நியமனக்கடிதங்களை கேங்டாக்கில் உள்ள பல்ஜோர் அரங்கில் நடந்த வேலைவாய்ப்பு முகாமில் அம்மாநில முதலமைச்சர் சாம்லிங் வழங்கினார்.

44. நுண் பாசனம் குறித்த 9வது சர்வதேச மாநாடு நடைபெறும் நகரம் எது?

**விடை:** ஔரங்காபாத்

**விளக்கம்:**

1. ‘‘நவீன வேளாண்மையில் நுண் பாசனம்’’ என்ற கருப்பொருளின் அடிப்படையில் ஜன.16 அன்று ஔரங்காபாத்தில் நுண் பாசனம் குறித்த 9வது சர்வதேச மாநாடு நடைபெறும். 3 நாள் நடக்கும் இந்நிகழ்வு, நவீன வேளாண்மைக்கான நுண் பாசனம் தொடர்புடைய பிரச்சனைகள், அதிக பயிருற்பத்திக்காக நுண் பாசனத்தில் உள்ள புதிய தொழினுட்பங்கள், கொத்தளவு விவசாயத்தில் நுண் பாசனங்கள் போன்ற பல்வேறு பிரச்சனைகள் குறித்து விவாதிக்கும், மாநாடு வடிவில் நடைபெறும் ஒரு பல் - ஒழுங்குமுறை உரையாடலாகும்.

45. 2019 மார்ச் 1 முதல் ஒற்றைப் பயன்பாடுடைய நெகிழிப் பொருட்களுக்கு தடைவிதிக்கவுள்ள யூனியன் பிரதேசம்/மாநிலம் எது?

**விடை:** புதுச்சேரி

**விளக்கம்:**

1. 2019 மார்ச் 1 முதல் ஒற்றைப் பயன்பாடுடைய நெகிழிப் பொருட்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவற்றுக்கு தடைவிதிக்க புதுச்சேரி அரசு முடிவு செய்துள்ளது. இந்த முயற்சி, நெகிழித்தடையின் அவசியம் குறித்து பொதுமக்கள் & வணிகளர்களிடையே விழிப்புணர்வை உண்டாக்கும். சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டி இம்முடிவு

எடுக்கப்பட்டுள்ளது. மக்காத பைகளின் மீதான இந்தத்தடை, பருத்தி/துணி, சணல் பைகள் சந்தைக்கு வழிகோலும்.

2. முன்னதாக, 2019 ஜன.1 முதல் ஒற்றைப் பயன்பாட்டு நெகிழிகளின் உற்பத்தி, விற்பனை, சேமிப்பு மற்றும் பயன்பாட்டுக்கு தடைவிதிக்கப்படும் என 2018ம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தன்று தமிழ்நாடு அரசு அறிவித்தது.

46. முதலாவது சர்வதேச விமானப் போக்குவரத்து உச்சிமாநாடு (GAS – 2019) நடந்த நகரம் எது?

**விடை:** மும்பை

**விளக்கம்:**

1. ஜன.15 அன்று மும்பையில் நடந்த முதலாவது சர்வதேச வான் போக்குவரத்து உச்சிமாநாட்டை (GAS – 2019) மத்திய உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சர் தொடங்கி வைத்தார். “Flying For All – Especially The Next 6 Billion” என்ற கருப்பொருளின் அடிப்படையில் இரண்டு நாள் நடந்த இந்த உச்சிமாநாட்டை, FICCI உடன் இணைந்து மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்தது.
2. அடுத்து வரும் பத்தாண்டுகளில், தொழினுட்பம் சார்ந்த கண்டுபிடிப்புகள் வான் வழிப்பயணத்தை எவ்வாறு மாற்றியமைக்கவுள்ளது என்பதை வெளிப்படுத்தவும், விவாதிக்கவும் மற்றும் புரிந்து கொள்ளவும் இது ஒரு வாய்ப்பினை வழங்குகிறது.

47. ‘ஜெய் கிசான் ரின் முக்தி யோஜனா’ என்ற வேளாண் கடன் தள்ளுபடி திட்டத்தை அறிமுகம் செய்துள்ள மாநில அரசு எது?

**விடை:** மத்தியப் பிரதேசம்

**விளக்கம்:**

1. ஜன.16 அன்று ம.பி. முதலமைச்சர் கமல்நாத், ‘ஜெய் கிசான் ரின் முக்தி யோஜனா’ என்ற பெயரில் 50,000 கோடி ரூபாய் வேளாண் கடன் தள்ளுபடி திட்டத்தை தொடங்கி வைத்தார். 55 லட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் இதன்மூலம் பயனடைவார்கள். வருமான வரி செலுத்தும் விவசாயிகள், அரசு பணியிலிருப்போர், GST செலுத்துவோர் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற முடியாது.

48. திருஷ்ணா எரிவாயு திட்டம், எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

**விடை:** திரிபுரா

**விளக்கம்:**

1. திரிபுரா மாநிலம் கோமதி மாவட்டத்தின் பெலோனியா உப பிரிவிலுள்ள திருஷ்ணா வனவுயிரி சரணாலயத்தில் இருந்து இயற்கை எரிவாயுவை பிரித்தெடுப்பதற்கான ONGC இன் திருஷ்ணா எரிவாயு திட்டத்திற்கு தேசிய வனவிலங்கு வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. 10 முதல் 12 எரிவாயு கிணறுகளை ONGC அங்கு கண்டறிந்துள்ளது.

49. இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே 'IMBEX 2018 – 19' தொடங்கியுள்ளது?

**விடை:** மியான்மர்

**விளக்கம்:**

1. 'IMBEX 2018 – 19' என்னும் இந்தியா – மியான்மர் இடையேயான இருதரப்பு ராணுவ பயிற்சியின் 2வது பதிப்பு, ஜன.16 அன்று இந்திய ராணுவத்தின் மேற்கு படைப்பிரிவின் தலைமையகமான ஹரியானாவில் உள்ள சண்டி மந்திரில் தொடங்கியது. ஐ.நா. அமைதிகாப்பு நடவடிக்கைகளில் பங்குபெறுவதற்காக மியான்மர் படைப்பிரிவை பயிற்றுவிப்பதே இந்தக் கூட்டுப்பயிற்சியின் நோக்கமாகும். ஆறுநாள் நடைபெறும் இப்பயிற்சியில், இந்தியா மற்றும் மியான்மர் ராணுவத்தில் இருந்து தலா 15 அதிகாரிகள் பங்கேற்பர்.

50. மேற்குத் தொடர்ச்சி மலைகளிலிருந்து சுற்றுச்சூழலுக்கு கேடுவிளைவிக்கும் அயல்நாட்டுத் தாவரங்களை அகற்றுவதற்காக சென்னை உயர்நீதிமன்றத்தால் உருவாக்கப்பட்டுள்ள குழுவின் தலைவர் யார்?

**விடை:** செருகுரி ராகவேந்திர பாபு

**விளக்கம்:**

1. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள நிரந்தர சோலைக்காடுகள் மற்றும் புல்வெளிகளை முற்றாக மறைத்து வளர்ச்சியடைந்திருக்கும் அயல்நாட்டுத் தாவர இனங்கள் மீது சென்னை உயர் நீதிமன்றம் கடுமையான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. உலகின் பல்லுயிர் இழப்புக்கு இத்தகைய இனங்கள் இரண்டாவது மிகப்பெரிய காரணம் என கருதப்படுகிறது. வேளாண்மை,

வனவியல் மற்றும் நீர்வாழ் சுற்றுச்சூழலுக்கு அதிக செலவினங்களை இது ஏற்படுத்துகிறது.

51. ‘அமா கரே LED’ திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு எது?

**விடை:** ஒடிசா

**விளக்கம்:**

1. ஒடிசா மாநில முதல்வர் நவீன் பட்நாயக், சமீபத்தில் மாநிலத்திலுள்ள 95 லட்சம் குடும்பங்களுக்கு தலா 4 இலவச LED விளக்குகள் வழங்கும் ‘அமா கரே LED’ திட்டத்தை தொடங்கிவைத்துள்ளார். தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் மற்றும் மாநில உணவு பாதுகாப்பு திட்டம் ஆகியவற்றின் கீழ் பதிவுசெய்துள்ள ஒவ்வொரு பயனாளிக்கும் 9 வாட் திறனுடைய 4 இலவச LED விளக்குகள் வழங்கப்படும்.
2. இத்திட்டத்தை அமல்படுத்த பஞ்சாயத்து அலுவலகங்களுக்கும், மாநிலம் முழுவதும் நடத்தப்படும் PEETHA (People’s Empowerment – Enabling Transparency and Accountability of Odisha Initiative) முகாம்களுக்கும் விளக்குகள் வழங்கப்படும். இத்திட்டத்தின் பயன்களைப்பெற உயரியளவுகள் அங்கீகாரத்தை பயனாளிகள் வழங்கவேண்டும்.

52. சமீபத்தில் பறவை மருத்துவமனைகளை தொடங்க முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?

**விடை:** தில்லி

**விளக்கம்:**

1. முதன்முதலாக தில்லி மாநில அரசு அதன் விலங்கு சுகாதாரம் மற்றும் நலக்கொள்கை, 2018இன் ஒரு பகுதியாக தேசிய தலைநகரப் பகுதியில் பறவைகள் சிறப்பு சிகிச்சை மையம் ஒன்றை தொடங்க முடிவுசெய்துள்ளது. பல்வேறு நோய்களின் தடுப்பு, கட்டுப்பாடு மற்றும் ஒழிப்பு, நோய் கண்காணிப்பு, கடுங்கண்காணிப்பு மற்றும் கால்நடை சேவைகள் நீட்டிப்பு ஆகியவற்றின் மூலம் ஒட்டுமொத்த விலங்கு நலத்தை பாதுகாக்க இது நோக்கம் கொண்டுள்ளது.

53. எந்த நகரத்தில், 10 ஆவது இந்திய ரப்பர் கண்காட்சி தொடங்கியுள்ளது?

**விடை:** மும்பை

**விளக்கம்:**

1. 10ஆவது இந்திய ரப்பர் கண்காட்சியை ஜன.17 அன்று மும்பையில் உள்ள பாம்பே மாநாடு மற்றும் கண்காட்சி மையத்தில் மத்திய அமைச்சர் சுரேஷ் பிரபு தொடங்கிவைத்தார். ரப்பர் தொழிற்துறையின் அண்மைய தொழில்நுட்ப முன்னேற்றங்களை இந்தக் கண்காட்சி வெளிப்படுத்தும். மேலும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் தரக்கட்டுப்பாடு ஆகியவற்றின் மீதான தற்போதைய சந்தை நிலை, வசதிகள் மற்றும் சேவைகள் குறித்த விவாதம் இதில் மேற்கொள்ளப்படும்.

54. சாக்ஷம் - 2019 என்பது எந்த மத்திய அமைச்சகத்தின் கீழ் ஆண்டுதோறும் நடத்தப்படும் உயர்செறிவு பொதுமக்கள் மையமான பிரம்மாண்ட பரப்புரையாகும்?

**விடை:** பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம்

**விளக்கம்:**

1. சாக்ஷம் - 2019 என்பது மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கீழ், பெட்ரோலிய பாதுகாப்பு ஆராய்ச்சி சங்கத்தால் ஆண்டுதோறும் ஒரு மாதகாலம் நடத்தப்படும் உயர்செறிவு பொதுமக்கள் மையமான பிரம்மாண்ட பரப்புரையாகும்.

55. மாணவர்களுக்கான சௌர்யா விருது வழங்குவதாக அறிவித்துள்ள மாநில அரசு எது?

**விடை:** ஹரியானா

**விளக்கம்:**

1. சமுதாயத்தை பாதுகாப்பதிலும், மாநிலத்தில் சட்ட – ஒழுங்கைப் பராமரிப்பதிலும் பணியின் போது தங்கள் இன்னுயிரை ஈந்த மாநில காவல்துறையின் 71 தியாகிகளின் பெயரில், மாணவர்களுக்கான 'சௌர்யா விருது' வழங்கவுள்ளதாக ஹரியானா முதல்வர் மனோகர் லால் கட்டார் அறிவித்துள்ளார். 1966இல் மாநிலம் உருவானது முதல் பல்வேறு தாக்குதல்களிலும், எதிர்பாராத வன்முறைகளிலும் இறந்த அனைத்து 71 காவலரின் குடும்ப உறுப்பினர்களையும் கௌரவிக்கும் விதமாக, புது தில்லியில் அமைந்துள்ள தேசிய காவலர் நினைவிடத்தில் நடந்த முதல் மாநில அளவிலான விழாவின்போது மாநில அரசு இதனை அறிவித்தது.

56. 9ஆம் துடிப்பு மிக்க குஜராத் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டின் கருப்பொருள் என்ன?

**விடை:** Shaping a new India

**விளக்கம்:**

1. ஜன. 18 அன்று காந்தி நகரில் உள்ள மகாத்மா காந்தி கண்காட்சி மற்றும் மாநாட்டு மையத்தில் நடந்த 9ஆவது துடிப்புமிக்க குஜராத் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். உஸ்பெகிஸ்தான், ருவாண்டா, டென்மார்க், செக் குடியரசு மற்றும் மால்டா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 5 தலைவர்கள் உட்பட 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சர்வதேச மற்றும் இந்தியப் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். இதுதவிர பதினொரு சர்வதேச அமைப்புகள், பங்குதாராக இந்த மாநாட்டில் பங்கேற்றன.

57. 2ஆவது உலக ஆரஞ்சுத் திருவிழா நடைபெறும் நகரம் எது?

**விடை:** நாக்பூர்

**விளக்கம்:**

1. மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் வரும் ஜன. 19-21ஆம் தேதி வரை இரண்டாவது உலக ஆரஞ்சுத் திருவிழா நடைபெறுகிறது. புகழ்பெற்ற நாக்பூர் ஆரஞ்சுப் பழங்களின் பெருமையை உலகிற்கு காட்டவும் மற்றும் அதன் ஏற்றுமதியை அதிகரிக்கவும் இது உதவும். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வேளாண் வல்லுநர்கள் மற்றும் அறிவியலாளர்கள் இதில் பங்குபெறுவார்கள்.

58. எந்நகரத்தில், அதநவீன இந்திய திரைப்பட தேசிய அருங்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது?

**விடை:** மும்பை

**விளக்கம்:**

1. ஜனவரி 19 அன்று மும்பையில் இந்திய திரைப்பட தேசிய அருங்காட்சியகத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார். இந்த அதிநவீன அருங்காட்சியகம் ரூ. 140 கோடியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்திய திரைத்துறையின் நூற்றாண்டுகால வரலாற்று பார்வையாளர்களுக்கு கதைசொல்லும் பாவனையில் காட்சிப்பொருட்கள், வரைபடங்கள், கருவிகள், கலந்துரையாடல் காட்சிகள், பல்ஊடக காட்சிகள் மூலம் எடுத்துரைக்கப்படும்.

59. எந்தெந்த மாநிலங்களில் மூன்று புதிய கடற்படை விமானப் பிரிவுகளை அமைக்க இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது?

**விடை:** தமிழ்நாடு மற்றும் குஜராத்

**விளக்கம்:**

1. இந்திய கடற்படையின் ஒட்டுமொத்த பலத்தை அதிகரிக்கும் வகையில் தமிழ்நாடு, குஜராத் ஆகிய மாநிலங்களில் புதிதாக மூன்று கடற்படை விமானப்பிரிவுகள் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அத்துடன், கேரளா மற்றும் அந்தமானில் ஏற்கனவே உள்ள டார்னியர் விமான கண்காணிப்பு படைப்பிரிவில் கூடுதல் விமானங்களை சேர்க்கவும், அவற்றுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

60. பொதுப்பிரிவில் உள்ள ஏழைகளுக்கு 10 சதவீத இடஒதுக்கீடு வழங்க ஒப்புதல் அளித்துள்ள மாநிலங்கள் எவை?

**விடை:** ஜார்க்கண்ட் மற்றும் உத்திரப்பிரதேசம்

**விளக்கம்:**

1. பொதுப்பிரிவினரில் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு 10% இடஒதுக்கீடு அளிக்கும் சட்டத்துக்கு, உத்திரப்பிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தலைமையில் நடந்த மாநில அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது. முன்னதாக குஜராத், ஜார்க்கண்ட் மாநில அரசுகள் இந்த 10% இட ஒதுக்கீட்டுக்கு ஒப்புதல் அளித்திருந்தன. இப்போது மூன்றாவதாக உத்திரப்பிரதேச அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

61. டிப்போ (Diffo) பாலம், எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

**விடை:** அருணாச்சலப் பிரதேசம்

**விளக்கம்:**

1. அருணாச்சலப்பிரதேசத்தில், கீழ் திபாங் பள்ளத்தாக்கு மாவட்டத்தில் பாயும் டிப்போ ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ள டிப்போ பாலத்தை, மத்திய பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன், ஜன.18 அன்று திறந்து வைத்தார். 426 மீ., நீளமுடைய இப்பாலம், மாநிலத்தின் ரோயிங் - கொரோன் - பாயா சாலையில் அமைந்துள்ளது.

62. எந்த நகரத்தில், இளையோர் வெளிநாடுவாழ் இந்தியர் தின மாநாடு நடைபெற்றது?

**விடை:** வாரணாசி

**விளக்கம்:**

1. ஜன.21 அன்று உத்திரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் இளையோர் வெளிநாடு வாழ் இந்தியர் தின மாநாடு தொடங்கியது. இந்த மாநாட்டுக்கான கருப்பொருள், "Role of Indian Diaspora in building New India" ஆகும். இந்த மாநாட்டை பிரதமர் மோடி நாளை முறையாக தொடங்கி வைப்பார்.
2. மொரிசிய நாட்டு பிரதமர் பிரவிந்த் குமார் ஜக்நாத், இம்மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த உலக தலைவர்கள் இதில் பங்கேற்று புதிய இந்தியாவிற்கான வெளிநாடு வாழ் இந்தியர்களின் பங்களிப்பு குறித்து உரையாற்றுவார்கள்.

63. எந்நகரத்தில், இந்தியாவின் முதல் தனியார் துறை ஹோவிட்சர் துப்பாக்கி தொழிற்சாலை அமையவுள்ளது?

**விடை:** சூரத்

**விளக்கம்:**

1. குஜராத்தின் சூரத் மாவட்டத்தில் உள்ள ஹசிரா நகரத்தில் லார்சன் & டுப்ரோ (L & T) நிறுவனம் நிறுவியுள்ள இந்தியாவின் முதலாவது தனியார்துறை கவச அமைப்புகள் வளாகத்தை (Armoured Systems Complex – ASC) பிரதமர் மோடி, ஜன.19 அன்று திறந்துவைத்தார். 2017ம் ஆண்டில் இந்திய ராணுவத்துக்கு 100 பீரங்கி துப்பாக்கிகள் உற்பத்தி செய்து தரும் ஒப்பந்தம் L & T நிறுவனத்துக்குக் கிடைத்தது. இதன் மதிப்பு ரூ.4,500 கோடி ஆகும். 'இந்தியாவில் தயாரிப்போம்' என்ற திட்டத்தின் கீழ் இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

64. "RDP இந்தியா" என்ற கைப்பேசி செயலியை அறிமுகப்படுத்திய அமைச்சகம் எது?

**விடை:** பாதுகாப்பு அமைச்சகம்

**விளக்கம்:**

- பாதுகாப்பு அமைச்சகமானது 70வது குடியரசு தினத்தில் "RDP இந்தியா – 2019" எனும் கைபேசி செயலியை தொடங்கியுள்ளது. இந்த செயலியை பயன்படுத்தி இந்த ஆண்டு ராஜபாதையில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பின் சிறப்பம்சங்களை காண முடியும்.
- இந்த முன்முயற்சி அரசின் "டிஜிட்டல் இந்தியா" பிரச்சாரத்துடன் ஒத்திசைந்துள்ளது.

65. இலங்கையின் எந்த விமான நிலையத்தை இந்தியா 40 ஆண்டுகளுக்கு நிர்வகிக்க உள்ளது?

**விடை:** ராஜபக்சே சர்வதேச விமான நிலையம்

**விளக்கம்:**

- இலங்கையின் மாத்தளையில் உள்ள ராஜபக்சே சர்வதேச விமான நிலையத்தின் 70 சதவீத பங்குகளை இந்தியாவுக்கு அளிக்கும் ஒப்பந்தமானது இரு நாடுகளின் விமான நிலையங்களுக்கு இடையே கையெழுத்தாக உள்ளது.
  - இதன் மூலம் ராஜபக்சே சர்வதேச விமான நிலையத்தை இந்தியா 40 ஆண்டுகள் நிர்வகிக்கும்.

குறிப்பு:

- இலங்கையில் உள்ள ஹம்பன்தோட்டா துறைமுகத்தை சீனாவிடம் இலங்கை ஒப்படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

66. நாட்டின் முதல் புவியியல் குறியீடு நிலையம் (GI Store) எங்கு தொடங்கப்பட்டுள்ளது?

**விடை:** டபோலிம் சர்வதேச விமான நிலையம்

**விளக்கம்:**

- கைவினைஞர்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் தயாரித்த உள்ளூர் தயாரிப்புகளை மேம்படுத்துவதற்காக, நாட்டின் முதல் புவியியல் குறியீடு (GI) நிலையத்தை கோவாவின் டபோலிம் சர்வதேச விமான நிலையத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
- மேலும் பல்வேறு இடங்களில் இந்நிலையம் தொடங்கப்பட உள்ளது.

67. அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு, பரிசு பெட்டகம் வழங்கும் திட்டத்தை தொடங்கியுள்ள மாநிலம் எது?

**விடை:** மகாராஷ்டிரா

**விளக்கம்:**

- குழந்தைகள் இறப்பு விகிதத்தை குறைக்கும் வகையில் அரசு மருத்துவனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு,“பரிசு பெட்டகம்” வழங்கும் திட்டத்தை மகாராஷ்டிரா மாநில அரசு தொடங்கியுள்ளது.

68. (IAFTX – 2019) இந்தியா ஆப்பிரிக்கா களப்பயிற்சி – 2019ஆனது எங்கு நடைபெற உள்ளது?

**விடை:** புனே (மகாராஷ்டிரா)

**விளக்கம்:**

- மனிதாபிமான சுரங்க நடவடிக்கைகள் மற்றும் கூட்டு சமாதான நடவடிக்கைகளில் இராணுவங்களை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்ட, இந்தியா ஆப்ரிக்கா களப்பயிற்சியானது (IAFTX – 2019 – Indian Africa Field Training Exercise) மார்ச் 18 முதல் மார்ச் 27 வரை புனேவில் நடைபெற உள்ளது.
- IAFTX கூட்டுப் பயிற்சியானது இந்தியா மற்றும் 12 ஆப்ரிக்க நாடுகளுக்கிடையே நடத்தப்பட உள்ளது.

69. அருணாச்சலப் பிரதேசத்தின், மாநில திருவிழாவாக சமீபத்தில் அறிவிக்கப்பட்டது எது?

**விடை:** பக்கே பகா ஹார்ன்பில் திருவிழா (PPHF – Pakke Paga Hornbill)

**விளக்கம்:**

- பக்கே புலிகள் காப்பகத்தில் உள்ள ஹார்பில் பறவைகளைப் பாதுகாக்கும் “நியாசி பழங்குடியினரின்” முன்முயற்சியை அங்கீகரிப்பதற்காக, அருணாச்சலப் பிரதேச மாநில அரசானது,“பக்கே பகா ஹார்ன்பில் திருவிழாவை” மாநில திருவிழாவாக அறிவித்துள்ளது.
  - இத்திருவிழாவானது 2015 முதல் கொண்டாடப்பட்டு வருகிறது.

70. 70வது குடியரசு தின விழாவின் கருப்பொருள் என்ன?

**விடை:** காந்தியின் கொள்கைகள் மற்றும் அவரின் வாழ்க்கை

**விளக்கம்:**

- 70வது இந்திய குடியரசு தினம்
  - 1950 ஜனவரி 26 அன்று இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்ததை நினைவு படுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26,-ல் இந்திய குடியரசு தினம் கொண்டாடப்படுகிறது.
  - இந்த வருடம்(2019) 70வது குடியரசு தினமாகும்.
  - கருப்பொருள்: காந்தியடிகளின் 150வது பிறந்த ஆண்டு என்பதால் அவரது கொள்கைகள் மற்றும் வாழ்க்கையை கருப்பொருளாக கொண்டு விழா நடைபெற்றது.
  - இதில் தென்னாப்பிரிக்கா அதிபா் சிரில் ரமாபோசா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

71. இந்தியாவானது,“3 ஆண்டு ஒத்துழைப்பு திட்டத்தை” எந்த நாட்டுடன் செயல்படுத்த உள்ளது?

**விடை:** தென்னாப்பிரிக்கா

**விளக்கம்:**

- இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையே பாதுகாப்பு, வா்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த “3 ஆண்டு ஒத்துழைப்பு திட்டம்”(3 year strategic programme) செயல்படுத்தப்பட உள்ளது.

72. என்ஜின் இல்லாமல் இயங்கும் இரயிலின்(இரயில் 18 எக்ஸ்பிரஸ்) புதிய பெயர் என்ன?

**விடை:** வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்

**விளக்கம்:**

- என்ஜின் இல்லாமல் இயங்கும் இந்தியாவின் முதல் அதிவேக இரயிலான,“இரயில் 18 எக்ஸ்பிரஸின்” பெயர் “வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்” என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
  - இந்த இரயிலானது டெல்லி – வாரணாசி இடையே இயக்கப்படுகிறது இதன் வேகம் 180Kmph

73. பிரவாசி ஓய்வூதிய திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?

**விடை:** கேரளா

**விளக்கம்:**

- குடியிருப்பு அல்லாதவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்காக (Kerala to launch NRI Pension Scheme)“பிரவாசி ஓய்வூதிய திட்டம்” என்ற திட்டத்தை கேரளா அறிமுகப்படுத்தியுள்ளது.

74. அந்தமான் - நிகோபார் தீவின் 3வது விமான தளத்தின் பெயர் என்ன?
**விடை:** INS KOHASSA
**விளக்கம்:**
  - அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளில் உள்ள டிஜிலியூரில் INS KOHASSA என்ற புதிய கடற்படை விமானத் தளத்தை கடற்படை தலைமை அட்மிரலான சுனில் லம்பா தொடங்கி வைத்துள்ளது.
  - இது அந்தமான் - நிகோபார் தீவுகளில் அமைக்கப்பட்ட 3வது விமான தளமாகும். இந்த விமானத் தளமானது பாதுகாப்புத் துறைக்கும் பயணிகள் விமானப் போக்குவரத்திற்கும் பயன்படுத்தப்படும்.

75. ‘‘பிரவசி தீர்த்த தர்ஷன் யோஜனா’’ திட்டத்திற்கான வயது வரம்பு என்ன?
**விடை:** 45 முதல் 65 வயது வரை
**விளக்கம்:**
  - இந்தியாவில் உள்ள சமயம் சார்ந்த பகுதிகளுக்கு அரசு நிதியளிக்கும் சுற்றுலா திட்டமான ‘‘பிரவசி தீர்த்த தர்சன் யோஜனா’’ என்ற திட்டத்தை இந்திய பிரதமர் புது டெல்லியில் தொடங்கி வைத்துள்ளார்.
  - இதற்கான வயது வரம்பு 45 முதல் 65 வயது ஆகும்.

76. நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் அருங்காட்சியகம் எங்கு உள்ளது?
**விடை:** புது டெல்லி
**விளக்கம்:**
  - நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் 122வது பிறந்தநாள் விழாவை (ஜனவரி 23, 2019) நினைவு கூறும் வகையில் செங்கோட்டையில்(புதுடெல்லி) சுபாஷ் சந்திர போஸ் அருங்காட்சியகத்தை இந்திய பிரதமர் திறந்து வைத்துள்ளார்.

77. ‘‘ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு’’ என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?
**விடை:** உத்திரப் பிரதேசம்
**விளக்கம்:**
  - மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் உற்பத்தியாகும் முக்கிய பொருளை காட்சிப்படுத்துவதற்காக ‘‘ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு (One district one product)” என்ற திட்டத்தை உத்திரப் பிரதேச அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
  - இதன் மூலம் அம்மாநிலத்தின் பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்படும்.

78. சவுபாக்கியா திட்டத்தின் நோக்கம் என்ன?
**விடை:** 100 சதவீத வீடுகளுக்கு மின் இணைப்பு
**விளக்கம்:**

- “அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம்” என்ற சவுபாக்கியா திட்டத்தின் கீழ் 25 மாநிலங்களில் 100 சதவீத வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
    - தினமும் 60ஆயிரம் வீடுகளுக்கு மின் இணைப்பு தருவது என திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன.

79. பொருளாதாரத்தில் நலிவடைந்த நகர்ப்புற இளைஞர்களுக்கு 100 நாட்கள் வேலை வழங்கும் மாநிலம் எது?

**விடை:** மத்தியப் பிரதேசம்

**விளக்கம்:**

- பொருளாதாரத்தில் நலிவடைந்த நகர்ப்புற இளைஞர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 100 நாட்கள் வேலை வழங்கப்படும் என மத்தியப் பிரதேச முதல்வர் கமல்நாத் அறிவித்துள்ளார்.
    - தனித்திறமையை வளர்த்துக் கொள்ளவும், பணிக்குச் செல்லும்போது இந்த பயிற்சி பயனுள்ளதாக இருக்கும்.

# உலக நிகழ்வுகள்

1. பிரேசிலின் புதிய அதிபர் யார்?

**விடை:** ஜேர் போல்சோநரோ

**விளக்கம்:**

1. பிரேசிலின் புதிய அதிபராக ஜேர் போல்சோநரோ (Jair Bolsonaro) பதவியேற்றுள்ளார். இவர் அடுத்த நான்காண்டுகளுக்கு அதிபராகப் பொறுப்பு வகிப்பார்.
2. சமூக தாராளவாத கட்சியின் உறுப்பினரான இவர், மைக்கேல் டெமருக்குப் பிறகு அதிபராக தெரிவாகியுள்ளார். தொழிலாளர் கட்சி வேட்பாளர் பெர்னாண்டோ ஹேடடுக்கு எதிராக மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் அவர் வென்றார்.

2. யுனெஸ்கோவிலிருந்து அதிகாரப்பூர்வமாக வெளியேறியுள்ள நாடுகள் எவை?

**விடை:** அமெரிக்கா மற்றும் இஸ்ரேல்

**விளக்கம்:**

1. 2018ன் முடிவில், அமெரிக்காவும், இஸ்ரேலும் அதிகாரப்பூர்வமாக, UNESCO அமைப்பிலிருந்து வெளியேறியுள்ளன. கடந்த 2017ம் ஆண்டு, இஸ்ரேலுக்கு எதிராகச் செயல்படுவதாகக் குற்றம் சாட்டி, இருநாடும் UNESCO அமைப்பிலிருந்து வெளியேறுவது குறித்த முடிவை வெளியிட்டன.

2. இரண்டாம் உலகப்போரைத் தொடர்ந்து, அமைதியை நிலைநாட்டும் நோக்கில் கூட்டாகத் தாம் உருவாக்கிய UNESCO அமைப்பில், அடிப்படை மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்று, அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. UNESCO இல் 1949ம் ஆண்டு இஸ்ரேல் இணைந்தது.

3. பேஹ்மான் (Fehman) பட்டை நிரந்தர இணைப்பு என்பது எந்த இரண்டு நாட்டின் தீவுகளை இணைப்பதற்காக முன்மொழியப்பட்ட சுரங்கப்பாதை திட்டம்?

**விடை:** டென்மார்க் மற்றும் ஜெர்மனி

**விளக்கம்:**

1. சுற்றுச்சூழல் முரண்பாடுகள் இருந்தபோதிலும் டென்மார்க் மற்றும் ஜெர்மனியை இணைக்கும் $8 பில்லியன் டாலர் மதிப்பிலான இரயில் மற்றும் சாலை சுரங்கப்பாதை திட்டத்துக்கு சமீபத்தில் ஜெர்மானிய அதிகாரிகள் ஒப்புதல் தெரிவித்துள்ளனர். இத்திட்டம் 4 வழித்தட நெடுஞ்சாலையையும், இரண்டு வழித்தட ரயில்வேயையும் கொண்டிருக்கும்.
2. ஐரோப்பிய ஒன்றியமும் இத்திட்டத்திற்கு பகுதியளவு நிதியுதவி அளிக்கிறது. 19 கி.மீ., நீள பேஹ்மான் (Fehman) பட்டை நிரந்தர இணைப்பானது டென்மார்க்கின் லாலாந்து தீவையும், ஜெர்மனியின் பேஹ்மான் தீவையும் சுரங்கப்பாதை வழியாக இணைக்கும்.

4. சர்வதேச இணையம், தொழில்நுட்ப நிறுவனம் மீது GAFA வரியை அறிமுகப்படுத்தியுள்ள ஐரோப்பிய நாடு எது?

**விடை:** பிரான்ஸ்

**விளக்கம்:**

1. கூகுள் (G), ஆப்பிள் (A), பேஸ்புக் (F) மற்றும் அமேசான் (A) – மிகப்பெரிய இணைய மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் பெயரால் பிரான்சில் சமீபத்தில் “GAFA வரி” என்ற ஒரு புதிய வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மிகப்பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள் ஐரோப்பாவில் தாங்கள் செய்யும் மிகப்பெரிய வணிகங்கள் மீதான வரிகளில் ஒரு நியாயமான பங்கை செலுத்துவதை இது உறுதிப்படுத்துகின்றது.

5. அண்மையில் எந்த நாட்டில் ‘பபுக்’ என்ற வெப்பமண்டல புயல் ஏற்பட்டது?

**விடை:** தாய்லாந்து

**விளக்கம்:**

1. ‘பபுக்’ என்ற வெப்பமண்டல புயல் தாய்லாந்தை தாக்கியதன் காரணமாக ஏற்பட்ட வெள்ளம் & மின்தடையை அடுத்து ஜன.5 அன்று அந்நாட்டின் தென் பகுதியை சேர்ந்த சுமார் 30,000 மக்கள் அவ்விடத்தை விட்டு வெளியேறி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.
2. மணிக்கு 75 கி.மீ., வேகத்தில் வீசிய இந்தப் புயல், பெருமழை மற்றும் புயல் காற்றால் நாட்டின் தெற்குப்பகுதியை சூறையாடியது. கடந்த 30 ஆண்டுகளில் இப்பகுதியை தாக்கிய மிக மோசமான புயல் இது என்று கருதப்படுகிறது. தற்போது இப்புயல், அந்தமான் கடலில் மையம் கொண்டுள்ளது. இதனால் அங்கு ‘மஞ்சள் எச்சரிக்கை’ விடுக்கப்பட்டுள்ளது.

6. அண்மையில் ஆசிய மறுஉறுதி திட்ட (ARIA) சட்டத்தில் கையெழுத்திட்ட நாடு எது?

**விடை:** அமெரிக்கா

**விளக்கம்:**

1. ஆசிய மறுஉறுதி திட்ட (ARIA) சட்டதத்தில் அமெரிக்க அதிபர் டொனால்டு J. டிரம்ப் கையெழுத்திட்டு உள்ளார். இச்சட்டமானது அமெரிக்காவின் பாதுகாப்பு, பொருளாதார நலன்கள் மற்றும் இந்திய – பசிபிக் பிராந்தியத்தின் மதிப்புகள் ஆகியவற்றை அதிகரிப்பதற்காக ஒரு பன்முகப்படுத்தப்பட்ட அமெரிக்க உத்தியை உருவாக்குகிறது.
2. சிறப்பாக கிழக்கு & தென்கிழக்கு ஆசியாவில் உள்ள அமெரிக்கத் திட்டங்களுக்கு $1.5 பில்லியன் டாலர் வரை செலவிட இது அங்கீகாரம் வழங்குகிறது. இந்திய – பசிபிக் பிராந்தியத்திற்கான நீண்டகால உத்திசார் பார்வை மற்றும் ஒரு விரிவான, பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் கொள்கை சார் அமெரிக்க கொள்கையை உருவாக்குவதற்கு இது வழிவகுக்கும்.

7. பதவிக்காலம் முடியும் முன்னரே பட்டத்தை துறந்த மலேசியாவின் முதல் அரசர் யார்?

**விடை:** ஐந்தாம் முகமது

**விளக்கம்:**

1. மலேசிய அரசர் ஐந்தாம் முகமது தனது அரச பட்டத்தைத் துறந்ததாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்நாடு 1957ம் ஆண்டில் பிரிட்டனிடமிருந்து விடுதலை பெற்றதற்குப் பிறகு, மன்னரொருவர் பட்டம் துறப்பது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், அவர் அரசர் பட்டத்தைத் துறந்ததற்கான காரணம் எதுவும் மலேசிய அரசவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை.

8. சர்ச்சைக்குரிய குடியுரிமை (திருத்தம்) மசோதா (2019), எந்த நாடுகளைச் சேர்ந்த முஸ்லீம் அல்லாத மக்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க முற்படுகிறது?

**விடை:** வங்கதேசம், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான்

**விளக்கம்:**

1. வங்கதேசம், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சோந்த முஸ்லிமல்லாத மக்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க முற்படுகிற சர்ச்சைக்குரிய குடியுரிமை (திருத்தம்) மசோதா (2019) மக்களவையில் ஜன.8 அன்று நிறைவேற்றப்பட்டது. குறிப்பிடப்பட்ட இந்நாடுகளிலிருந்து இந்தியாவில் குடியேறியுள்ள ஹிந்துக்கள், சீக்கியர்கள், பாரசீகர்கள், பௌத்தர்கள், சமணர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோருக்கு, இம்மசோதாவின் மூலம் இந்திய குடியுரிமை கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. உள்துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி, இந்திய குடியுரிமை பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளவர்களுக்கு இந்திய குடியுரிமையை அளிப்பதே இதன் நோக்கமாகும்.

9. 2019 ஆப்பிரிக்கா கப் ஆப் நேஷனல் போட்டிகளை நடத்தவுள்ள நாடு எது?

**விடை:** எகிப்து

**விளக்கம்:**

1. போட்டிக்கான ஏற்பாடுகளில் தாமதம் செய்ததாலும், பாதுகாப்பு குறித்த அச்சத்தாலும் மெய்யாக இப்போட்டியை நடத்த வேண்டிய கேமரூன் நீக்கப்பட்டதை அடுத்து, வரும் ஜூன் 15 முதல் ஜூலை 13 வரை 2019ம் ஆண்டுக்கான ஆப்பிரிக்கா கப் ஆப் நேஷன்ஸ் போட்டிகளை எகிப்து நடத்த உள்ளது. ஆப்பிரிக்க கால்பந்து கூட்டமைப்பின் (CAF) தலைவர் அஹ்மத் அஹ்மத், அண்மையில் இதனை செனகல் தலைநகர் டக்காரில் அறிவித்தார்.

10. எந்த நாட்டில், வெளியுறவு அமைச்சர்கள் அளவிலான முதலாவது இந்திய – மத்திய ஆசிய பேச்சுவார்த்தையை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது?

**விடை:** உஸ்பெகிஸ்தான்

**விளக்கம்:**

1. வெளியுறவு அமைச்சர்கள் அளவிலான முதலாவது இந்திய – மத்திய ஆசிய பேச்சுவார்த்தை, ஜன.12 & 13 ஆகிய தேதிகளில் உஸ்பெகிஸ்தானின் சமர்க்கண்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தைக்கு, வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், உஸ்பெகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அப்துலசிஸ் கமிலோவ் ஆகியோர் இணைந்து தலைமைதாங்குவர். இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக ஆப்கானிஸ்தான் வெளியுறவு அமைச்சரும் பங்கேற்கிறார்.

11. 2018 EIU மக்களாட்சி தரவரிசையில் இந்தியாவின் தரநிலை என்ன?

**விடை:** 41ஆவது

**விளக்கம்:**

1. 11ஆவது EIU மக்களாட்சி தரவரிசையில் இந்தியா 41ஆவது இடத்தில் உள்ளது. மக்களாட்சி நடைபெறும் 165 உலக நாடுகள் மற்றும் இரு யூனியன் பிரதேசங்களின் மக்களாட்சி நிலையை இந்தத் தரவரிசை காட்சிகிறது. இதனை விளக்கும் 'Democracy 2018: Me too? Political Participation, Protest & Democracy' என்ற தலைப்பிலான அறிக்கை, குறிப்பாக பாரதீய ஜனதா கட்சியை (BJP) பெருமளவு சாடியுள்ளது.
2. தேர்தல் செயல்முறை மற்றும் பன்முகவாதம், அரசாங்கத்தின் செயல்பாடு, அரசியல் பங்கேற்பு, அரசியல் கலாச்சாரம் மற்றும் சிவில் உரிமைகள் ஆகிய ஐந்து அளவுருக்களின் அடிப்படையில் பொருளாதார புலனாய்வு பிரிவு நாடுகளை தரவரிசைப்படுத்தியுள்ளது. இந்த 5 அளவுருக்களில், அரசியல் கலாச்சாரத்தில் இந்தியா மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இத்தரவரிசையில் நார்வே முதலிடத்தையும், ஐஸ்லாந்து, சுவீடன், நியூசிலாந்து மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களையும் பிடித்துள்ளன.

12. மேற்காசியாவின் மிகப்பெரிய பேராலயத்தை அதன் புதிய நிர்வாக தலைநகரில் திறந்துள்ள ஆப்பிரிக்க நாடு எது?

**விடை:** எகிப்து

**விளக்கம்:**

1. எகிப்து நாடு அண்மையில் கெய்ரோவுக்கு 45 கி.மீ கிழக்கே அதன் புதிய நிர்வாக தலைநகரத்தில் மேற்கு ஆசியாவின் மிகப்பெரிய பேராலயத்தை திறந்துள்ளது. பெரும்பாலும் இஸ்லாமிய மக்கள் வசிக்கும் தேசத்தில், சகிப்புத் தன்மையின் அடையாளமாக காப்டிக் கிறிஸ்துமஸ் தினத்தன்று புதிதாக கட்டப்பட்ட பிறப்பின் பேராலயத்தையும் (Cathedral of Nativity), அல்-பத்தா அல்-அலீம் மசூதியையும் அந்நாட்டு அதிபர் அப்துல் பத்தா அல் - சிசி திறந்து வைத்தார்.

13. 2019 ஹென்லி & பார்ட்னர்ஸ் கடவுச்சீட்டு பட்டியலில், இந்தியா எத்தனையாவது இடத்தை பிடித்துள்ளது?

**விடை:** 79 ஆவது

**விளக்கம்:**

1. 2019 ஹென்லி & பார்ட்னர்ஸ் கடவுச்சீட்டு தரவரிசைப் பட்டியலின்படி உலகின் 79 ஆவது மிகவும் சக்திவாய்ந்த கடவுச்சீட்டாக இந்திய நாட்டின் கடவுச்சீட்டு உள்ளது. நுழைவு இசைவு (Visa) இல்லாமல் எத்தனை நாடுகளுக்கு முன்னரே செல்லமுடியும் என்பதன் அடிப்படையில், ஹென்லி, உலக நாடுகளின் கடவுச்சீட்டுகளை தரவரிசைப்படுத்தியுள்ளது.
2. இந்திய நாட்டின் கடவுச்சீட்டை பயன்படுத்தி ஒருவர் 61 நாடுகளுக்கு நுழைவு இசைவு இல்லாமல் பயணம் செய்ய இயலும். இப்பட்டியலில் ஜப்பான் முதலிடத்தில் உள்ளது. ஜப்பான் கடவுச்சீட்டை பயன்படுத்தி 190 நாடுகளுக்கு விசா இல்லாமல் செல்ல முடியும். 189 நாடுகளுக்கு சிங்கப்பூர் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் இரண்டாவது இடத்தில் உள்ளன. 158 நாடுகளுடன் பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் மூன்றாவது இடத்தில் உள்ளன.

14. அண்மையில், 'Future of Consumption in Fast – Growth Consumer Market – India' என்ற அறிக்கையை வெளியிட்ட சர்வதேச அமைப்பு எது?

**விடை:** உலக பொருளாதார மன்றம்

**விளக்கம்:**

1. உலக பொருளாதார மன்றம், ‘‘இந்தியாவில் விரைவாக வளரும் நுகர்வோர் சந்தையின் எதிர் காலம்’’ என்று தலைப்பிடப்பட்ட தனது சமீபத்திய அறிக்கையை வெளியிட்டது. இதில், 2030 ஆம் ஆண்டளவில் அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா உலகின் 3ஆவது மிகப் பெரிய நுகர்வோர் சந்தையாக மாறும் என்று குறிப்பிட்டுள்ளது.
2. தற்போது $1.5 டிரில்லியன் டாலராக உள்ள இந்திய நுகர்வோர் சந்தையானது 2030இல் $6 டிரில்லியன் டாலராக உயரும் என கூறப்பட்டுள்ளது. ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் 7.5% என்ற அளவில், தற்போது இந்தியா, உலகின் ஆறாவது மிகப்பெரிய பொருளாதாரமாக உள்ளது.

15. வெனிசுலாவின் புதிய அதிபராக பதவியேற்றுள்ளவர் யார்?

**விடை:** நிகோலஸ் மதுரோ (Nicolas Maduro)

**விளக்கம்:**

1. சர்வதேச அளவில் அவரது மறுதேர்தல் சட்டவிரோதமானது என்று விமர்சிக்கப்பட்ட போதிலும், ஜனவரி 10 அன்று வெனிசுலாவின் அதிபராக 2ஆவது முறையாக நிகோலஸ் மதுரோ பதவியேற்றார். அர்ஜென்டினா, மெக்சிகோ, சிலி, கொலம்பியா, பிரேசில், கனடா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட அண்டை நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்க மாகாணங்களின் அமைப்பு போன்ற அமைப்புகளும் இந்தத் தேர்தல் முடிவு மோசடியானது என கண்டனம் தெரிவித்துள்ளன.

16. புது தில்லியில் நடந்த ரைசினா பேச்சுவார்த்தையில் ‘கண்டுபிடிப்புக்கான நேரிய மதிப்பு – Fair Value for Innovation’ ஐ அறிமுகப்படுத்திய நாடு எது?

**விடை:** அமெரிக்கா

**விளக்கம்:**

1. புது தில்லியில் நடந்த நான்காவது ரைசினா பேச்சுவார்த்தையின் போது ‘கண்டுபிடிப்புக்கான நேரிய மதிப்பு’ என்று தலைப்பிடப்பட்ட புத்தாக்க திட்டத்தை அமெரிக்கா அறிமுகப்படுத்தியது. அமெரிக்க வர்த்தக தொழிற்சபையின் சர்வதேச கண்டுபிடிப்பு கொள்கை மையம் (GIPC) இதனை அறிமுகப்படுத்தியுள்ளது.

2. இது புதுமையான கண்டுபிடிப்புகளைத் தூண்டும் பொருளாதார ஆராய்ச்சிகளை ஆராய்வதுடன், இந்தியா மற்றும் உலகம் முழுவதிலும் ஆராய்ச்சி, வாதிடல், கூட்டாண்மைகள் மற்றும் திட்டங்கள் மூலம் புத்தாக்கத்திற்கான மூலதனத்தை கொள்கை உருவாக்குநர்கள் எவ்வாறு கையாளுவர் என்பதையும் ஆராயும்.

17. G – 77 குழுவின் தலைவராகியுள்ள நாடு எது?

**விடை:** பாலஸ்தீனம்

**விளக்கம்:**

1. ஜனவரி 15 அன்று G – 77 குழுவின் தலைவராக பாலஸ்தீனம் ஆனது. பன்முகச் சார்பியம் மீதான 'தாக்குதல்களை' எதிர்கொள்ளும் வாக்குறுதி மற்றும் இஸ்ரேலிய – பாலஸ்தீனிய மோதலில் சமாதானப் போக்கிற்கான தீர்வை பெறுவதற்கான ஓர் உறுதிமொழியுடன் எகிப்திய அதிபர் அப்தல் பத்தா அல் - சிசியிடம் இருந்து பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸ் பொறுப்பை பெற்றுக் கொண்டார்.
2. பாலஸ்தீனத்தை G – 77 குழுவின் தலைமைப்பதவியில் 2019இல் தெரிவு செய்வது என்னும் முடிவு அந்தக் குழுவின் உறுப்பு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களால் 2018 செப்டம்பரில் எடுக்கப்பட்டது. இதற்காக, 2018 செப்டம்பரில் எடுக்கப்பட்டது. இதற்காக, 2018இல் ஐக்கிய நாடுகள் பொது அவையானது பாலஸ்தீனத்தை கூடுதல் சலுகைகள் மற்றும் உரிமைகள் கொள்ளச் செய்யும் ஒரு தீர்மானத்தை அங்கீகரித்தது.

18. உலகின் முதல் மனித உரிமைகள் தொலைக்காட்சி சேவை தொடங்கப்பட்டுள்ள நகரம் எது?

**விடை:** லண்டன்

**விளக்கம்:**

1. மனித உரிமைகளுக்கான உலகின் முதல் தொலைக்காட்சி அலைவரிசையை லண்டனில் சர்வதேச மனித உரிமைகள் ஆய்வகம் தொடங்கியது. மையநீரோட்ட ஊடகம் தவிர்க்கும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சனைகளில் இந்த அலைவரிசை தொடர்ந்து கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.
2. ஐரோப்பா, லத்தின் அமெரிக்கா, மத்திய கிழக்காசிய பகுதிகளைச் சேர்ந்த 20 நாடுகளில் இணைய அடிப்படையில் இந்தச் சேவை இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

19. ஜெர்மன் நாடாளுமன்றத்தால் தோற்றுவாயில் பாதுகாப்பான நாடுகள் (Safe Countries of Origin) என வகைப்படுத்தப்பட்டுள்ள வட ஆப்பிரிக்க நாடுகள் எது / எவை?

**விடை:** அல்ஜீரியா, துனிசியா, மொராக்கோ

**விளக்கம்:**

1. அல்ஜீரியா, துனிசியா, மொராக்கோ மற்றும் ஜோர்ஜியா ஆகிய வட ஆப்பிரிக்க நாடுகளை தோற்றுவாயில் பாதுகாப்பான நாடுகளாக வகைப்படுத்துவதற்கான ஒரு வரைவு சட்டத்தை ஜெர்மன் நாடாளுமன்றம் அண்மையில் நிறைவேற்றியது. ஜெர்மன் கூட்டமைப்பு கழகம் இந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்த பின், இந்நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஜெர்மனியில் தஞ்சமடைவதற்கான நடைமுறைகள் துரிதப்படுத்தப்படும், தற்போது ஜெர்மனியில் உள்ள இந்த நாடுகளைச் சேர்ந்தோர், தங்களின் சொந்த நாடு திரும்புவதற்கான நடவடிக்கைகளும் விரைவுபடுத்தப்படும்.

20. சுவீடனின் புதிய பிரதமர் யார்?

**விடை:** ஸ்டீபன் லோப்வென் (Stefan Lofven)

**விளக்கம்:**

1. சமூக ஜனநாயகவாதிகள், பசுமைக்கட்சி, லிபரல் கட்சி மற்றும் மத்தியக்கட்சி ஆகியவற்றுக்கு இடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்ட பின், லோப்வெனுக்கு எதிராக வாக்களிப்பதிலிருந்து இடதுசாரி கட்சி விலகிவிட ஒப்புக் கொண்டபின், ஜனவரி 18 அன்று சுவீடனின் பிரதம அமைச்சராக ஸ்டீபன் லோப்வென் இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜனவரி 21 அன்று அவர் தனது புதிய அரசையும் அதன் முழுத்திட்டத்தையும் அதிகாரப்பூர்வமாக முன்வைப்பார்.

21. ஏழாவது ASEAN - இந்திய சுற்றுலாத்துறை அமைச்சர்கள் சந்திப்பு நடந்த நகரம் எது?

**விடை:** ஹ லாங் (Ha Long)

**விளக்கம்:**

1. ஜனவரி 18 அன்று வியட்நாமில் உள்ள ஹ லாங் நகரத்தில், ஏழாவது ASEAN - இந்திய சுற்றுலாத்துறை அமைச்சர்கள் சந்திப்பு நடந்தது. இந்திய

சுற்றுலாத்துறை அமைச்சர் K J அல்போன்சும், வியட்நாமிய அமைச்சர் குயென் கோக் தியெனும் இணைந்து சுற்றுலா அமைச்சர்களின் இந்தச் சந்திப்புக்கு தலைமை தாங்கினர்.

2. உச்சிமாநாட்டிற்குப் பின், ASEAN - இந்திய சுற்றுலா ஒத்துழைப்பு ஆண்டு 2019ஐ அமைச்சர்கள் அறிமுகப்படுத்தினர். மேலும் ASEAN மற்றும் இந்தியாவிற்கும் இடையேயான மக்களைச் சார்ந்த மக்கள் பரிமாற்றங்களை மேம்படுத்துவதற்காக இருவழி சுற்றுலாப் பயணங்களை அதிகரிப்பது தொடர்பான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு எதிர் நோக்கியுள்ளனர்.

22. 2020ஆம் ஆண்டிற்கான கட்டிடக்கலையின் உலக தலைநகரமாக அறிவிக்கப்பட்டுள்ள நகரம் எது?

**விடை:** ரியோ டி ஜெனிரோ

**விளக்கம்:**

1. ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பானது (UNESCO) 2020ஆம் ஆண்டுக்கான கட்டிடக்கலையின் உலக தலைநகராக பிரேசிலிய நகரம் ரியோ டி ஜெனிரோவை அறிவித்துள்ளது. UNESCO & கட்டிடக் கலைஞர்களின் சர்வதேச ஒன்றியத்தால் (UIA) 2018இல் தொடங்கப்பட்ட திட்டத்தின் கீழ், இந்தப் பட்டத்தைப் பெறும் முதல் நகரமாக ரியோ உள்ளது.
2. மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கட்டிடக்கலைஞர்களின் சர்வதேச ஒன்றியத்தின் 27ஆவது உலக மாநாட்டை, 2020 ஜூலை மாதத்தில் இந்நகரம் நடத்தவுள்ளது. UNESCO வின் கருத்துப்படி கட்டிடக்கலையின் உலக தலைநகரமாக அறிவிக்கப்பட்டதன் மூலம் பண்பாடு, கலாச்சார பாரம்பரியம், நகர்ப்புற திட்டமிடல் மற்றும் கட்டமைப்பு ஆகியவற்றின் பார்வையில் இருந்து உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் விவாதங்களுக்கான ஒரு சர்வதேச மன்றமாக ரியோ மாறியுள்ளது.

23. 2ஆவது உலக ஒருங்கிணைந்த மருத்துவ மன்றத்தை (WIMF – 2019) நடத்தும் நாடு எது?

**விடை:** இந்தியா

**விளக்கம்:**

1. 2ஆவது உலக ஒருங்கிணைந்த மருத்துவ மன்றம் ஜனவரி 23 – 25வரை "ஹோமியோபதி மருந்துத் தயாரிப்பில் ஒழுங்குமுறை" என்ற தலைப்பில் கோவாவில் நடைபெற்றது. ஆயுஷ் அமைச்சர் ஸ்ரீபத் நாயக் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இந்த மூன்று நாள் மாநாடு, இரு தரப்பு மற்றும் பலதரப்பு ஒத்துழைப்புகளின் நன்மைகள் மற்றும் தீமைகளை வெளிப்படுத்தும் மற்றும் ஆராயும். 20 நாடுகள் இதில் பங்கேற்றன.

24. UNCCD உறுப்பு நாடுகளின் 14ஆவது மாநாட்டை (UNCCD COP – 14) நடத்தவுள்ள நாடு எது?

**விடை:** இந்தியா

**விளக்கம்:**

1. நில சீர்குலைவு மற்றும் பாலைவனமயமாதல் ஆகிய பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக பாலைவனமயமாதலை எதிர்த்துப் போராடும் ஐ.நா. அமைப்பின் (UNCCD) உறுப்பு நாடுகளின் 14ஆவது மாநாட்டை இந்தியா நடத்தவுள்ளது. இந்த மாநாடு வரும் அக்டோபர் மாதம் நடத்தப்பட உள்ளது. 100 நாடுகள் இதில் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
2. 1994 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட UNCCD, நிலம் மற்றும் மண்ணின் உற்பத்தித்திறனை பராமரித்து மற்றும் மீளமைத்து, வறட்சியின் விளைவுகளைத் தணிப்பதற்கான பணிகளை செய்து வரும் 197 நாடுகளை உறுப்பினராகக் கொண்டுள்ளது.

25. எந்த நாட்டின் மத்திய வங்கி, அண்மையில் இந்திய பணத்தாள்கள் பயன்பாட்டை தடை செய்துள்ளது?

**விடை:** நேபாளம்

**விளக்கம்:**

1. இந்திய அரசின் 2000, 500 மற்றும் 200 ரூபாய் நோட்டுகளை நேபாள மக்கள் பயன்படுத்த தடை என நேபாள நாட்டின் மத்திய வங்கி தடைவிதித்துள்ளது. இப்புதிய கட்டுப்பாட்டின்படி, நேபாள குடிமக்களும் இந்த ரூபாய் நோட்டுகளை இந்தியாவைத் தவிர வேறு நாடுகளுக்கும் எடுத்துச் செல்லமுடியாது. எனினும், ரூ.100 அல்லது அதற்கும் குறைவான மதிப்புள்ள இந்திய பணத் தாள்களை பொதுமக்களும், வணிகர்களும் பயன்படுத்தலாம் என அவ்வங்கி தெரிவித்துள்ளது.

26. அரபு பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாடு உச்சிமாநாடு நடைபெறும் நகரம் எது?

**விடை:** பெய்ரூத்

**விளக்கம்:**

1. லெபனான் தலைநகர் பெய்ரூத்தில் அரபு பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டு உச்சி மாநாடு நடந்தது. இதில் அரபு தலைவர்களும், அதிகாரிகளும் 'பெய்ரூத் பிரகடனம்' என அழைக்கப்படும் ஒரு கூட்டு அறிக்கை வெளியிட்டனர். அரேபிய கட்டற்ற வர்த்தக மண்டலத்தை நிறுவுவதற்கு இந்த அறிவிப்பு அழைப்பு விடுக்கிறது.

27. எந்த நகரத்தில், உலகப் பொருளாதார மன்றத்தின் ஆண்டுக் கூட்டம் தொடங்கியுள்ளது?

**விடை:** தாவோஸ்

**விளக்கம்:**

1. உலகப் பொருளாதார மன்றத்தின் ஆண்டுக் கூட்டம், தாவோசில் "Globalization 4.0 : Shaping a Global Architecture in the Age of the 4th Industrial Revolution" என்ற கருப்பொருளில் தொடங்கியது.
2. ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்கல், சுவிஸ் அதிபர் யூலி மாரர், ஜப்பானின் ஷின்சோ அபே, இத்தாலியின் கூசெப்பே கான்டே மற்றும் இஸ்ரேலின் பெஞ்சமின் நேதன்யாகு உட்பட 30 நாடுகள் / அரசின் தலைவர்கள், சர்வதேச நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள், மத்திய வங்கியாளர்கள், பொருளாதார வல்லுநர்கள், சிவில் சமுதாய தலைமைச் செயல் அதிகாரிள், ஊடக தலைமைகள், பிரபலங்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக அமைப்பு, OECD மற்றும் உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களின் தலைவர்கள் உட்பட 3,000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

28. எந்த அண்டை நாடுகளுக்கு பயணிக்கும் இந்தியர்களுக்கு, தற்போது ஆதார் அட்டைகள் செல்லுபடியாகும் பயண ஆவணங்களாக இருக்கின்றன?

**விடை:** நேபாளம் மற்றும் பூட்டான்

**விளக்கம்:**

1. 15 வயதுக்குட்பட்டவா்கள் மற்றும் 65 வயதுக்கு மேற்பட்டவா்கள் நேபாளம் மற்றும் பூட்டான் செல்வதற்கு ஆதாா் அட்டையை பயன்படுத்திக் கொள்ளலாம் என மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளுக்குச் செல்லும் இந்தியா்களுக்கு நுழைவு இசைவு தேவையில்லை. அவா்கள், இந்திய அரசு வழங்கிய கடவுச்சீட்டு மற்றும் புகைப்படமுடன் கூடிய அடையாள அட்டை இருந்தால் போதும்

29. உலகளவில் அரசு நிதியில் இயங்கும், சிறந்த அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்கள் பட்டியலில் இந்தியாவின் நிலை என்ன?
**விடை:** 9வது
**விளக்கம்:**

- உலக அளவில் அரசு நிதியில் இயக்கக் கூடிய சிறந்த அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்கள் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியாவானது 9வது இடம் பிடித்துள்ளது.
    - சிறந்த அறிவியல் ஆராய்ச்சி கட்டுரை வெளியிடும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 5வது இடம் பிடித்துள்ளது.

30. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையானது ‘‘உள்நாட்டு மொழி ஆண்டாக’’ அறிவித்த ஆண்டு எது?
**விடை:** 2019
**விளக்கம்:**

- மொழிகள் மற்றும் பண்பாடுகள் அழிவதை தடுப்பதற்கான உலகளாவிய கருத்தரங்கம் பிரான்ஸ் நாட்டின் யுனெஸ்கோ அரங்கில் நடைபெற்றது.
    - இக்கருத்தரங்கில், ஐக்கிய நாடுகள் பொதுச்சபையானது 2019ம் ஆண்டினை ‘‘உள்நாட்டு மொழி ஆண்டாக’’(International Year of Indigenous Language) அறிவித்துள்ளது.

31. ஊழல் மிகுந்த நாடுகளின் பட்டியலில் இந்தியாவின் நிலை என்ன?
**விடை:** 78
**விளக்கம்:**

- டிரான்ஸ்பரன்ஸி இன்டா்நேஷனல் (Transparency International) என்ற அமைப்பு வெளியிட்டுள்ள, உலகம் முழுவதும் ஊழல் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில், மொத்தம் 180 நாடுகளில் இந்தியா 78வது இடத்தில் உள்ளது.
    - கடந்த ஆண்டு இந்தியாவானது 81வது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

32. 2018ம் ஆண்டில், உலக எஃகு உறபத்தியில் 2வது இடத்தில் உள்ள நாடு எது?
**விடை:** இந்தியா
**விளக்கம்:**

- உலக எஃகு ஆணையம் சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், 2018ம் ஆண்டில், எஃகு உற்பத்தியில் ஜப்பானைப் பின்னுக்குத் தள்ளி, இந்தியா 2வது இடத்தைப் பிடித்துள்ளது.
    - உலக எஃகு உற்பத்தியில் தொடா்ந்து சீனா முதலிடத்தில் நீடிக்கிறது.

33. கரும்புச் சாற்றை தேசிய பானமாக சமீபத்தில் அறிவித்த நாடு எது?
**விடை:** பாகிஸ்தான்
**விளக்கம்:**

- இந்தியாவிற்கு அருகில் உள்ள நாடான பாகிஸ்தான் சமீபத்தில் கரும்புச் சாற்றை (Sugarcane Juice)“தேசிய பானமாக”(National Drink) அறிவித்துள்ளது.

34. சிரியா அகதிகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த அகதிகளின் மறுவாழ்விற்காக 50 மில்லியன் டாலர் நிதி வழங்கும் நாடு எது?
**விடை:** கத்தார் நாடு
**விளக்கம்:**

- சிரியா அகதிகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த அகதிகளின் மறுவாழ்விற்காக கத்தார் நாடு 50 மில்லியன் டாலர் (ரூ.355 கோடி) நிதி வழங்குவதாக அறிவித்துள்ளது.
  - ஐ.நா. பொதுச்செயலாளர் - ஆன்டணியோ குட்டரெஸ்

35. ஆக்ஸ்போர்ட் அகராதி, 2018ஆம் ஆண்டிற்கான இந்தி வார்த்தையாக எந்த வார்த்தையை அறிவித்துள்ளது?
**விடை:** நாரி சக்தி

36. ஹாரப் (HAROP) ரக ஆளிலில்லா போர் விமானங்களை இந்தியா எந்த நாட்டிலிருந்து வாங்க உள்ளது?
**விடை:** இஸ்ரேல்
**விளக்கம்:**

- அண்டை நாட்டுடன் நடக்கும் போரின் போது மனித இழப்புகளை தடுப்பதற்காகவும், எதிரி நாட்டு இலக்குகளை அழிப்பதற்காகவும், இந்திய விமானப் படையானது ஹாரப் (HAROP) ரக ட்ரோன்களை (ஆளில்லா போர் விமானம்) இஸ்ரேலிடம் இருந்து வாங்க திட்டமிட்டுள்ளது.

37. உலக பொருளாதார மன்றம் வெளியிட்டுள்ள, முதலீடுகளை ஈர்க்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியாவின் நிலை என்ன?
**விடை:** நான்காவது
**விளக்கம்:**

- உலக பொருளாதார மன்றம் (WEF) வெளியிட்டுள்ள, முதலீடுகளை ஈர்க்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியாவானது, நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.
  - பட்டியலில் முதல் 3 இடங்களை பிடித்த நாடுகள்:-
    - அமெரிக்கா
    - சீனா
    1. ஜெர்மனி
  - உலக பொருளாதார மன்ற மாநாடு நடைபெற்ற இடம் - தவோஸ்(சுவிட்சர்லாந்து)

# விளையாட்டு நிகழ்வுகள்

1. ICC 2018ஆம் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீராங்கனை விருது பெற்ற இந்தியர் யார்?

**விடை:** ஸ்மிருதி மந்தனா

**விளக்கம்:**

1. ICC 2018ஆம் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீராங்கனை என்பதற்காக 'ரேச்சல் ஹெய்ஹோய் ஃபிளின்ட்' விருது மற்றும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் (ODI) சிறந்த வீராங்கனை என ICCஇன் 2 விருதுகளை இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி வீராங்கனை ஸ்மிருதி மந்தனா வென்றுள்ளார்.

2. 2018 இல் எந்த இந்திய பந்து வீச்சாளர் அதிக சர்வதேச விக்கெட்டுகளை எடுத்துள்ளார்?

**விடை:** ஜஸ்பிரிட் பும்ரா

**விளக்கம்:**

1. இந்திய வீரர் ஜஸ்பிரிட் பும்ரா, 2018 இல் அனைத்து தரப்புப்போட்டியிலும் அதிக சர்வதேச விக்கெட்டுகளை எடுத்த வீரராக உள்ளார். இவர் 9 டெஸ்ட் போட்டிகளில் 48 விக்கெட்டுகளையும், 13 ஒருநாள் போட்டிகளில் 28 விக்கெட்டுகளையும், 8 T20 போட்டிகளில் 8 விக்கெட்டுகளையும் என மொத்தம் 78 விக்கெட்டுகளை 2018 இல் எடுத்துள்ளார்.

3. 80 ஆவது தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் - 2019 நடைபெறும் இடம் எது?

**விடை:** கட்டாக்

**விளக்கம்:**

1. 80 ஆவது தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் ஜனவரி 4 அன்று கட்டாக்கில் உள்ள ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கில் தொடங்கியது. நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 550 வீரர்களை உள்ளடக்கிய 35 அணிகள், இந்தச் சாம்பியன்ஷிப்பில் பங்கேற்கின்றன.
2. காமன்வெல்த் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் பதக்கம் வென்ற மனிகா பத்ரா, சரத் கமல், மதுரிபா பட்கர் போன்ற, அங்கிதா தாஸ் போன்ற மூத்த வீரர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்கும் முக்கிய வீரர்களாக உள்ளனர். கிட்டத்தட்ட 18 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒடிசா மாநில டேபிள் டென்னிஸ் சங்கம், இப்போட்டியை நடத்துகிறது. ஜனவரி 9 அன்று இப்போட்டி நிறைவுறும்.

4. எந்த நாட்டின் அணி, 2019 ஹோப்மேன் கோப்பைக்கான பட்டத்தை வென்றுள்ளது?

**விடை:** சுவிட்சர்லாந்து

**விளக்கம்:**

1. ஆஸ்திரேலியாவின் பெர்த் நகரத்தில் நடந்த அணிகளுக்கு இடையிலான 31 ஆவது ஹோப்மன் கோப்பை டென்னிஸ் தொடரில், ரோஜர் பெடரர், பெலிண்டா பென்சிக் அடங்கிய சுவிஸ் அணி மீண்டும் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. வெற்றியாளரை தீர்மானிக்கும் கலப்பு இரட்டையர் பிரிவு போட்டியில் பெடரர், பென்சிக் ஜோடி 4-0, 1-4, 4-3 என ஜெர்மனின் கெர்பர், சுவெரேவ் ஜோடியை வென்றது.

5. 2 ஆவது விளையாடு இந்தியா இளையோர் விளையாட்டுக்கள் நடைபெறும் இடம் எது?

**விடை:** புனே

**விளக்கம்:**

1. கேலோ இந்தியா யூத் விளையாட்டுப் போட்டிகள் வரும் ஜனவரி 9 அன்று புனேவில் தொடங்குகிறது. இதில் யூத் ஒலிம்பிக் நட்சத்திரங்கள் மானுபக்கர், சௌரவ் சௌதாரி, ஜெரேமி லால்ரினுங்கா உள்பட பலர் கலந்து கொள்கின்றனர். ஜார்க்கண்ட் மாநிலத்தை சேர்ந்த கால்பந்து வீரர் பிரதிமா குமார், மிசோரம் மாநிலத்தை சேர்ந்த ஹாக்கி வீரர் லால்தன்சுங்கி, மேற்கு வங்கத்தை சேர்ந்த 10 மீ., ‘ஏர் ரைபிள்’ துப்பாக்கி சுடுதல் வீரர் அபினவ் ஷா உட்பட மூன்று பதின்ம வயதுடைய வீரர்கள், இப்போட்டிகளில் முதன்முதலாக பங்கேற்கவுள்ளனர்.

6. FIA பார்முலா 3 ஐரோப்பிய சாம்பியன்ஷிப் போட்டியில் வென்ற முதல் இந்தியர் யார்?

**விடை:** ஜெகன் தர்வாலா

**விளக்கம்:**

1. சஹாரா போர்ஸ் இந்தியா அகாடமியை சேர்ந்த ஜெகன் தர்வாலா, நூரம்பர்க் சுற்றில் நடந்த FIA பார்முலா 3 ஐரோப்பிய சாம்பியன்ஷிப் போட்டியில் வென்ற முதல் இந்தியராக மாறியுள்ளார். 18 ஆண்டுகளுக்கு முன், பிரிட்டிஷ் F3 சாம்பியன்ஷிப்பை நரேன் கார்த்திகேயன் வென்றார். அதன் பிறகு தற்போது ஜெகன் இவ்வெற்றியை பெற்றுள்ளார்.

7. 2019 சீனியர் தேசிய மகளிர் சாம்பியன்ஷிப்பில் 78 கிலோ பிரிவில் தங்கம் வென்ற ராணி, எந்த மாநிலத்தைச் சேர்ந்த பெண் தலைமைக் காவலர்?

**விடை:** ஹிமாச்சலப்பிரதேசம்

**விளக்கம்:**

1. ஜனவரி 7 அன்று விசாகப்பட்டினத்தில் நடந்த சீனியர் தேசிய பெண்கள் சாம்பியன்ஷிப்பின் 78 கி.கி, எடைப்பிரிவில் ஹிமாச்சலப்பிரதேச காவல்துறையின் 5 ஆவது இந்திய இருப்பு படைப்பிரிவைச் (Indian Reserve Battalion – IRB) சேர்ந்த பெண் தலைமைக்காவலர் ராணி தங்கம் வென்றுள்ளார். மேலும் அவர் சாம்பியன்ஷிப்பின் சிறந்த ஜூடோகோ எனவும் அறிவிக்கப்பட்டுள்ளார்.

8. 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்காக இந்தியாவின் 'Chef de Mission' – அணிகளின் தலைவர்' என அறிவிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை:** பைரேந்திர பிரசாத் பைஷியா

**விளக்கம்:**

1. 202 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்காக இந்தியாவின் 'Chef de Mission – அணிகளின் தலைவராக' இந்திய பளுதூக்கும் கூட்டமைப்பின் தலைவர் பைரேந்திர பிரசாத் பைஷியா அறிவிக்கப்பட்டுள்ளார். பளுதூக்கும் விளையாட்டுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் 'Chef de Mission' ஆக நியமிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.

9. சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தால் வெளியிடப்பட்ட தரவரிசையில் 'Light fly' (45 – 48 கி.கி.,) பிரிவில் முதலிடத்தில் உள்ளவர் யார்?

**விடை:** மேரி கோம்

**விளக்கம்:**

1. சர்வதேச குத்துச்சண்டை சங்கம் வெளியிட்டுள்ள உலக குத்துச்சண்டை தரவரிசைப் பட்டியலில், 45 – 48 கி.கி., 'Light fly' பிரிவில் இடம் பிடித்துள்ள மேரி கோம் 1700 புள்ளிகள் பெற்று முதலிடம் பிடித்துள்ளார். கடந்தாண்டு தில்லியில் நடந்த மகளிர் உலக குத்துச்சண்டை சாம்பியன்சிப்பில், உக்ரைனிய வீராங்கனை ஹன்னா ஒகோடாவை வீழ்த்தி 6வது முறையாக சாம்பியன் பட்டத்தை வென்று அவர் சாதனை படைத்தார்.

10. சிட்னி கிரிக்கெட் மைதானத்தின் வாழ்நாள் கௌரவ உறுப்பினத்துவத்தை பெற்றுள்ள இந்திய கிரிக்கெட் வீரர் யார்?

**விடை:** விராட் கோலி

**விளக்கம்:**

1. இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோலி, தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி ஆகியோருக்கு சிட்னி கிரிக்கெட் மைதானத்தின் (SCG's) வாழ்நாள் கௌரவ உறுப்பினத்துவம் வழங்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் மற்றும் மைதானத்தின் வரலாற்றில் இருவரது பங்களிப்பையும் பாராட்டும் வகையில் SCG நிர்வாகம் இந்தக் கௌரவத்தை வழங்கியுள்ளது.

11. அசுதோஷ் அமன், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

**விடை:** கிரிக்கெட்

**விளக்கம்:**

1. பீகாரைச் சேர்ந்த இடதுகை சுழற்பந்து வீச்சாளர் அசுதோஷ் அமன், 2018 – 19 ரஞ்சிக்கோப்பை போட்டியில் 68 விக்கெட்டுகளை வீழ்த்தி 44 ஆண்டுகால சாதனையை முறியடித்துள்ளார். அவர் 1974 – 75 ரஞ்சிக்கோப்பை போட்டியில் முன்னாள் இந்திய அணித்தலைவர் பிஷன் சிங் பேடி எடுத்த 64 விக்கெட் சாதனையை முறியடித்துள்ளார். ரஞ்சிக்கோப்பையில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பந்து வீச்சாளர் என்ற பெருமையை அமன் தற்சமயம் தன்னகத்தே கொண்டுள்ளார்.

12. 5ஆவது பிரீமியர் பாட்மிண்டன் லீக் (BPL) பட்டத்தை வென்ற அணி எது?

**விடை:** பெங்களூரு ராப்டர்ஸ்

**விளக்கம்:**

1. ஜனவரி 13 அன்று பெங்களூருவில் நடந்த ஐந்தாவது பிரீமியர் பாட்மிண்டன் லீக்கின் இறுதிப் போட்டியில், பெங்களூரு ராப்டர்ஸ் அணியானது மும்பை ராக்கெட்ஸ் அணியை 4 – 3 என்ற கணக்கில் வென்று பிரீமியர் பாட்மிண்டன் லீக் போட்டி சாம்பியன் பட்டத்தை முதல்முறையாக வென்றது. கிடாம்பி ஸ்ரீகாந்த், வு ஜி தரங் மற்றும் ஆடவர் இரட்டையர் ஜோடி முகமது ஆசான், ஹென்ரா சத்யவான் ஆகியோர் தத்தமது பிரிவில் வென்றனர்.

13. 2019 ஆம் ஆண்டு கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுக்களில், துப்பாக்கி சுடுதலில் தங்கப்பதக்கம் வென்ற இளம் வயது வீரர் யார்?

**விடை:** அபினவ் ஷா

**விளக்கம்:**

1. புனேவில் நடந்த 2019 கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுக்களில், துப்பாக்கி சுடுதலில் தங்கப்பதக்கம் வென்ற இளம் வயது வீரராக அபினவ் ஷா (10) மாறியுள்ளார். அவர் 10 மீ., 'ஏர் ரைபிள்' கலப்பு அணி நிகழ்வில், மேற்கு வங்கத்தை வீழ்த்துவதற்காக மெஹுலி கோஷ் உடன் கூட்டிணைந்தார். 21 வயதுக்குட்பட்ட பெண்கள் 25 மீ., பிஸ்டல் நிகழ்வில், தில்லியின் தேவன்ஷி ராணா தங்கம் வென்றார்.

14. இந்திய மகளிர் குத்துச்சண்டை வீராங்கனைகளுக்கான தலைமைப் பயிற்சியாளர் யார்?

**விடை:** முகமது அலி காமர் (Mohammed Ali Qamar)

**விளக்கம்:**

1. காமன்வெல்த் விளையாட்டுகளில் இந்தியாவின் முதல் தங்கப்பதக்கத்தை வென்ற முகமது அலி காமர் இந்திய பெண்கள் குத்துச்சண்டை வீராங்கனைகளுக்கான தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

15. இந்தியாவின் இளைய கிராண்ட்மாஸ்டர் பட்டத்தை வென்ற D குகேஷ், எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்?

**விடை:** தமிழ்நாடு

**விளக்கம்:**

1. சென்னையைச் சேர்ந்த சிறுவன் குகேஷ் உலகின் 2ஆம் இளம் செஸ் கிராண்ட்மாஸ்டர் ஆகி சாதனை படைத்துள்ளார். இதன் மூலம் பிரக்னானந்தாவின் கடந்த ஜூன் மாத சாதனையையும் அவர் முறியடித்தார். தில்லியில் நடந்த 17 ஆவது தில்லி சர்வதேச ஓப்பன் செஸ் போட்டியில் சக நாட்டு வீரர் D K சர்மாவை 9ஆவது சுற்றில் தோல்வியுறச் செய்து இந்த சிறப்பைப் பெற்றார். இந்தப் பட்டத்தின் மூலம் இந்தியாவின் 59அவது கிராண்ட்மாஸ்டர் ஆனார் குகேஷ்.

16. உலகளவில் ஆண்டின் சோதனையிலிருந்து மீண்டுவந்தவருக்கான லாரஸ் விருதுக்கு (Laureus World Comeback of Year) பரிந்துரைக்கப்பட்ட முதல் இந்திய விளையாட்டு வீராங்கனை யார்?

**விடை:** வினேஷ் போகத்

**விளக்கம்:**

1. உலகளவில் ஆண்டின் சோதனையிலிருந்து மீண்டுவந்தவருக்கான லாரஸ் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட முதல் இந்திய விளையாட்டு வீராங்கனையாக ஹரியானாவைச் சேர்ந்த இந்திய பெண் மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் உள்ளார்.
2. கடந்த ரியோ ஒலிம்பிக் காலிறுதியில் முழங்கால் காயத்தால் துடித்த இவர் பாதியில் விலகினார். இதிலிருந்து மீண்டுவந்த வினேஷ் போகத், கோல்டுகோஸ்ட் காமன்வெல்த் போட்டியில் தங்கமும், ஜகார்த்தா ஆசிய விளையாட்டுக்களில் வெள்ளிப்பதக்கமும் வென்றார்.

17. ஆஸ்திரேலியா ஓபன் டென்னீஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றவர் யார்?

**விடை:** நோவக் ஜோகோவிச் (செர்பியா)

**விளக்கம்:**

- ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடைபெற்ற ஆஸ்திரேலிய கிராண்ட்ஸ்லாம் ஓபன் டென்னீஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் ஸ்பெயினின் ரபேல் நடாலை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

18. நவாமி ஒசாகா எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

**விடை:** ஜப்பான்

**விளக்கம்:**

- ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் போட்டியில் ஜப்பான் வீராங்கனை நவாமி ஒசாகா சாம்பியன் பட்டம் வென்றார்.
  - 2019ஆம் ஆண்டிற்கான டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவு தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ளார்.

19. இந்தோனேசியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற இந்திய வீராங்கனை யார்?

**விடை:** சாய்னா நேவால்

**விளக்கம்:**

- இந்தோனேசியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால் சாம்பியன் பட்டம் வென்றார்.
  - இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தா

20. ICC வெளியிட்டுள்ள டெஸ்ட் கிரிக்கெட் ஆல்-ரவுண்டர் தரவரிசையில் முதலிடம் பிடித்த ஜாசன் ஹோல்டர் எந்த நாட்டவர்?

**விடை:** மேற்கு இந்தியா

**விளக்கம்:**

- சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) வெளியிட்டுள்ள டெஸ்ட் கிரிக்கெட் ஆல்-ரவுண்டர்களின் தரவரிசை (Test All-Rounder Ranking) பட்டியலில் மேற்கு இந்திய அணி கேப்டன் ஜாசன் ஹோல்டர் முதலிடம் பிடித்துள்ளார்.
    - இந்தியாவின் ரவீந்திர டேஜா மூன்றாம் இடம் பிடித்துள்ளார்.

21. சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ICC) 2018ம் ஆண்டிற்கான விருதுகளில் இந்திய கேப்டன் விராட் கோலி பெற்றுள்ள விருதுகளின் எண்ணிக்கை?

**விடை:** மூன்று

**விளக்கம்:**

- சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் மூன்று விருதுகளை விராட் கோலி (இந்திய அணியின் கேப்டன்) பெற்று சாதனைப் படைத்துள்ளார்.
    - 2018-ஆம் ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீரர்
    - 2018-ன் சிறந்த ஒருநாள் தொடர் வீரர்
    - 2018-ன் சிறந்த வீரருக்கான கேரி சோபர்ஸ் விருது

22. ICC-ன் வளரும் வீரர் விருது(2018) யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை:** ரிஷப் பந்த்

**விளக்கம்:**

- சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின், 2018ம் ஆண்டுக்கான ‘‘வளரும் வீரர் விருது’’ ரிஷப் பந்த்-க்கு (இந்திய இளம் விக்கெட் கீப்பர்) வழங்கப்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

1. தொடர்பாடல், வழிகாட்டல் & கண்காணிப்பு (CNS) ஆராய்ச்சிக்கு SAMEER உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சமீபத்தில் கையெழுத்திட்ட இந்திய அமைப்பு எது?

**விடை:** AAI

**விளக்கம்:**

1. இந்திய விமான நிலையங்கள் ஆணையானது தொடர்பாடல், வழிகாட்டல் & கண்காணிப்பு (CNS) துறையில் கூட்டு ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக Society for Applied Microwave Electronics Engineering and Research (SAMEER) உடன் ஒப்பந்தம் செய்துள்ளது. SAMEER என்பது மத்திய மின்னனு மற்றும் தகவல்

தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ், தன்னாட்சியுடன் இயங்கும் ஓர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமாகும்.

2. இரண்டு நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான ஓர் ஆராய்ச்சித் தளத்தை இந்த ஒப்பந்தம் வழங்கும். வானொலி அலைவெண், மில்லிமீட்டர் அலை மற்றும் அலைவாங்கி தொடர்பான தீர்வுகளை AAI துறைசார்ந்த வல்லுநர்களுக்கு SAMEER வல்லுநர்கள் வழங்குவர்.

2. ஆசிரியர்களுக்கான இந்தியாவின் முதல் PolicyHackஐ தொடங்கியுள்ள நிறுவனம் எது?

**விடை:** டெல்(Dell)

**விளக்கம்:**

1. UNESCO அமைதி & நீடித்த வளர்ச்சிக்கான மகாத்மா காந்தி கல்வி நிறுவனம் (MGICP) மற்றும் இக்னஸ் ஆகியவற்றுடன் இணைந்து டெல் நிறுவமானது ஆசிரியர்களுக்கான இந்தியாவின் முதல் பாலிசி ஹேக்கை அறிமுகப்படுத்தியுள்ளது
2. முந்நகர PolicyHack தொடரின் ஒருபகுதியாக, ஆசிரியர்கள் தங்கள் கற்றல் பயணத்தில் கவனம் செலுத்தும் ஓர் ஊடாடும் ஹேக்கத்தானை டெல் நடத்தியது. ஆசிரியர்கள், பள்ளிப் பிரதிநிதிகள் மற்றும் கல்வி தொடர்பான வல்லுநர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வதற்கான ஒரு தளத்தை உருவாக்கித்தரும் ஆசிரியருகளுக்கான முதலாவது ஹேக்கத்தான் ஆகும் இது.

3. செயற்கை நுண்ணிறிவில் இந்தியாவின் முதல் B.Tech பாடத்திட்டத்தை தொடங்கவுள்ள ஐஐடி எது?

**விடை:** ஐஐடி ஹைதராபாத்

**விளக்கம்:**

1. செயற்கை நுண்ணறிவில் (AI) இந்தியாவின் முதல் முழுமையான (இளங்கலை தொழில் நுட்பம்) பாடத்திட்டத்தை 2019 – 20 கல்வியாண்டில் ஐஐடி ஹைதராபாத் தொடங்கியுள்ளது. JEE – மேம்பட்ட மதிப்பெண்ணின் அடிப்படையில், சுமார் 20 மாணவர்கள் இந்தப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படுவர். கணினி அறிவியல் துறையிலிருந்து நெறிமுறைக் கல்வி, மின் பொறியியல் துறையிலிருந்து சமிக்ஞை செயலாக்கம், எந்திரப் பொறியியல் துறையிலிருந்து

ரோபாட்டிக்ஸ் மற்றும் அடிப்படை கணிதங்கள் ஆகியவற்றை இந்தப் பாடத்திட்டம் உள்ளடக்கியிருக்கும்.

4. உலகின் முதல் செயற்கை எரிகல் பொழிவை உருவாக்குவதற்காக செயற்கைக்கோளை ஏவியுள்ள நாடு எது?

**விடை:** ஜப்பான்

**விளக்கம்:**

1. புவியின் வளிமண்டத்தில் செயற்கையாக எரிகல் பொழிவை ஏற்படுத்தவல்ல ஒரு செயற்கைக் கோளை தாங்கிச்செல்லும் ஏவுகணையை ஜப்பான் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (JAXA) ஏவியுள்ளது. இது வெற்றிபெற்றால், உலகின் முதல் செயற்கை எரிகல் பொழிவாக இது இருக்கும்.
2. JAXA உச்சிநோரா விண்வெளி மையத்திலிருந்து எப்சிலான் - 4 என்ற ஏவுகணை மூலம் இந்தச் செயற்கைக்கோள் ஏவப்பட்டது. டோக்கியோவைச் சேர்ந்த ஆஸ்ட்ரோ லைவ் எக்ஸ்விரியன்சஸ் என்ற நிறுவனத்தின் தயாரிப்பான இரண்டு நுண் - செயற்கைக்கோள்ளை இது சுமந்துசென்றது.

5. யுன்ஹாய் - 2 என்ற செயற்கைக்கோளை செலுத்திய நாடு எது?

**விடை:** சீனா

**விளக்கம்:**

1. வளிமண்டல சுழல், விண்வெளி சூழல் கண்காணிப்பு, பேரிடர்களை தடுத்தல் மற்றும் குறைத்தல் மற்றும் அறிவியல் சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்வதற்காக சீனாவானது யுன்ஹாய் – 2 என்ற செயற்கைக்கோளை விண்வெளி சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக செலுத்தியுள்ளது.

6. பென்னு'' என்றழைக்கப்படும் குறுங்கோளை ஆராய்ச்சி செய்வதற்காக நாசா அனுப்பிய முதல் செயற்கைகோள் எது?

**விடை:** ஒசிரிஸ் - ரே (OSIRIS – REx).

**விளக்கம்**:

1. சமீபத்தில் நாசா அனுப்பிய ''ஒசிரிஸ்-ரே'' எனப்படும் செயற்கைகோள் பூமியில் இருந்து 11 கோடி கி.மீ. தொலைவில் உள்ள ''பென்னு'' என்றழைக்கப்படும் குறுங்கோளின் சுற்றுவட்டப் பாதையில் நுழைந்து சாதனைப் படைத்துள்ளது.

7. SAMWAD with Student என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய அமைப்பு எது?

**விடை:** இஸ்ரோ (ISRO – Indian Space research Organization)

**விளக்கம்:**

1. இந்தியாவில் உள்ள இளைஞர்களுக்கிடையே அறிவியல் திறனை ஊக்குவிப்பதற்காக இஸ்ரோவானது 'SAMWAD with Student' (SwS), என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

8. நிலவின் இருண்ட பகுதியை ஆராய சாங் இ - 4 (Change – 4) என்ற விண்கலத்தை செலுத்திய நாடு எது?

**விடை:** சீனா

**விளக்கம்:**

1. நிலவின் இருண்ட பகுதியை ஆராயும் செயற்கை கோளான சாங் இ - 4 (Chang e – 4) என்னும் செயற்கைகோள், ஜனவரி 3, 2019 அன்று வெற்றிகரமாக நிலவில் தரையிரங்கியது.
2. இச்செயற்கைகோளை சீனா டிசம்பர் 8, 2018ல் விண்ணில் செலுத்தியது.
3. நிலவில் இருண்ட பகுதியை புகைப்படம் எடுத்த முதல் செயற்கை கோள் - லூனா – 3 (Luna – 3) ஆகும்.

9. சூரியனை விட நீண்ட தொலைவில் உள்ள "அல்ட்டிமா துலே" என்ற நுண்கோளை ஆராய்வதற்கான விண்கலம் எது?

**விடை:** நியூ ஹொரைஸன்

**விளக்கம்:**

1. சூரியனை மிகவும் நீண்ட தொலைவில் சுற்றி வரும் "அல்ட்டிமா துலே (Ultima Thule) என்ற நுண்கோளின் அருகே சென்று, அமெரிக்காவின் "நியூ ஹொரைஸன்" என்ற விண்கலம் சாதனைப் படைத்துள்ளது.

10. வலிப்பு மற்றும் பர்கின்சன் நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான சாதனம் எது?

**விடை:** WAND – Wireless artifact-free Neuro modulation device

**விளக்கம்:**

1. மூளைக்கான பேஸ்மேக்கர் - வாண்ட் (WAND)
2. அறிவியலாளர்கள் ‘கம்பியில்லா குளறுபடியற்ற நரம்பு செயல்பாடு மாற்றக் கருவி (Wireless artifact-free neuro modulation device – WAND) எனும் பெயரிடப்பட்ட வலிப்பு மற்றும் பர்கின்சன் நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான ஒரு சாதனத்தை உருவாக்கியுள்ளனர்.
3. இது மூளையின் மின்செயல்பாட்டைக் கண்காணிக்கவும் மூளையின் மின்னோட்டத்தைத் தூண்டுவதற்காகவும் மூளைக்கான பேஸ்மேக்கர் கருவியைப் போன்று செயல்படுகிறது.
4. இந்த சாதனமானது கம்பியில்லாத மற்றும் தன்னிச்சையாக செயல்படக் கூடியது ஆகும். மேலும் ஒரே நேரத்தில் இது மின்னோட்டத்தினைத் தூண்டி மின் சமிக்ஞைகளை மூளையில் பதிவு செய்கிறது.

11. HD21749b என்ற புதிய கோளை கண்டறிந்த நாசாவின் விண்கலம் எது?

**விடை:** TESS (Transiting Exoplanet Survey Satellite)

**விளக்கம்:**

1. நாசாவின் வெளிக் கோள்களைச் சுற்றி ஆய்வு செய்யும் செயற்கை கோளான “TESS (Transiting Exoplanet Survey Satellite)”-ஆனது HD21749 என்னும் நட்சத்திரத்தை சுற்றி வரும் HD21749b என்று பெயரிடப்பட்ட புதிய கோளைக் கண்டறிந்துள்ளது.

12. நீர் மூலக்கூறுகளின் உதவியுடன் கார்பன்-டை-ஆக்ஸைடுகளை படிக வடிவத்தில் அமைத்து விண்வெளி எரிபொருளை உருவாக்கிய நிறுவனம் எது?

**விடை:** இந்திய தொழில்நுட்ப நிறுவனம் - சென்னை (IIT – Chennai)

**விளக்கம்:**

1. இந்திய தொழில்நுட்ப நிறுவனம் - சென்னையைச் (IIT – சென்னை) சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், நீர் மூலக்கூறுகளின் உதவியுடன் கார்பன் டை ஆக்ஸைடுகளை படிக வடிவத்தில் அமைத்து விண்வெளி எரிபொருளை உருவாக்கியுள்ளனர்.
2. இதன் மூலம், எதிர்காலத்தில் பசுமை இல்ல வாயுக்களை கட்டுப்படுத்த உதவும்.

13. நிலவின் மறுபக்கத்தை ஆய்வு செய்ய சீனா அனுப்பிய விண்கலம் எது?

**விடை:** சாங் - இ - 4

**விளக்கம்:**

1. நிலவின் மறுபக்கத்திற்கு சீனா அனுப்பிய விண்கலத்தில் இருந்த பருத்தி விதை முளைக்க தொடங்கியுள்ளது.
2. சீனாவின் விண்வெளி ஆய்வு நிலையம் கடந்த சில நாட்களுக்கு முன், சாங் இ - 4 என்ற விண்கலத்தை நிலவுக்கு அனுப்பி உள்ளது. இந்த விண்கலம், நிலவின் குளிர்நிலையை ஆய்வு செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது.

14. உலகின் முதல் செயற்கை விண்கல் மழையை உருவாக்க உள்ள நாடு எது?

**விடை:** ஜப்பான்

**விளக்கம்:**

1. ஹிரோஷிமா (ஜப்பான்) -வில் உலகின் முதல் செயற்கை விண்கல் மழையை அந்நாட்டு அரசு உருவாக்க உள்ளது. (World First Artificial Meteor Shower).
2. செயற்கை விண்கல் மழை உண்டாக்கும் செயற்கைகோள் ‘‘எப்சிலோன் 4’’ என்ற இராக்கெட் மூலம் விண்ணிற்கு செலுத்தியுள்ளது.

15. இஸ்ரோவின் ‘பி.எஸ்.எல்.வி – சி44’ ராக்கெட்டானது எப்பொழுது விண்ணில் செலுத்தப்பட உள்ளது?

**விடை:** ஜனவரி 24, 2019

**விளக்கம்:**

1. இஸ்ரோ-வானது, 2019 ஆம் ஆண்டின் தனது முதல் ராக்கெட்டான “பி.எஸ்.எல்.வி – சி 44” – ஐ ஜனவரி 24 ல் சதீஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து விண்ணில் செலுத்த உள்ளது.
2. இந்த இராக்கெட்டில் ‘‘ஹாம் ரேடியோ சேவைக்காக’’ மாணவர்கள் தயாரித்த ‘‘கலாம் சாட’’ செயற்கைக்கோள், ‘‘பூமி கண்காணிப்பிற்காக’’ இஸ்ரோ தயாரித்த ‘‘மைக்ரோசாட் - ஆர்’’ செயற்கைக்கோள் ஆகியவை விண்ணில் செலுத்தபட உள்ளது.

16. நெசவாளர்களுக்கு உதவுவதற்காக re-weave.in என்ற மின்னனு வலைதளத்தை உருவாக்கிய நிறுவனம் எது?

**விடை:** மைக்ரோசாப்ட் இந்தியா

**விளக்கம்:**

1. கைத்தறி நெசவாளர்களுக்கு உதவுவதற்காக மைக்ரோசாப்ட் இந்தியாவானது, அதன் ரீவேவ் (re-weave) திட்டத்தின் கீழ், re-weave.in என்ற மின்னனு வர்த்தக தளத்தை தொடங்கியுள்ளது.
2. ரீவேவ் திட்டமானது மைக்ரோசாப்ட் இந்தியா நிறுவனத்தால், மக்கள் சேவை முயற்சியின் ஒரு பகுதியாக 2016ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

17. கலாம் சாட் செயற்கைகோள் எந்த இராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது?

**விடை:** பி.எஸ்.எல்.வி-சி44 (PSLV-C44)

**விளக்கம்:**

1. இஸ்ரோவானது, சதிஸ்தவான் விண்வெளி ஏவுதளத்தில் (ஆந்திரப் பிரதேசம்) இருந்து, ''கலாம் சாட் மற்றும் மைக்ரோசாட்-R'' என்ற இரு செயற்கை கோளை, PSLV C- 44 (பி.எஸ்.எல்.வி சி-44) என்ற இராக்கெட் மூலம் ஜனவரி 24, 2019ல் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.
2. கலாம் சாட் செயற்கைகோளின் எடை – 34g
3. எல்லை கண்காணிப்பு இமேஜிங் செயற்கைகோளான மைக்ரோசாட்-R ன் எடை – 690 kg

18. ''ரோஷினி'' என்ற மொபைல் செயலியை அறிமுகப்படுத்திய அமைப்பு எது?

**விடை:** IIT ரோபார்

**விளக்கம்:**

1. பழைய மற்றும் புதிய ரூபாய் நோட்டுகளை அடையாளம் கண்டு ஆடியோ வடிவில் செய்தி அனுப்புவதற்காக ''ரோஷினி'' என்ற மொமைல் செயலியை ''IIT ரோபார்'' என்ற அமைப்பு சண்டிகரில் அறிமுகப்படுத்தியுள்ளது.

19. ''டிஎப் 26 (DF 26)'' என்ற ஏவுகணையை வெற்றிகரமாக விண்ணில் செலுத்திய நாடு எது?

**விடை:** சீனா

**விளக்கம்**:

1. ஒலியை விட அதிக வேகமாக அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் ''டீஎப் 26 (DF 26)'' என்ற ஏவுகணையை ''சீனா''வானது வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.
2. இந்த ஏவுகணையானது 3 ஆயிரம் கிலோ மீட்டர் முதல் 5700 கிலோ மீட்டர் தூரம் பறந்து சென்று இலக்கை துல்லியமாக தாக்கும் திறன் கொண்டது.

20. கலாம் சாட் செயற்கைகோள் எந்த இராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது?

**விடை:** பி.எஸ்.எல்.வி-சி44 (PSLV-C44)

**விளக்கம்:**

- இஸ்ரோவானது, சதிஸ்தவான் விண்வெளி ஏவுதளத்தில் (ஆந்திரப் பிரதேசம்) இருந்து,''கலாம் சாட் மற்றும் மைக்ரோசாட்-R'' என்ற இரு செயற்கை கோளை, PSLV C-44 (பி.எஸ்.எல்.வி சி-44) என்ற இராக்கெட் மூலம் ஜனவரி 24, 2019ல் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.
- கலாம் சாட் செயற்கைகோளின் எடை –34g
- எல்லை கண்காணிப்பு இமேஜிங் செயற்கைகோளான மைக்ரோசாட்-Rன் எடை –690 kg

# விருதுகள்

1. 2019 ஆம் ஆண்டு தேசிய நிருதய சிரோமணி விருது பெற்றவர் யார்?

**விடை :** அனிந்திதா நியோஜி அனாம்

**விளக்கம் :**

1. அமெரிக்காவை சேர்ந்த கதக் நடனக்கலைஞர் அனிந்திதா நியோஜி அனாம், ஜனவரி 2 அன்று தேசிய நிருத்ய சிரோமணி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஒடிசாவில் நடந்த சர்வதேச நடன & இசை திருவிழாவான 10 ஆவது கட்டாக் மகோத்சவத்தின் போது அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது. கட்டாக் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து உத்கல் யுவ சங்ஸ்கிருதி சங்கம் (UYSS) இதனை ஏற்பாடு செய்திருந்தது.

2. இலக்கியத்தில் வாழ்நாள் சாதனைக்காக கபி சாம்ராட் உபேந்திரா பஞ்சா தேசிய விருது யாருக்கு வழங்கப்பட்டது?

**விடை :** மனோஜ் தாஸ்

**விளக்கம் :**

1. பிரபல ஆங்கில மற்றும் ஒடிசா இலக்கியவாதியான பேராசிரியர் மனோஜ் தாஸ், இலக்கியத்தில் வாழ்நாள் சாதனைக்காக கபி சாம்ராட் உபேந்திரா பஞ்சா தேசிய விருது பெற்றார். இந்த விழா, ஒடிசாவின் பெர்ஹாம்பூர் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டது.

3. அன்டார்டிக்காவின் மிகவுயர்ந்த சிகரத்தை அடைந்த உலகின் முதல் மாற்றுத்திறனாளி இந்திய மலையேற்ற வீராங்கனை யார்?

**விடை** : அருணிமா சின்ஹா

**விளக்கம் :**

1. அண்டார்டிகாவின் மிகவுயர்ந்த வின்சன் சிகரத்தை அடைந்த உலகின் முதல் மாற்றுத்திறனாளி இந்திய மலையேற்ற வீராங்கனை எனும் சாதனையை அருணிமா சின்ஹா படைத்துள்ளார். 2013 இல் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்த முதல் மாற்றுத்திறனாளி பெண்ணும் இவர் தான்.

4. ராம்நாத் கோயங்கா இதழியல் சிறப்பு விருதுகளில், புலனாய்வு பத்திரிக்கையாளர் (அச்சு ஊடகம்) பிரிவில் விருது வென்றவர் யார்?

**விடை** : S விஜய் குமார்

**விளக்கம் :**

1. தமிழ்நாடு குட்கா ஊழலில் வரி செலுத்துவோர் அதிகாரிகளை எவ்வாறு பணம் கொடுத்து சரி கட்டினர் என்பது தொடர்பான தி இந்து சென்னை பிரிவின் மூத்த பத்திரிக்கையாளர் S விஜய் குமாரின் அறிக்கைகளுக்காக அவருக்கு புலனாய்வு அறிக்கைப் பிரிவில் (அச்சு பிரிவு) ராம்நாத் கோயங்கா இதழியல் சிறப்பு விருது வழங்கப்பட்டது. ஜனவரி 7 அன்று புது தில்லியில் நடந்த ஒரு விழாவில், மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களால் இவ்விருது வழங்கப்பட்டது.

5. 106 ஆவது இந்திய அறிவியல் மாநாட்டில், ‘ஆண்டின் சிறந்த அரங்கு’க்கான விருதை வென்ற இந்திய அரங்கு எது?

**விடை** : பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO)

**விளக்கம் :**

1. பஞ்சாப்பின் பக்வாராவில் உள்ள லவ்லி புரொபஷனல் பல்கலைக்கழகத்தில் நடந்த 106 ஆவது இந்திய அறிவியல் மாநாட்டில், ‘ஆண்டின் சிறந்த அரங்கு’க்கான விருதை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைபின்

அரங்கு வென்றுள்ளது. சுய முன்னேற்றம் மற்றும் தேசத்தின் பெருமையை ‘இந்தியாவில் தயாரிப்போம்’ என்ற கருத்துடன் இந்த அரங்கம் காட்சிப்படுத்தியது. இது பல்வேறு பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தது மற்றும் அவர்களுக்கு DRDO விஞ்ஞானிகளுடன் கலந்துரையாட ஒரு வாய்ப்பினை தந்தது.

6. மந்த்ராலயம் மற்றும் விதிமண்டல் வர்த்தகர் சங்கத்தால் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட பத்திரிக்கையாளர் யார்?

**விடை** : தீனு ராந்திவே (Dinu Randive)

**விளக்கம்** :

1. மகாராஷ்டிரா சட்டசபை மற்றும் செயலகத்தை உள்ளடக்கிய பத்தரிக்கையாளர்கள் சங்கமான மந்த்ராலயம் மற்றும் விதிமண்டல் வர்த்தகர் சங்கத்தால் மூத்த பத்திரிக்கையாளர் தீனு ராந்திவே (93), வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அவர் தனது பத்திரிக்கைத் துறை வாழ்வை 1956இல் தொடங்கினார்.

7. யாருக்கு ICSI வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது?

**விடை** :ஆதி கோத்ரேஜ்

**விளக்கம்** :

1. ‘Translating Excellence in Corporate Governance into Reality’ காக தொழிலதிபரும், கோத்ரேஜ் குழுமத்தின் தலைவருமான ஆதி கோத்ரேஜ் அவர்களுக்கு ICSI வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது. பொன்விழா கொண்டாடும் இந்திய நிறுவன செயலாளர்கள் நிறுவனம் (ICSI) மூலமாக இவ்விருது வழங்கப்படுகிறது.

8. மேற்கு வங்க திரைப்பட பத்திரிக்கையாளர்கள் சங்கத்தால் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை** : புத்ததேவ் தாஸ்குப்தா

**விளக்கம்** :

1. தேசிய விருது வென்ற திரைப்படத் தயாரிப்பாளர் புத்ததேவ் தாஸ்குப்தாவுக்கு மேற்கு வங்க திரைப்பட பத்திரிக்கையாளர்கள் சங்கம், வாழ்நாள் சாதனையாளர்

விருது வழங்கி கௌரவித்துள்ளது. சத்யஜித்ரேவின் பெயரால் இவ்விருது வழங்கப்படுகிறது. ஜனவரி 13 அன்று நடந்த ‘சினிமார் சமபர்தான்’ விழாவில் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது. ஒரு இயக்குநராக, ‘உத்தரா’ (2000) மற்றும் ‘ஸ்வப்னர் தின்’ (2005) ஆகிய திரைப்படங்களுக்காக இரண்டு முறை சிறந்த இயக்குநருக்கான தேசிய திரைப்பட விருதை அவர் வென்றுள்ளார்.

9. புதிதாக உருவாக்கப்பட்ட சுசிலா தேவி இலக்கிய விருதினை வென்றவர் யார்?

**விடை** : நமீதா கோகலே

**விளக்கம் :**

1. மத்திய பிரதேசம் மாநிலம் போபாலிலுள்ள பாரத் பவனின் பல்கலை மையத்தில், முதல் இலக்கியம் மற்றும் கலை விழா ஜனவரி 12 – 14 வரை நடந்தது. இவ்விழா, முன்னாள் சட்ட அதிகாரி ராகவ் சந்திராவின் யோசனையில் உதித்ததாகும். எழுபதுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் இந்த விழாவில் பங்கேற்றனர். இவ்விழாவில் “Things to Leave Behind” என்ற புதினத்துக்காக நமீதா கோகலேவுக்கு சுசிலா தேவி இலக்கிய விருது வழங்கப்பட்டது.

10. முதலாவது பிலிப் கோட்லர் (Philip Kotler) குடியரசு விருது பெற்ற இந்தியர் யார்?

**விடை** : நரேந்திர மோடி

**விளக்கம் :**

1. முதல் முறையாக வழங்கப்படும் பிலிப் கோட்லர் குடியரசு விருது பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது. நரேந்திர மோடியின் தலைமையில், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் மதிப்பக் கூட்டல் உற்பத்திக்கான (இந்தியாவில் தயாரிப்போம்) மையமாக இந்தியா கண்டறியப்பட்டு, தகவல் தொழில்நுட்பம், கணக்கு, நிதித்துறை ஆகியவற்றில் தொழிற்முறை சேவை வழங்கும் சர்வதேச மையமாகவும் இந்தியா மாறியுள்ளது என விருதுப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.
2. மக்கள், லாபம் மற்றும் கோள் ஆகியவற்றுக்கு இந்த விருது முக்கியத்துவம் அளிக்கிறது. இந்த விருது ஆண்டுதோறும் தேசிய தலைவர்களுக்கு வழங்கப்படும். உலகளவில் பிரபலமான முனைவர் பிலிப் கோட்லர், நார்த்வெஸ்டன் பல்கலையின் கெலாக் மேலாண்மை கல்லூரியின் விற்பனைத் துறையில் முனைவராகப் பணியற்றிவருகிறார்.

11. பிராங்கோ – ஜெர்மன் மனித உரிமைகள் விருதை வென்றவர் யார்?

**விடை** : யூ வென்செங் (Yu Wensheng)

**விளக்கம்** :

1. காவலில் வைக்கப்பட்டுள்ள சீன வழக்குரைஞரான யூ வென்செங், மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அவரது சிறந்த பங்களிப்பிற்காக பிராங்கோ – ஜெர்மன் மனித உரிமைகள் விருதை வென்றுள்ளார். ஜனவரி 14 அன்று பீஜிங்கில் ஜெர்மன் தூதரகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில், வென்செங்கின் மனைவி மேடம் சு யான், அவரது கணவரின் சார்பில் மனித உரிமைகளுக்கான விருதை பிரான்ஸ்-ஜெர்மன் தூதர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.
2. அரச அதிகாரங்களை தூண்டிவிட்டதாக குற்றம்சாட்டப்பட்ட வென்செங், இம்மாதம் காவலில் வைக்கப்பட்டார். இந்த கைது நடவடிக்கைக்கு முன், சீன அரசியலமைப்பில் 5 சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக ஒரு பகிரங்க கடிதத்தை அவர் விநியோகித்தார். அது அதிபர் தேர்தலில் பல் வேட்பாளர்களை நிறுத்துவது குறித்ததாகும்.

12. 2018 ஆம் ஆண்டுக்கான காந்தி அமைதிப்பரிசுக்கு தெரிவாகியுள்ள அமைப்பு / நபர் யார்?

**விடை** : யோஹே சசகவா (Yohei Sasakawa)

**விளக்கம்** :

1. கடந்த 1995 ஆம் ஆண்டு மகாத்மா காந்தியின் 125 ஆவது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது தொடங்கி அவரது நினைவாக அமைதிக்கான காந்தி அமைதிப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இந்திய அரசால் வழங்கப்படும் இப்பரிசுத் தொகுப்பில் 1 கோடி ரூபாய் பணம், சான்றிதழ், பதக்கம் மற்றும் ஒரு நேர்த்தியான பாரம்பரிய கைவினை / கைத்தறி உருப்படி போன்றவை இடம் பெறும்.
2. மத்திய கலாச்சார அமைச்சகமானது 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆகிய 4 ஆண்டுகளுக்கான காந்தி அமைதிப் பரிசு வெற்றியாளர்களின் பெயர்களை வெளியிட்டுள்ளது. மத்திய அரசு வெளியிட்டுள்ள இப்பட்டியலின்படி, கன்னியாகுமரியை சேர்ந்த விவேகானந்தா கேந்திரத்துக்கு (கிராமப்புற மேம்பாடு, கல்வி மற்றும் இயற்கை வளங்களின் வளர்ச்சி ஆகியவற்றிற்கான பங்களிப்புக்காக) 2015 ஆம் ஆண்டுக்கான பரிசும், சுலப் இன்டர்நேஷனல் &

அகூஷயப்பாத்திர அறக்கட்டளை (சா்வதேச அளவில் இலட்சக்கணக்கான குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கியதற்காக) ஆகியவற்றுக்கு கூட்டாக 2016 ஆம் ஆண்டுக்கான பரிசும் அறிவிக்கப்பட்டுள்ளது.

13. அனைத்துக் கண்டங்களிலும் உள்ள ஏழு மிகவுயா்ந்த சிகரங்கள் மற்றும் எரிமலைகளின் உச்சியை அடைந்த முதல் இந்தியா் மற்றும் இளம்வயது நபா் யாா்?

**விடை** : சத்யரூப் சித்தாந்தா

**விளக்கம்** :

1. ஜனவரி 19 அன்று அண்டாா்டிகாவின் மிகவுயர சிகரமான சிட்லி மலையின் உச்சியை மலையேற்ற வீரா் சத்யரூப் சித்தாந்தா அடைந்தாா். இதன்மூலம் அனைத்து கண்டங்களிலும் உள்ள ஏழு மிக உயர்ந்த சிகரங்கள் மற்றும் எரிமலைகளின் உச்சியை அடைந்த முதல் இந்தியா் மற்றும் இளம் வயது நபா் என்ற பெருமையை இவா் பெற்றுள்ளாா். 35 ஆண்டுகள் 262 நாட்களில் அவா் இந்தச் சாதனையை செய்துள்ளாா். ஆஸ்திரேலியாவின் டேனியல் புல், 36 ஆண்டுகள் 157 நாட்களில் இந்தச் சாதனையை செய்துள்ளாா்.

14. நிலையான மண் மேலாண்மைக்கான சிறந்த பங்களிப்பிற்காக நடப்பாண்டின் ஜப்பான் பரிசை வென்றுள்ள இந்திய வம்சாவளி யாா்?

**விடை** : ரத்தன் லால்

**விளக்கம்** :

1. ஜப்பான் பரிசு அமைப்பானது "மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தி" துறை & "உயிரியல் உற்பத்தி மற்றும் சுற்றுச்சூழலில்" ஆகிய துறைகளுக்கான 2019 ஆம் ஆண்டின் வெற்றியாளா்களை அறிவித்துள்ளது. ஓஹியோ மாநில பல்கலைக்கழகத்தில் மண் அறிவியலாளராக பணிபுரியும் இந்திய வம்சாவளியை சோ்ந்த Dr. ரத்தன் லாலுக்கு, நிலையான மண் மேலாண்மைக்கான அவரது சிறந்த பங்களிப்பிற்காக 2019ம் ஆண்டின் ஜப்பான் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

15. எந்த இந்திய – அமெரிக்க கொடையாளிக்கு 2019 ஆம் ஆண்டுக்கான ரோசா பாா்க்ஸ் முன்னோடி (Rosa Parks Traiblazer) விருது வழங்கப்பட்டுள்ளது?

**விடை** : குரிந்தா் சிங் கல்சா

**விளக்கம்** :

1. இந்திய – அமெரிக்க கொடையாளியும், தொழில்முனைவோருமான குரிந்தர் சிங் கல்சாவுக்கு நடப்பாண்டுக்கான ரோசா பார்க்ஸ் முன்னோடி விருது வழங்கப்பட்டுள்ளது. சீக்கிய சமூகத்தின் தலையணி குறித்த அமெரிக்க அதிகாரிகளின் கொள்கையை அவர்களை மாற்றிக் கொள்ள நிர்பந்தித்த அவரது பரப்புரைக்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

16. 2018ம் ஆண்டின் சாகித்ய அகாதெமியின் சிறந்த தமிழ் மொழி பெயர்ப்புக்காக விருது பெற்ற நூல் எது?
**விடை:** திருடன் மணியன் பிள்ளை
**விளக்கம்:**
- 2018ம் ஆண்டுக்கான, சாகித்ய அகாதெமியின் சிறந்த மொழிபெயர்ப்புக்கான விருது முயூசி.ஃப்பிற்கு (கன்னியாகுமரி) கிடைத்துள்ளது.
- இவருக்கு, இந்து கோபனின் ''மணியன் பிள்ளையட ஆத்ம கதா'' என்ற மலையாள சுயசரிதையை ''திருடன் மணியன் பிள்ளை'' என்ற பெயரில் மொழி பெயர்த்தற்காக இவ்விருது வழங்கப்பட்டது.

17. 2019ம் ஆண்டின் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அப்தா பிரபந்தன் புரஸ்கார் விருது யாருக்கு வழங்கப்பட்டது?
**விடை:** தேசிய பேரிடர் பதிலளிப்பு படையின் 8வது படைப்பிரிவு
**விளக்கம்:**
- நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பிறந்த நாளன்று (ஜனவரி 23) ''சுபாஷ் சந்திர போஸ் அப்தா பிரபந்தன் புரஸ்கார்'' என்ற விருதை வழங்குவதாக மத்திய அரசு அறிவிருத்திருந்தது.
  - அதன்படி, 2019ம் ஆண்டிற்கான சுபாஷ் சந்திர போஸ் அப்தா பிரபந்தன் புரஸ்கார் விருது ''தேசிய பேரிடர் பதிலளிப்பு படையின் 8வது படைப்பிரிவிற்கு'' வழங்கப்பட்டுள்ளது.

18. விளையாட்டு துறையிலிருந்து பாரத ரத்னா விருது பெற்ற முதல் நபர் யார்?
**விடை:** சச்சின் டெண்டுல்கர்
**விளக்கம்:**
- இந்தியாவின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருது, 2019ம் ஆண்டில் பிரணாப் முகர்ஜி (முன்னாள் குடியரசுத் தலைவர்), நானாஜி தேஷ்முக் (ஜன சங்க தலைவர்) மற்றும் புபேன் ஹசாரியா (பிரபல இசையமைப்பாளர்) ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
  - முதல் பாரத ரத்னா விருது பெற்றவர்கள் (1954-ல்) - இராஜகோபாலச்சாரியார், இராதா கிருஷ்ணன்,C.V. ராமன்
  - விளையாட்டு துறையிலிருந்து பாரத ரத்னா விருது பெற்ற முதல் நபர் சச்சின் டெண்டுல்கர் ஆவார்.

19. எந்தப் பல்கலைக்கழகம் ''பிரிஷாவிற்கு'' டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது?
**விடை:** ஜெருசலேம் பல்கலைக்கழகம்
**விளக்கம்:**

- யோகாவில் பதினான்கு உலக சாதனைகளை படைத்துள்ள ஒன்பதே வயதான நெல்லையைச் சேர்ந்த ''பிரிஷாவிற்கு'' ஜெருசலேம் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது.
    - 2017 டிசம்பரில்,''ஏசியா புக் ஆ.ஃ.ப் ரெக்கார்ட்'' சாதனை நிகழ்ச்சியில் சாதனை படைத்தார்.

20. அண்ணா விருது யாருக்கு வழங்கப்பட்டது?
**விடை:** சூரியக்குமார், ஸ்ரீதர் மற்றும் ரஞ்சித் குமார்
**விளக்கம்:**

- வீர தீர செயல் புரிந்த மூன்று இளைஞர்களுக்கு (சூரியக்குமார், ஸ்ரீதர் மற்றும் ரஞ்சித் குமார்) ''அண்ணா விருது'' வழங்கி முதலமைச்சர் பழனிச்சாமி அவர்கள் கௌரவித்தார்.

21. பேட்டி பச்சாவ் பேட்டி பாதவோ திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்கான விருது பெற்ற தமிழக மாவட்டம் எது?
**விடை:** திருவண்ணாமலை
**விளக்கம்:**

- பேட்டி பச்சாவ் பேட்டி பாதவோ (பெண் குழந்தைகளை பாதுகாப்போம் மற்றும் கற்பிப்போம்) என்ற திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக இரு விருதுகளை தமிழகம் பெற்றுள்ளது அவ்விருதுகள்:-
    - 1) சிறப்பாக செயல்படுத்தியதற்கான மாநில விருது – தமிழ்நாடு
    - 2) சிறப்பாக செயல்படுத்தியதற்கான மாவட்ட விருது – திருவண்ணாமலை
- குறிப்பு:
    - பேட்டி பச்சாவ் பேட்டி பாதவோ திட்டம் 22 ஜனவரி 2015ல் தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

22. 2019ம் ஆண்டின் அசோக் சக்ரா விருது யாருக்கு வழங்கப்பட்டது?
**விடை:** நசிர் அகமது வானி
**விளக்கம்:**

- 2019 குடியரசு தின விழாவில், இராணுவத்தில் வீரதீர செயல் புரிந்தவர்களுக்காக வழங்கப்படும் மிக உயரிய விருதான அசோக் சக்ரா விருது காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த இராணுவ வீரர் ''நசிர் அகமது வானி'' (மரணத்திற்கு பிறகு) என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
    - இவ்விருதானது 1952 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

23. அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் உயரிய விருதான ''கர்நாட் விருது'' பெற்ற இந்தியர் யார்?
**விடை:** பியுஷ் கோயல்
**விளக்கம்:**

- அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் உயரிய விருதான ''கர்நாட் விருது'', இந்திய ரயில்வே துறை அமைச்சர் பியுஷ் கோயலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- மத்திய எரிசக்தி துறை அமைச்சராக பியுஷ் கோயல் இருந்த போது 18 ஆயிரம் மின் இணைப்பு வழங்கியதை பாராட்டி இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

# நியமனங்கள்

1. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைமைத் தகவலாணையர் (Chief Information Commissioner – CIC) யார்?

**விடை** : சுதிர் பார்கவா

**விளக்கம்** :

1. மத்திய சமூக நீதி அமைச்சகத்தின் முன்னாள் செயலாளர் சுதிர் பார்கவா ஜனவரி 1 அன்று புதிய தலைமைத் தகவல் ஆணையராக பொறுப்பேற்றுக் கொண்டார். அவரைத் தவிர முன்னாள் IFS அதிகாரி யஷ்வர்தன் குமார் சின்ஹா, முன்னாள் IRS அதிகாரி வனஜா N. சர்னா, முன்னாள் IAS அதிகாரி நீரஜ் குமார் குப்தா, முன்னாள் சட்டத்துறை செயலர் சுரேஷ் சந்திரா ஆகிய 4 பேரையும் புதிய தகவல் ஆணையர்களாக குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் நியமித்தார்.

2. தெலுங்கானா உயர்நீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதி யார்?

**விடை** : T B ராதாகிருஷ்ணன்

**விளக்கம்** :

1. ஹைதராபாத்தில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடந்த நிகழ்ச்சியில் தெலுங்கானா மாநில உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக தோட்டத்தில் டீ ராதாகிருஷ்ணன் பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு அம்மாநில ஆளுநர் நரசிம்மன் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். 2014 ஆம் ஆண்டு ஆந்திராவிலிருந்து தெலுங்கானாவை பிரித்த பிறகு 2019 ஜனவரி 1 முதல் தெலுங்கானாவில் புதிய உயர்நீதிமன்றம் செயல்பட தொடங்கியது.

3. ரயில்வே வாரியத்தின் புதிய தலைவர் யார்?

**விடை** : வினோத் குமார் யாதவ்

**விளக்கம்** :

1. ரயில்வே வாரியத்தலைவராக இருந்த அஸ்வானி லோஹானி ஓய்வு பெற்றதையடுத்து, அந்தப் பதவியில் தெற்கு மத்திய ரயில்வேயின் பொது மேலாளரான வினோத் குமார் யாதவ், ரயில்வே அமைச்சகத்தின் கீழ் ரயில்வே வாரியத்தின் தலைவராகவும், இந்திய அரசாங்கத்தின் அலுவல் சார் தலைமைச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

4. ராணுவத் தளவாட வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை** : சௌரப் குமார்

**விளக்கம்** :

1. மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவில் உள்ள ராணுவத் தளவாட வாரியத்தின் தலைவராகவும், ராணுவத்தளவாட தொழிற்சாலைகளின் இயக்குநராகவும் சௌரப் குமார் பொறுப்பேற்றுள்ளார். ராணுவத் தளவாடங்கள் உற்பத்தித்துறையில் வல்லுநரான சௌரப், 1982 ஆம் ஆண்டு ராணுவத் தளவாட அமைப்பில் அதிகாரியாக இணைந்தார்.
2. அதையடுத்து மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ், திட்டமிடல் மற்றும் ஒத்துழைப்பு பிரிவின் இயக்குநராக கடந்த 2002-2009 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

5. LIC இன் இடைக்கால தலைவர் யார்?

**விடை** : ஹேமந்த் பார்கவா

**விளக்கம்** :

1. LIC நிறுவனத்தின் தலைவராக இருந்த V.K. சர்மா டிசம்பர் 31 ஓய்வு பெற்றார். இதையடுத்து, LIC'க்கு இடைக்கால தலைவராக ஹேமந்த் பார்கவாவை மத்திய அரசு நியமனம் செய்துள்ளது. ஹேமந்த் பார்கவா LIC இன் நிர்வாக இயக்குநராக கடந்த 2017 பிப்ரவரி மாதம் நியமிக்கப்பட்டவர்.
2. புதிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரை தேர்வு செய்வதற்காக தில்லியில் ஜனவரி 4 அன்று வங்கிகள் வாரிய செயலகத்தால் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில், எட்டு அதிகாரிகள் நேர்முகம் செய்யப்பட்டனர். செப்டம்பர் 30 அன்று உஷா சங்வான் ஓய்வு பெற்றதிலிருந்து ஒரு மேலாண்மை இயக்குநர் பதவி காலியாக இருந்தது. LIC இன் தலைமை நிர்வாகம் ஒரு தலைவரையும், நான்கு மேலாண்மை இயக்குநரையும் கொண்டிருக்கும்.

6. பாகிஸ்தானின் புதிய தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை** : ஆசிப் சயீத் கோசா

**விளக்கம் :**

1. ஜனவரி 2 அன்று பாகிஸ்தான் அதிபர் ஆரிப் அல்வி, பாகிஸ்தானின் புதிய தலைமை நீதிபதியாக ஆசிப் சயீத் கோசாவை நியமித்தார். ஜனவரி 18 அன்று ஓய்வு பெறவுள்ள, தற்போதுள்ள தலைமை நீதிபதி மியான் சாகிப் நிசாருக்குப் பிறகு பதவியேற்கும் ஆசிப், 2019 டிசம்பர் 20 வரை அப்பதவியில் இருப்பார். பாகிஸ்தானின் தலைமை நீதிபதி என்பவர் பாகிஸ்தான் நீதிமன்ற அமைப்பின் தலைவரும், பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியும் ஆவார்.

7. சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை பொருளாதார ஆலோசகராக பொறுப்பேற்றுள்ள இந்திய வம்சாவளி ஆளுமை யார்?

**விடை** : கீதா கோபிநாத்

**விளக்கம் :**

1. சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) தலைமை பொருளாதார ஆலோசகராக இந்தியாவில் பிறந்து அமெரிக்காவில் வசிக்கும் கீதா கோபிநாத் (47) நியமிக்கப்பட்டுள்ளார். இந்த உயரிய பதவியை எட்டிய முதலாவது பெண்மணி என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.
2. இதற்குமுன் தலைமை பொருளாதார ஆலோசகராக பதவி வகித்து வந்த மௌரிஸ் ஓப்ஸ்பெல்ட் கடந்த 31 அன்று ஓய்வு பெற்றதை அடுத்து 11ஆவது தலைமை பொருளாதார ஆலோசகராக கீதா நியமிக்கப்பட்டுள்ளார். ரகுராம் ராஜனுக்குப் பின் இப்பதவி வகிக்கும் 2ஆம் இந்தியர் இவராவார்.

8. சாஷ்த்ர சீமா பால் (SSB) இன் புதிய தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை** : குமார் ராஜேஷ் சந்திரா

**விளக்கம் :**

1. மத்திய அமைச்சரவை நியமனக்குழு சாஷ்த்ர சீம பால் (SSB) என அழைக்கப்படும் ஆயுத எல்லைப் படையின் தலைமை இயக்குநராக குமார் ராஜேஷ் சந்திராவை (1985 : IPS) நியமித்துள்ளது. தற்போது இவர், உள்நாட்டு

விமானப் பாதுகாப்பு அலுவலகத்தின் தலைமை இயக்குநராகப் பணிபுரிந்து வருகிறார். இவருக்கு முன் SS. தேஸ்வாஸ் இப்பதவியிலிருந்தார்.

9. சர்வதேச சூரிய ஆற்றல் கழகத்தின் தலைவராக பொறுப்பேற்றுள்ள முதல் இந்தியர் யார்?

**விடை :** பிரணவ் R மேத்தா

**விளக்கம் :**

1. ஜனவரி 1 அன்று சர்வதேச சூரிய ஆற்றல் கழகத்தின் முதல் இந்திய தலைவராக பிரணவ் R மேத்தா பொறுப்பேற்றுக் கொண்டார். சூரிய ஆற்றல் துறையில் தொலைநோக்குப் பார்வையுடைய இவர், இந்திய தேசிய சூரிய ஆற்றல் கூட்டமைப்பின் (NSEFI) தலைவராகவும் உள்ளார்.

10. தைவானின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டள்ளவர் யார்?

**விடை :** சூ செய் - சங்

**விளக்கம் :**

1. தைவானில் கடந்தாண்டு நவம்பரில் நடந்த உள்ளாட்சி தேர்தலில் பிரதமர் வில்லியம் லாயின் ஆளும் ஜனநாயக முற்போக்கு கட்சி பெரும் பின்னடவை சந்தித்தது. தைவானை பொறுத்தவரை உள்ளூர் தேர்தலில் ஆளுங்கட்சி தோல்வியை தழுவும்போது, தலைமை பொறுப்பில் உள்ளோர் பதவி விலகுவது வழக்கமாக உள்ளது. அவ்வகையில் பிரதமர் வில்லியம் லாய் தனது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்தார்.

11. ஊடக சுதந்திரத்திற்கான கூட்டணியின் (AFMF) தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய பத்திரிகையாளர் யார்?

**விடை :** N ராம்

**விளக்கம் :**

1. ஊடக அமைப்புகள், விளம்பரதாரர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கான செயற்குழு மற்றும் ஊடக ஆலோசனை அமைப்பான ஊடக சுதந்திரத்திற்கான கூட்டணியின் தலைவராக THG வெளியீட்டு நிறுவனத்தின் தலைவர் நரசிம்மன் ராம் நியமிக்கப்பட்டுள்ளார். ஊடக சுதந்திரம் மற்றும் பத்திரிகையாளரின் பாதுகாப்பிற்காக இந்தக் கூட்டணி அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

12. சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ICC) புதிய தலைமைச் செயல் அதிகாரி யார்?

**விடை** : மனு சானே (Manu Sawhney)

**விளக்கம்** :

1. மூத்த ஊடகவியலாளரான மனு சானே, சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். வரும் பிப்ரவரி மாதம் இந்தக் கவுன்சிலில் இணையவுள்ள அவர், 2019 ICC ஆண்கள் கிரிக்கெட் உலக கோப்பை போட்டி நிறைவுபெற்றவுடன் தற்சமயம் பதவியிலிருக்கும் டேவிட் ரிச்சர்டசன் பதவிவிலகியபின் ஜூலையில் அப்பொறுப்பை ஏற்றுக் கொள்வார். சிங்கப்பூர் விளையாட்டு மையத்தின் முன்னாள் தலைமைச் செயல் அதிகாயும், ESPN ஸ்டார் ஸ்போர்ட்ஸின் மேலாண்மை இயக்குனருமாவார் மனு சானே.

13. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC) தலைமை இயக்குநராக (விசாரணை) நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை** : பிரபாத் சிங்

**விளக்கம்** :

1. 1988 ஆம் ஆண்டு ஜார்க்கண்ட் பிரிவைச் சேர்ந்த IPS அதிகாரியான பிரபாத் சிங், தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் புதிய தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். தற்சமயம் இவர், மத்திய சேமக்காவல் படையின் சிறப்பு இயக்குநராக உள்ளார். 2020 ஏப்ரல் 30 வரை இவர் இப்பதவியில் இருப்பார். இவரைத்தவிர தேசிய பேரிடர் மீட்புப்படையின் தலைமை இயக்குநராக S N பிரதான் நியமிக்கப்பட்டுள்ளார்.

14. உலக சுகாதார அமைப்பின் தென் கிழக்கு ஆசிய பிராந்தியத்தின் முதல் பெண் இயக்குநராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை:** டாக்டர். பூனம் கெத்ரபால் சிங் (Dr. Poonam Khetrapal Singh)

**விளக்கம்:**

- உலக சுகாதார அமைப்பின்(WHO), தென்கிழக்கு ஆசியாவின் பிராந்திய இயக்குநராக "டாக்டர். பூனம் கெத்ரபால் சிங்"(Poonam Khetrapal Singh) நியமிக்கப்பட்டுள்ளார்.
    - உலக சுகாதார அமைப்பின்,கிழக்கு ஆசியாவின் முதல் பெண் இயக்குநர் இவரே ஆவார்.

15. மத்திய இடைக்கால நிதியமைச்சராக சமீபத்தில் நியமிக்கப்பட்டவர் யார்?
**விடை:** பியுஷ் கோயல்
**விளக்கம்:**

- மத்திய இடைக்கால நிதியமைச்சராக இரயில்வே துறை அமைச்சர் பியூஷ் கோயல் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - அருண் ஜேட்லி-யின் உடல்நிலை சீராகும் வரை நிதித்துறையானது பியூஷ் கோயலிடம் இருக்கும்.

16. பாகிஸ்தானில் நியமிக்கப்பட்ட முதல் பெண் இந்து நீதிபதி யார்?
**விடை:** சுமன் குமாரி
**விளக்கம்:**

- பாகிஸ்தானின், குவாம்பர் - ஹாதாத்கோட் பகுதியின் சிவில் கோர்ட் நீதிபதியாக "சுமன் குமாரி" என்ற இந்து பெண் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இந்து மதத்தை சேர்ந்த முதல் பெண் நீதிபதி இவரே ஆவார்.

# பொருளாதார நிகழ்வுகள்

1. ESAF சிறுகடன் வங்கியானது அண்மையில் ஓர் அட்டவணை வங்கியாக (Scheduled Bank) செயல்பட RBI அனுமதி அளித்துள்ளது. ESAF இன் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

**விடை:** திருச்சூர்

**விளக்கம்:**

1. ரிசர்வ் வங்கிச் சட்டம் (1934) இன் 2ஆவது அட்டவணையின்படி, நுளுயுகு சிறுகடன் வங்கி நிறுவனம், ஓர் அட்டவணை வங்கியாக செயல்பட இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து ஒப்புதல் பெற்றுள்ளது. இதன் மூலம் பெடரல் வங்கி, தென்னிந்திய வங்கி, கத்தோலிக் சிரியன் வங்கி மற்றும் தனலக்ஷ்மி வங்கி ஆகியவற்றுக்குப் பின், கேரளாவின் 5 ஆவது அட்டவணை வங்கியாக ESAF மாறியுள்ளது.

2. ASEAN நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பனை எண்ணெய் மீதான இறக்குமதி வரியை 44 சதவீதத்திலிருந்து எத்தனை % ஆக இந்தியா குறைத்துள்ளது?

**விடை:** 40

**விளக்கம்:**

1. ASEAN (தெற்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு) நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் பனை எண்ணெய் மீதான இறக்குமதி வரியை இந்தியா குறைத்துள்ளது. சுத்திகரிக்கப்பட்ட மற்றும் சுத்திகரிக்கப்படாத இருவகை பனை எண்ணெய்க்கும் இந்த வரி குறைப்பு பொருந்தும்.
2. சுத்திகரிக்கப்படாத பனை எண்ணெய்க்கான இறக்குமதி வரி 44 சதவீதத்திலிருந்து 40% ஆக குறைக்கப்பட்டுள்ளது. மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சுத்திகரிக்கப்பட்ட பனை எண்ணெய்க்கான வரி 54 சதவீதத்திலிருந்து 45% ஆக குறைக்கப்பட்டுள்ளது. இந்தோனேசியா மற்றும் பிற யுளுநுயுே உறுப்பு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டால் அவ்வரி சதவீதம் 50% ஆக இருக்கும்.

3. MSME புத்துயிர்ப்பு மீதான RBI குழுவின் தலைவர் யார்?

**விடை:** U K சின்ஹா

**விளக்கம்:**

1. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) துறையின் பொருளாதார மற்றும் நிதி நிலைத்தன்மையை விரிவாக மீளாய்வு செய்து நீண்டகால தீர்வுகளை முன்மொழிவதற்காக முன்னாள் SEBI தலைவர் U K சின்ஹா தலைமையிலான 8 உறுப்பினர்கள் கொண்ட வல்லுநர் குழுவை ரிசர்வ் வங்கி நியமித்துள்ளது.
2. பணமதிப்பிழப்பின் காரணமாக MSME பிரிவானது மிகுந்த சிரமத்தை எதிர் கொண்டுள்ளது. வரும் ஜூன் மாத இறுதிக்குள் இந்தக் குழு தனது அறிக்கையை சமர்ப்பிக்கும்.

4. எந்தெந்த வட்டார ஊரக வங்கிகளை ஒருங்கிணைத்து ஒரே வட்டார ஊரக வங்கியாக மத்திய அரசு மாற்றியுள்ளது?

**விடை:** பஞ்சாப் கிராமின் வங்கி, மால்வா கிராமின் வங்கி மற்றும் சட்லஜ் கிராமின் வங்கி

**விளக்கம்:**

1. பஞ்சாப் கிராமின் வங்கி, மால்வா கிராமின் வங்கி மற்றும் சட்லஜ் கிராமின் வங்கி ஆகிய மூன்று வட்டார ஊரக வங்கிகளையும் ஜனவரி 1 முதல் ஒரே

ஒற்றை வட்டார ஊரக வங்கியாக (Regional Rural Bank) இந்திய அரசு இணைத்துள்ளது.

2. பஞ்சாப் மாநில தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (NABARD), பஞ்சாப் தேசிய வங்கி, இந்திய ஸ்டேட் வங்கி மற்றும் பஞ்சாப் மற்றும் சிந்து வங்கி ஆகியன இந்த வட்டார ஊரக வங்கிகளுக்கு ஆதரவளிக்கின்றன.

5. ரிசர்வ் வங்கியின் டிஜிட்டல் பணப்பரிமாற்றம் மீதான குழுவின் தலைவர் யார்?

**விடை:** நந்தன் நிலகேனி

**விளக்கம்:**

1. மின்னணு பணப்பரிமாற்றத்தை மேம்படுத்தும் வழிமுறைகளை காண நந்தன் நிலகேனி தலைமையிலான ஐந்து பேர் கொண்ட குழு ஒன்றை ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது. நாட்டில் தற்போது செயல்படுத்தப்படும் மின்னணு பணப்பரிமாற்ற முறைகள், அதிலுள்ள இடைவெளி, மின்னணு பணப்பரிமாற்ற வழங்குவதில் உள்ள இடர்பாடுகள் உள்ளிட்டவற்றை ஆராய்ந்து அவற்றைப் போக்குவதற்கான வழிவகைகளை இந்தக் குழு பரிந்துரைக்கும்.

6. மத்திய புள்ளியியல் அலுவலகத்தின் அண்மைய மதிப்பீட்டின்படி, இந்திய பொருளாதாரம் 2018-19 நிதியாண்டில் எத்தனை % அதிகரிக்கும் என தெரிவித்துள்ளது?

**விடை:** 7.2%

**விளக்கம்:**

1. புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் கீழ், மத்திய புள்ளியியல் அலுவலகம், நடப்பு நிதியாண்டிற்கான தேசிய வருவாயின் முதலாவது முன்கூட்டிய மதிப்பீட்டை சமீபத்தில் வெளியிட்டது. இதில், தயாரிப்பு மற்றும் வேளாண் துறைகளின் செயல்பாடுகளில் காணப்படும் முன்னேற்றத்தை அடுத்து நடப்பு 2018-19ஆம் நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.2 சதவீதமாக இருக்கும். இது, 2017-18ஆம் நிதியாண்டில் காணப்பட்ட பொருளாதார வளர்ச்சியான 6.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் அதிகம்.

7. உலக வங்கியின் 2019 ஆம் ஆண்டு சர்வதேச பொருளாதார வளர்ச்சி அறிக்கையின்படி, நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி சதவீதம் என்ன?

**விடை:** 7.3%

**விளக்கம்:**

1. நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.3 சதவீதமாக இருக்கும் எனவும், எதிர்வரும் 2019 & 2020 ஆம் ஆண்டுகளில் 7.5% அளவுக்கு அது உயரும் எனவும், உலக வங்கியின் 'Darkening Skies' என்று தலைப்பிடப்பட்ட 2019 ஆம் ஆண்டு சர்வதேச பொருளாதார வளர்ச்சி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனப் பொருளாதாரம் 2019 & 2020 ஆம் ஆண்டுகளில் 6.2 சதவீதமாகவும், 2021 ஆம் ஆண்டில் 6 சதவீதமாகவும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.
2. இந்தியாவின் நுகர்வு மற்றும் முதலீட்டின் அடிப்படையில் வளர்ச்சி வீதம் கணிக்கப்பட்டுள்ளது. உலகிலேயே அதிவேகமாக வளரும் பொருளாதார நாடாக இந்தியா உள்ளதாக உலக வங்கியின் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST) இணக்கம் மற்றும் வங்கி மறுமூலதனமாக்கம் போன்ற அமைப்புச் சீர்திருத்தங்களின் பயனாக உள்நாட்டு தேவை வலுப்படுத்தப்பட்டுள்ளது.

8. கொள்கை தயாரிப்பை ஆராய்ச்சியுடன் இணைக்கும் SEBI குழுவின் தலைவர் யார்?

**விடை:** சங்கர் தே

**விளக்கம்:**

1. இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியமானது சமீபத்தில் தனது ஆராய்ச்சி செயல்பாட்டை வலுப்படுத்தவும், கொள்கை தயாரிப்புக்கான இணைப்பை மேம்படுத்துவதற்குமாக ஓர் ஆராய்ச்சி ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளது. இந்தக்குழு Dr. சங்கர் தேவின் தலைமையிலிருக்கும் மூலதனச் சந்தைகளின் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறைக்கான ஆராய்ச்சிகள் சம்பந்தப்பட்ட கொள்கை உருவாக்கத்தில் இந்த ஆராய்ச்சி ஆலோசனைக் குழு உதவுகிறது.

9. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமல்படுத்தப்பட்ட பின், மாநிலங்கள் எதிர்கொள்ளும் வருவாய் பற்றாக்குறை குறித்து ஆராயும் அமைச்சர்கள் குழுவின் தலைவர் யார்?

**விடை:** சுஷில் குமார் மோடி

**விளக்கம்:**

1. நாடு முழுவதும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST) அமல்படுத்திய பின், சில மாநிலங்களில், வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதை ஆராயவும், வருவாயை அதிகரிப்பதற்கான வழி வகைகளை பரிந்துரைக்கவும், 7 உறுப்பினர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு, பீகார் துணை முதலமைச்சர் சுஷில் குமார் லோடி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

10. நிலைச்சொத்தில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகளின் (GST) பிரச்சனைகள் குறித்து ஆராயும் அமைச்சர்கள் குழுமத்தின் தலைவர் யார்?

**விடை:** நிதின் படேல்

**விளக்கம்:**

1. சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ், நிலைச்சொத்துத் (Rea; Estate) துறையை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு ஏழு உறுப்பினர்கள்கொண்ட அமைச்சர்கள் குழுவை அமைத்துள்ளது. குஜராத் துணை முதலமைச்சர் நிதின் படேல், இந்தக் குழுவின் தலைவராக இருப்பார். இக்குழு, GSTன் இன் வரி வீதத்தைப் பகுப்பாய்வு செய்யும் மற்றும் குடியிருப்பு கட்டுமான அலகுகளுக்கான ஒரு கலப்புத் திட்டத்தையும் பரிந்துரைக்கும்.

11. GST இன் கீழ் லாட்டரி தொடர்பான பிரச்சனைகள் குறித்து ஆராய்வதற்காக, புதிதாக நியமிக்கப்பட்ட குழுமத்தின் தலைவர் யார்?

**விடை:** சுதிர் முங்கந்திவர்

**விளக்கம்:**

1. ஜனவரி 10 ஆம் தேதியன்று புது தில்லியில் நடந்த GST கழகத்தின் 32 ஆவது கூட்டத்தில், லாட்டரி தொடர்பான பிரச்சனைகள் குறித்து ஆராய்வதற்காக அமைச்சர்கள் குழு அமைக்க முடிவு எடுக்கப்பட்டது. மகாராஷ்டிர மாநில நிதியமைச்சர் சுதிர் முங்கந்திவர் தலைமையிலான இந்த அமைச்சர்கள் குழு, GST இன் கீழ் லாட்டரி மீதான சீரான ஓரே வரி நடைமுறைப்படுத்துவது குறித்தும், பிற சிக்கல்கள் குறித்தும் ஆராயும்.

12. பட்ஜெட் செயல்முறையைப் பற்றி பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக நிதியமைச்சகம் டுவிட்டரில் எந்தத் தொடர் நிகழ்வை தொடங்கியுள்ளது?

**விடை:** Know Your Budget (உங்கள் வரவு செலவுத் திட்டத்தை அறிந்து கொள்ளுங்கள்)

**விளக்கம்:**

1. வரவுசெலவுத் திட்டத்தின் செயல்முறைகளைப் பற்றி பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக "உங்கள் வரவு செலவுத் திட்டத்தை அறிந்து கொள்ளுங்கள்" என்ற 15 நாட்கள் நடைபெறும் தொடர்நிகழ்வை டுவிட்டரில், மத்திய நிதியமைச்சகம் தொடங்கியுள்ளது. வரவு செலவுத் திட்டத்தின் முக்கியத்துவத்தையும் அதன் தயாரிப்பையும் இது கற்பிக்கும்.

13. தேசிய சரக்கு மற்றும் சேவை வரிகளுக்கான மேல் முறையீட்டு தீர்ப்பாயமானது (GSTAT) எங்கு அமைய உள்ளது?
**விடை:** புதுடெல்லி
**விளக்கம்:**

- மத்திய அமைச்சரவையானது தேசிய சரக்கு மற்றும் சேவை வரிகளுக்கான மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தை (GSTAT – Goods and Service Tax Appellate Tribunal) உருவாக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.
    - இந்த, தேசிய சரக்கு மற்றும் சேவை வரிகளுக்கான மேல் முறையீட்டு தீர்ப்பாயமானது புதுடெல்லியில் அமையவுள்ளது.

14. 2017ம் ஆண்டின் தேசிய பொருளாதார வளர்ச்சி எவ்வளவு?
**விடை:** 7.4 சதவீதம்
**விளக்கம்:**

- பொதுத் தேர்தல் குறித்த எதிர்பார்ப்புகளில், நடப்பாண்டின் முதல் அரையாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.6 சதவீதமாக குறையும் என ஜப்பானைச் சேர்ந்த தரகு நிறுவனமான நேமுரா தெரிவித்துள்ளது.
    - 2017ல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.4 ஆகும்.

15. சர்வதேச செலாவணி நிதியம் (IMF) வெளியிட்டுள்ள அறிக்கையில் 2020ல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி என்ன?
**விடை:** 7.7
**விளக்கம்:**

- சர்வதேச செலவாணி நிதியம்(IMF) வெளியிட்டுள்ள சர்வதேச பொருளாதார வளர்ச்சி குறித்த அறிக்கையில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2019ஆம் ஆண்டில் 7.5 சதவீதமாகவும், 2020ல் 7.7 சதவீதமாகவும் இருக்கும் என கணித்துள்ளது.
    - 2018ஆம் ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.3 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# முக்கிய தினங்கள்

1. எந்தத் தேதியில், உலக பிரைலி தினம் கொண்டாடப்படுகிறது?

**விடை:** ஜனவரி 4

**விளக்கம்:**

1. பார்வையிழந்தோருக்காக 'பிரைலி – Braille' முறையை கண்டறிந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பார்வையிழந்த விஞ்ஞானி லூயி பிரைலி என்பவரின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 4 அன்று உலக பிரைலி தினம் கொண்டாடப்படுகிறது. 1809ஆம் ஆண்டு ஜனவரி 4 அன்று வட பிரான்சிஸ் உள்ள கூப்விரேவில் லூயி பிரைலி பிறந்தார். அவரது மூன்றாம் வயதில், எதிர்பாராத விதமாக அவர் தனது இரு கண்களையும் இழந்தார்.

2. எந்தத் தேதியில், வெளிநாடுவாழ் இந்தியர் தினம் கொண்டாடப்படுகிறது?

**விடை:** ஜனவரி 9

**விளக்கம்:**

1. இந்தியாவின் மேம்பாட்டில் அயல்நாடுகளில் வாழும் இந்திய வம்சாவளியினரின் பங்களிப்பை குறிக்கும் வகையில், 2003 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 9 அன்று வெளிநாடு வாழ் இந்தியர் தினம் கொண்டாடப்படுகிறது. மகாத்மா காந்தி, தென்னாப்பிரிக்காவிலிருந்து மும்பை வந்துசேர்ந்த நாளின் (ஜனவரி 9, 1915) நினைவாக இந்நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

3. தேசிய தூயகாற்று திட்டத்திற்கான (National Clean Air Programme) அடிப்படை ஆண்டு எது?

**விடை:** 2017

**விளக்கம்:**

1. ஜனவரி 10 அன்று காற்று மாசை எதிர்த்துப் போராடுவதற்காக வெகுநாளாக எதிர்பார்த்துவந்த தேசிய தூயகாற்று திட்டத்தை, சுற்றுச்சூழல் அமைச்சர் Dr. ஹர்ஷ் வர்தன் தொடங்கி வைத்தார். தேசிய தூயகாற்று திட்டம் என்பது ஒரு மாசுக்கட்டுப்பாட்டு திட்டமாகும். அடிப்படை ஆண்டான 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, அடுத்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தபட்சம் 20% அளவுக்கு,

காற்றில் உள்ள கரடு முரடான (PM10) மற்றும் நுண் துகள்களின் (PM2.5) செறிவை குறைக்கும் நோக்கத்துடன் இது தொடங்கப்பட்டுள்ளது.

4. விடுதலை இந்தியாவின் முதல் இராணுவ தளபதி யார்?

**விடை:** K M கரியப்பா

**விளக்கம்:**

1. விடுதலை இந்தியாவில் இந்தியத் தரைப்படையின் முதல் படைத்தலைவராக Lt. ஜெனரல் K M கரியப்பா 1949 ஆம் ஆண்டு ஜனவரி 15 அன்று பதவியேற்றார். அதற்கு முன்புவரை ஆங்கில அதிகாரி ஜெனரல் சர் பிரான்சிஸ் புட்சர் படைத்தலைவராக இருந்தார். இந்திய இராணுவத்துக்கு இந்தியர் ஒருவரே இராணுவ தளபதியாக பதவியேற்ற ஜனவரி 15 ஆம் தேதி, ஒவ்வோர் ஆண்டும் இந்திய இராணுவ தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

5. 2019 ஜனவரி 21 அன்று 47 ஆவது மாநில உதய தினத்தை கொண்டாடிய மாநிலங்கள் எவை?

**விடை:** மணிப்பூர், மேகாலயா மற்றும் திரிபுரா

**விளக்கம்:**

1. 2019 ஜனவரி 21 அன்று மணிப்பூர், மேகாலயா மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்கள் தங்களது 47 ஆவது மாநில உதய தினத்தை கொண்டாடின. 1972 ஆம் ஆண்டில் இதே நாளில், இந்த மூன்று மாநிலங்களும் வடகிழக்கு பிராந்திய (மறுசீரமைப்பு) சட்டம் (1971)ன் கீழ் முழுமாநிலமாக மாறின. திரிபுரா மற்றும் மணிப்பூரின் முந்தைய சுதேச அரசுகள் இந்தியாவுடன் 1949இல் இணைந்தன. அதற்குமுன் வரை, அசாமின் ஒரு பகுதியாக மேகாலயா இருந்தது.

6. சர்வதேச கல்விக்கான தினம் எப்பொழுது அனுசரிக்கப்படுகிறது?

**விடை:** ஜனவரி 24

**விளக்கம்:**

- சர்வதேச கல்விக்கான தினம் - ஜனவரி 24 (International Education Day)
  - ஐக்கிய நாடுகள் பொதுச்சபையானது அமைதி மற்றும் வளர்ச்சிக்காக கல்வியின் மதிப்புக் கூட்டும் வகையில் ஜனவரி 24ம் தேதியை கல்விக்கான தினமாக அனுசரிக்க 2018ம் ஆண்டு டிசம்பரில் முடிவெடுத்தது.
  - அதன்படி உலகம் முழுவதிலும் ஜனவரி 24ம் தேதி கல்விக்கான தினமாக அனுசரிக்கப்படுகிறது.

7. தேசிய வாக்காளர் தினம் எந்நாளில் கடைபிடிக்கப்படுகிறது?

**விடை:** ஜனவரி 25

**விளக்கம்:**

- தேசிய வாக்காளர் தினம் - ஜனவரி 25
    - ஜனநாயக தேர்தல் முறைகளில் பொதுமக்களின் பங்களிப்பை அதிகப்படுத்துவதற்காக இந்திய தேர்தல் ஆணையம் தனது நிறுவன நாளான ஜனவரி 25ம் தேதியை தேசிய வாக்காளர் தினமாக கடைபிடிக்கிறது.
    - 2011ம் ஆண்டு முதல் தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இது 9வது தேசிய வாக்காளர் தினமாக கொண்டாடப்பட்டது.
    - 2019ம் மையக் கருத்து: எந்தவொரு வாக்காளரும் விடுபட்டுவிடக் கூடாது

8. சர்வதேச சுங்க தினம் எந்தநாளில் கடைபிடிக்கப்படுகிறது?

**விடை:** ஜனவரி 26

**விளக்கம்:**

- சர்வதேச சுங்க தினம் (International Customs Day)– ஜனவரி 26
    - நேர்மையாகவும், துணிச்சலாகவும்செயல்படும் சுங்க அதிகாரிகளை நினைவு கூறுவதற்காக, உலக சுங்க அமைப்பின் முதல் கூட்டமானது ஜனவரி 26 1953-ல் நடைபெற்றதை நினைவுப்படுத்துவதற்காகவும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26ல் சர்வதேச சுங்க தினம் கடைபிடிக்கப்படுகிறது.

9. சர்வதேச இனப்படுகொலை நினைவு தினம் எந்த நாளில் அனுசரிக்கப்படுகிறது?

**விடை:** ஜனவரி 27

**விளக்கம்:**

- சர்வதேச இனப்படுகொலை நினைவு தினம் - ஜனவரி 27 (International Holocaust Remembrance Day)
    - இரண்டாம் உலகப் போரின் போது ஏற்பட்ட இனப் படுகொலையை நினைவுகூறுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 27ம் நாள் உலகம் முழுவதும் சர்வதேச இனப்படுகொலை நினைவு தினமாக அனுசரிக்கப்படுகிறது.
    - 2005ம் ஆண்டு ஐக்கியநாடுகள் பொதுசபை தீர்மானத்தின் மூலம் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

# புத்தகங்கள்

1. “We are displaced: My Journey and Stories from Refugee Girls around the World” என்ற நூலின் ஆசிரியர் யார்?

**விடை:** மலாலா யூசப்சையி

**விளக்கம்:**

1. அமைதிக்கான நோபல் பரிசு வென்றவரும், பாகிஸ்தானிய போராளியுமான மலாலா யூசப்சையி, “We are displaced: My Journey and Stories from Refugee Girls around the World” என்ற நூலை எழுதி உள்ளார். இதில், உலகப் பயணங்களின்போதும், அகதிகள் முகாமுக்கு சென்றபோதும் தனக்கு ஏற்பட்ட

அனுபவங்களை மலாலா விவரித்துள்ளார். மேலும், மலாலா தனது சொந்தக்கதையை மட்டுமல்லாமல், தனது பயணங்களில் தான் சந்தித்த சில அசாத்திய பெண்களின் கதைகள் குறித்தும் இதில் குறிப்பிட்டுள்ளார்.


**Useful Links**

Recent Exam Notifications : https://weshineacademy.com/updated-exam-notification/

Daily Current Affairs : http://weshineacademy.com/tnpsc-current-affairs/

Recent Update on Telegram : https://t.me/weshinedailyupdate

Useful YouTube Video : https://www.youtube.com/user/weshineacademy

Apply BSF Constable: https://weshineacademy.com/bsf-constable-tradesmen-recruitment-notification-2019/